விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 24 வெள்ளிக்கிழமை (09.11.2012) பக்கங்கள் 20 ஓசை – 040

விஷானி நகை மாளிகை

மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு




இல. 187, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
0212219510 (C/1675)













# நாடாளுமன்றில் 'பட்ஜட்' ஜனாதிபதி சமர்ப்பித்தார்



(கொழும்பு)

அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை நிதி திட்டமிடல் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பித்தார். இது இலங்கையின் 66 ஆவது வரவு - செலவுத் திட்டமாகும். இப்புதிய வரவு - செலவுத் திட்டத்தின் படி,

2013 ஆம் ஆண்டில் 2520 பில்லியன் ரூபா செலவு செய்ய உத்தேசித்துள்ளது.

மொத்த வருமானம் 1280 பில்லியன் ரூபாவாகும். 2013 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டக் குறைப்பு 1240 பில்லியன் ரூபாவாக மதிப்பிடப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டுக்கான மொத்த கடன்படுகை 12.6 வீத அதிகரிப்பாகும்.

மேலும் குறித்த சில அமைச்சுக்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவையாவன,

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி - 289.5 பில்லியன், உள்ளூராட்சி மாகாண சபைகள் - 132.8 பில்லியன், துறைமுகம் மற்றும் பெருந்தெருக்கள் - 131.6 பில்லியன், பொது நிர்வாகமும் உள்நாட்டலுவல் - 127.9 பில்லியன், சுகாதாரம் - 93.5 பில்லியன், பெற்றோலிய கைத்தொழில் - 132 மில்லியன், பொது முகாமைத்துவ சீர்திருத்தங்கள் - 172 மில்லியன்,

19 ஆம் பக்கம் பார்க்க

- ☆ வெளிநாட்டு மதுபானங்களுக்கு 25% வரி அதிகரிப்பு
- ☆ முதியவர்களுக்கு மாதாந்தம் 5000 ரூபா நன்கொடை
- ☆ அரச ஊழியர்களுக்கு 1500 ரூபா மேலதிக கொடுப்பனவு
- ☆ பாதுகாப்புக்கு அதிக நிதி
- ☆ கல்வித் துறைக்கு ஊக்குவிப்பு
- ☆ விவசாயக் கடன்கள் இரத்து

## 'பட்ஜட்' ஒரே பார்வையில்

(கொழும்பு)

வரவு - செலவுத் திட்டத்தின் வரப்பிரசாதங்கள் அனைத்தையும் ஒரே பார்வையில் தொகுத்துத் தருகின்றோம். அதன் விபரம் வருமாறு,

• அரச ஊழியர்களுக்கான மேலதிக கொடுப்பனவு 1500 ரூபாவாக அதிகரிப்பு

• நிரந்தர வருமானமில்லாத 65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 5000 ரூபா

• வறிய பிரதேச மாணவர்களுக்காக சத்துணவும் சப்பாத்தும் வழங்கப்படும். நாடளாவிய ரீதியில் மாணவர்களுக்கு அரையாண்டுக்கு ஒரு தடவை சீருடை.

• வறட்சியினால் சிரமங்களை எதிர்நோக்கியுள்ள விவசாயிகள் வங்கிகளில் பெற்றுக்கொண்ட கடன்கள் பெரும்போகம் வரை நீக்கம். வட்டி முற்றாக நீக்கம்.

• பாதுகாப்பு பிரிவினருக்காக 3 வருடங்கள் செல்லுபடியாகும் வகையில் நிவாரண வீட்டுக் கடன் வசதி. அதற்கென 2013 வரவு - செலவு திட்டத்தில் 1000

19 ஆம் பக்கம் பார்க்க

## வறிய மக்களுக்கு விமோசனம் இல்லை

### சாடுகிறது ஐ.தே.கட்சி

(கொழும்பு)

ஜனாதிபதியால் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்துக்கான வாக்கெடுப்பின் போது வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களிக்கப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான நிவாரணங்களோ அல்லது மானிய உதவிகளோ இந்த வரவு - செலவுத் திட்டத்தில் இல்லை என்பதால் தாம் இதற்கு எதிராக் வாக்களிக்க இருப்பதாக ஐ.தே. கட்சி நேற்று அறிவித்துள்ளது.

வெளிநாட்டு வங்கிகளில் உள்ள நிதிகளை வேறு கணக்குகளுக்கு மாற்ற அனுமதியளித்துள்ள, பந்தயக்காரர்களின் வரிகளை குறைத்துள்ள இந்த வரவு - செலவுத் திட்டம், நாட்டின் பெரும் பணக்காரர்களுக்கானது எனவும் இது பரந்துபட்ட மக்களுக்கு எந்தவொரு நிவாரணத்தையும் கொடுக்கவில்லை எனவும் ஐக்கிய தேசியக் கட்சி கூறுகின்றது.

மக்கள் தொகையில் 99 சதவீதமானோரை இந்த வரவு - செலவுத் திட்டம் அந்தரத்தில்

19 ஆம் பக்கம் பார்க்க

## விஜயகலா எம்.பி.க்கு பிடியாணை

(யாழ்ப்பாணம்)

கொலை மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்பாக தொடரப்பட்ட வழக்கில் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரனுக்கு நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்ட சுப்பிரமணியம் செல்வராசா என்பவருக்கு கொலை மிரட்டல் விடுத்ததாகவும் காரைநகர் மருதப்புரம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் முருகன் பரமேஸ்வரன் மற்றும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்ட பு.ஜெயதீபன் ஆகியோருக்கு அச்சுறுத்தல் விடுத்ததாக குறித்த நாடாளுமன்ற உறுப்பினருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு விசாரணையின் 5 ஆவது வழக்கு தவணை, கடந்த 30 ஆம் திகதி நடை

19 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் தேர்தல் நடக்கும்

(கொழும்பு)

வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் திட்டமிட்டபடி அடுத்த ஆண்டு நடத்தப்படும் என்று ஜனாதிபதி நேற்று அறிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2013 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து உரையாற்றும் போதே இதனை அவர் குறிப்பிட்டுள்ளார். வடக்கில் ஜனநாயகத்தை பலப்படுத்தும்

19 ஆம் பக்கம் பார்க்க

## பொருளாதாரம் ஏறுமுகம் மத்திய வங்கி அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரம் 7.5 சதவீதம் வளர்ச்சியடையும் என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

2013 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க முன் 12.30 மணியளவில், இலங்கையின் பொருளாதாரம் 2013 இல் 7.5 சதவீத வளர்ச்சி அடையும் என இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இறைவரி மற்றும் நாணயக் கொள்கைகள் பொருத்தமானதாக மாற்றி அமைக்கப்படுவதோடு யூரோ வலயத்தில் பொருளாதார நடவடிக்கைகளில் காணப்படும்

19 ஆம் பக்கம் பார்க்க

ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் கிளிநொச்சிக்கிளையின்



மாபெரும் வேலை வாய்ப்பு

துடிப்புமிக்க இளைஞர் யுவதிகளே உங்களிற்கு
ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் தரும் ஓர் அரிய சந்தர்ப்பம்

காப்புறுதி ஆலோசகர் பதவி


18 வயதிற்கு மேற்பட்ட க.பொ.த. சாதாரண தரத்தில் 06 பாடங்களிற்கு மேல் (கணிதம், தமிழ் உட்பட) சித்தி பெற்ற அனைவரும் விண்ணப்பிக்கலாம்.

அரச, தனியார் துறைகளிலிருந்து ஓய்வுபெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முகவரி–
முகாமையாளர், ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் ஏ9 வீதி, கிளிநொச்சி.

விண்ணப்ப முடிவுத்திகதி:- 30.11.2012

# அமைதியான வாழ்வுக்கு குந்தகம் ஏற்படுத்தும் சக்திகள் மேல் விழிப்போடு இருக்கவும்



வேலணைப் பிரதேசத்தின் அபிவிருத்திக்கும் அமைதிக்கும் இடையூறாக இடம்பெற்று வரும சட்டவிரோத நடவடிக்கைகள் தடுக்கப்பட வேண்டும் என வேலணைப் பிரதேச சபையின் தவிசாளரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வேலணைப் பிரதேச அமைப்பாளருமான சி.சிவராசா (போல்) கோரிக்கை விடுததுள்ளார்.

அப் பிரதேசத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிராத வெளியூரவர்களால் மேற்கொள்ளப்படும் முறைகேடான நடவடிக்கைகளைக் கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இன்று முன் எப்போதும் இல்லாத அபிவிருத்தியை வேலணைப் பிரதேசம் கண்டு வருகிறது. மக்களின் அடிப்படைத் தேவைகளான குடிநீர், மின்சாரம், வீதி அபிவிருத்தி என்பன துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், கடற்றொழிலாளர்களுக்கு வசதியாக புதிய சந்தைகள் நிர்மானித்தல் மற்றும் போக்குவரத்து வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு துரித அபிவிருத்தியை வேலணைப் பிரதேசம் கண்டு வருகின்றபோது மக்களின இயல்பு வாழ்வைக் குழப்பும் வகையிலான செயற்பாடுகளும் ஆங்காங்கே இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக கட்டாக்காலிகளாக உள்ள கால்நடைகள் திருட்டு, சட்டவிரோத மண் அகழ்வு போன்ற நடவடிக்கைகளில் எமது பிரதேசத்தைச் சாராத வெளியூரவர்கள் ஈடுபடுவது இப்போது தெரியவந்துள்ளது.

எமது மக்களின் அமைதியான வாழ்வுக்குக் குந்தகம் விளைவிக்கும் இவ்வாறான செயற்பாடுகள் உடன் நிறுத்தப்பட வேண்டும். அண்மையில் சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபட்ட இரு குழுக்களுக்கிடையில் மோதல்கள் இடம்பெற்றுள்ளன. இவ்வாறான சம்பவங்கள் இனி மேலும் தொடராது சம்பந்தப்பட்ட தரப்பினர் காத்திரமான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளவேண்டும் என்பதையும் நாம் வலியுறுத்த விரும்புகின்றோம்.

எமது கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலின் கீழ் எமது பிரதேச மக்களுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் எமது மக்களின் அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கும் சில தீய சக்திகளின் முயற்சிகளைத் தடுக்க மக்கள் விழிப்புடன் செயற்பட முன்வருமாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெண் பயணியிடம் 3 பவுண் நகை திருட்டு

(யாழ்ப்பாணம்)


யாழ். கச்சேரி மினிபஸ்சில் பயணம் செய்த பெண் பயணி ஒருவரிடம் இருந்து மூன்று பவுண் நகை மற்றும் 40 ஆயிரம் ரூபா ரொக்கப்பணம் என்பன திருடப்பட்டுள்ளதாக நேற்று யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் மண்டைதீவைச் சேர்ந்த பெண் பயணி ஒருவர் வைத்தியசாலை வீதியில் உள்ள இலங்கை வங்கியின் மேலதரக்கிளைக்குச் செல்வதற்காகத் தனது கைக்குழந்தை சகிதம் குறித்த நகை மற்றும் பணத்தை எடுத்துக்கொண்டு யாழ். கச்ரேி மினிபஸ்சில் பயணித்திருக்கிறார். அந்த நேரம் மினிபஸ்ஸில் பயணிகள் அதிகமாக இருந்திருக்கின்றனர்.

இந்தச் சமயமே அந்தப் பெண்ணிடம் இந்த நகை மற்றும் பணம் காணாமல் போயிருக்கிறது. குறித்த மினிபஸ்ஸின் நடத்துனரே அந்த நகையையும் பணத்தையும் எடுத்திருப்பதாக அந்தப் பெண் யாழ். பொலிஸாரிடம் தெரிவித்து முறையிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து குறித்த யாழ். கச்சேரி மினிபஸ் நடத்துனர் யாழ். பொலிஸ் நிலையத்தில் பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டதாகவும் தெரிய வருகின்றது. (பா)

## மின்கம்பங்கள் புனரமைப்பு



நெடுந்தீவில் வீசிய நிலம் புயலினால் மின்கம்பங்கள் சரிந்து நெடுந்தீவு மேற்கிற்கான மின்சாரம் பாதிக்கப்பட்ட நிலையில் இணைப்புகள் தடைப்பட்டு இருந்தது. இவ்விடயமாக நெடுந்தீவு பிரதேச சபை தவிசாளர் தானியேல் றெக்சியன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்கு கொண்டு வந்ததையடுத்து புதிய கம்கங்கள் துரித கதியில் மறுசீரமைக்கப்பட்டு மின்சாரம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இதற்காக அமைச்சருக்கும் பிரதேச சபை தவிசாளருக்கும் நெடுந்தீவு மேற்கு மக்கள் நன்றியைத் தெரிவித்துள்ளனர்.

## இலகு வேலைத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

வேலணை உதவி அரச அதிபர் பிரிவில் மண்டைதீவுக் கிராமத்தில் கடந்த மாதம் முதல் இலகு வேலைத்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் மண்டைதீவுக் கிராமத்தில் பொது இடங்களில் இந்த இலகு வேலை ஒரு மாதத்தில் பத்து நாட்கள் நடைபெறவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் இலகு வேலைக்குத் தெரிவுசெய்யப்படும் குடும்பங்களில் ஒருவர் அந்த வேலையைப் பூர்த்தி செய்யுமிடத்து அந்தக் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விநியோகிக்கப்படவுள்ளது.

இந்த நடவடிக்கையை அந்தந்தப் பகுதி கிராம சேவகர்கள் நெறிப்படுத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## ஒருநாள் வேலைத்திட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவில் போர் மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் தாய் தந்தையரை இழந்த சிறுவர்களுக்கான ஒருநாள் வேலைத்திட்டம் இன்று காலை 8.30 மணிமுதல் 4.30 மணிவரை புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்தில் இடமபெறவுள்ளது.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சும் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் இந்நிகழ்வில் 6 முதல் 13 வயதை உடைய 150 பிள்ளைகளுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளது.

இதைவிட சிறுவர் மகிழ்வூட்டல், சிறுவர் விழிப்புணர்வு என்பனவும் இடம்பெறவுள்ளதாக புதுக்குடியிருப்புப் பிரதே செயலகம் அறிவித்துள்ளது. (04)

## சைவத்திருமுறை விழா

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை இந்துசமய அபிவிருத்திச் சங்க சைவத் திருமுறை விழாவும் சைவ சமயச் செயற்பாட்டுப் பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ம.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆனைக்கோட்டை மூத்தநைனார் ஆல்ய மண்டபத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் காலை 9.00 மணிக்கு மூத்தநைனார் ஆலயத்திலிருந்து திருமுறைச் சுவடிகளும் சைவ சமயக் குரவர்களின் திருவுருவப் படமும் வீதிவலம் வந்து விழா மண்டபத்திதை அடையவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை மூத்தநைனார் தேவஸ்தான சிவஸ்ரீ க.திருஸ்னேஸ்வரக் குருக்கள், வாழ்த்துரையை இளைப்பாறிய உப அதிபர் க.கதிரேஸ் ஆகியோர் வழங்கவுள்ளனர். தொடர்ந்து சிறப்புரையை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன், சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி மாலினி கிருஷ்ணானந்தன் ஆகியோர் வழங்கவுள்ளனர். வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்படும். (104)

## தடுப்பணை திருத்தம்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பனங்காணி முனை உவர் நீர்த்தடுப்பணையின் சேதமாக்கப்பட்டுள்ள கதவைச் சீர் செய்வதற்கு யாழ். மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்பொருட்டு தேவையான உதிரிப்பாகங்களுடன் யாழ். மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் நெடுந்தீவிற்குச் சென்று அங்கு தங்கியிருந்து சேதமாக்கப்பட்ட கதவைச் சீர் செய்ய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

பனங்காணி முனையில் அமைந்துள்ள இந்த உவர் நீர்த் தடுப்பணையில் மூன்று இடங்களில் கதவுகள் உள்ளன. இவற்றில் ஒன்றையே விசமிகள் சேதமாக்கியிருக்கின்றனர். இதனால் அங்கு ஒரு பகுதி நீர் கடலில் கலந்துள்ளது என்பது தெரிந்ததே.(பா)

## நகைகள் ஏலத்தில்

செலான் வங்கி நெல்லியடிக் கிளையில் நீண்டகாலமாக அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத தங்க நகைகள் இன்று ஏலத்தில் விடப்படவுள்ளதாக அறி விக்கப்பட்டுளளது. இக்கிளையில் 25.10.2011 வரையான 3 மாத தவணைக்கால அடிப்படையிலும் மற்றும் 26.07.2011 வரையான 6 மாத தவணைக்கால அடிப்படையிலும் அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத நகைகள் ஏல விற்பனையில் விடப்படவுள்ளதாக வங்கி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (18)

## கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்க யாழ். மாவட்டப் பிராந்திய இணைப்பாளர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நெல்லியடி இங்ஸ்டன் தனியார் கல்வி நலைய மண்டபத்தில நடைபெறவுள்ளது.

இதில் பொதுக்கூட்டம் பற்றிய ஆலோசணைகள் நடத்தப்படவுள்ளதாகவும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சகல பிராந்திய இணைப்பாளர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (11)



அரச இலக்கிய விருது (2012) வழங்கும் நிகழ்வு செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி வியாங்கொட பத்தல கெதரசியனே தேசிய கல்வியற் கல்லூரியில் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்ட வடபகுதிப் பிரதேச செயலகப் பிரிவு கலைஞர்களைக் காணாலாம். (27)


## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 01 . 03 . 1933



விண்ணில் 09 . 11 . 2011

அமரர் றோமான் இராசநாயகம்

அன்புக்கும் பண்புக்கும் பாசத்திற்கும் உறைவிடமாய் இமைப் பொழுதில் மீளாய்த்துயில் கொண்ட எங்கள் அன்புத் தந்தையே நீங்கள், இன்றெம்மைப் பிரிந்து ஓராண்டு கடந்தாலும் உங்கள் நினைவுகள் என்றும் எங்கள் நெஞ்சங்களில் அணையாத தீபமாய் ஒளிர்ந்துகொண்டிருக்கும்

உரும்பிராய் கிழக்கு.

உங்கள் ஆன்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(C/1747)

# மாணவர்கள் வீதி நடைமுறைகளை முறையாகப் பின்பற்ற வேண்டும்

– கோப்பாய் போக்குவரத்து பொலிஸ் பிரிவு அதிகாரி

(யாழ்.நிருபர்)

வீதிப் போக்குவரத்து விதிகளை மாணவர்கள் அறிந்து கடைப்பிடிப்பதன் மூலமும் பெரியவர்களுக்கு அவற்றை அறிவுறுத்தி அவர்களைப் பின்பற்றச் செய்வதன் மூலமுமே வீதிவிபத்துக்களைத் தவிர்க்க முடியும் என கோப்பாய் போக்குவரத்துப் பொலிஸ் பிரிவு அதிகாரி என்.பீரிஸ் தெரிவித்தார்.

கோண்டாவில் இந்து மகா வித்தியாலத்தில் நடைபெற்ற மாணவர்களுக்கான போக்குவரத்து விதிகள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மாணவர்கள் போக்குவரத்து விதிகளை அறிந்து கட்டாயம் அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும். வீதியில் வலது பக்கமாக நடந்து வரவேண்டுமென்பதைப் பல மாணவர்கள் அறியாதவர்களாக இருக்கின்றார்கள். வலது பக்கமாக நடந்து வரும்போது தம்பி, தங்கைகளை இடது கரையோரமாக கூட்டி வரவேண்டும். பிரதான வீதிகளில் போடப்பட்டுள்ள வெள்ளைக் கோட்டிற்கு வெளியால் நடந்து வர வேண்டும்.

துவிச்சக்கர வண்டிகளில் வரும் மாணவர்கள் வீதியின் இடது பக்க ஓரமாக ஒருவர் பின் ஒருவராக தமது துவிச்சக்கர வண்டிகளைச் செலுத்த வேண்டும். எக்காரணம் கொண்டும் துவிச்சக்கர வண்டிகளை சமாந்தரமாகச் செலுத்தக் கூடாது. சமாந்தரமாகச் சைக்கிள் சவாரி செய்வோர் பொலிஸாரின் தண்டனைக்கு ஆளாக வேண்டி வரும்.

யாழ்.குடா நாட்டில் பெரும்பாலான மாணவர்களின் சைக்கிள்களுக்கு பிறேக் கிடையாது. பிறேக் இல்லாத சைக்கிள்களே அதிகளவிலான விபத்துக்களுக்கு காரணமாகும். சைக்கிளை எடுக்கும் போது பிறேக் சரியாக இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

போக்குவரத்து கண்காணிப்பில் ஈடுபடும் மாணவர்களின் கட்டளைகளுக்குப் பணிந்து அவர்கள் சொற்படி ஏனையவர்கள் நடந்து கொள்ள வேண்டும். இக்கடமைகளில் ஈடுபடும் மாணவர்கள் பொறுப்பின்றி அல்லது அதிகார தோரணையில் நடந்து கொள்ளக் கூடாது. பொலிஸார் செய்யும் வேலையை நாங்கள் செய்கின்றோம் என்ற பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும்.

வீதிப் போக்குவரத்து விதிகளைத் தாமும் பின்பற்றி பெரியவர்களையும் கடைப்பிடிக்கச் செய்து விபத்துக்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு மாணவர்கள் உதவ வேண்டும் என்றார. (10)



நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் உத்தியோகத்தராக கடமையாற்றி இளைப்பாறிச் செல்லும் சுகுமாரனுக்கான பிரியாவிடை நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றபோது, அவரது பாரியார் மற்றும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கங்கார உள்ளிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் நிற்பதைக்காணலாம். (18)

## விண்ணப்பங்கோரல்

எதிர்வரும் மார்கழி மாதம் நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதர பொதுப் பரீட்சையின் போது பரீட்சைநிலைய இணைப்பாளர், உதவி இணைப்பாளர், மேற்பார்வையாளர், உதவி மேற்பார்வையாளர் ஆகிய பதவிகளில் கடமையாற்றுவதற்கு தகுதியானவர்களிடமிருந்து வலயக்கல்வி அலுவலகங்களினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி பதவிகளுக்கு, விண்ணப்பப் படிவத்தில் கோரபபட்டுள்ள தகுதிகளினைக் கொண்டுள்ள அதிபர்கள், பிரதி அதிபர்கள், சிரேஸ்ட ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டிருப்பதனால் இதற்கு விண்ணப்பிக்க விரும்பும் தகுதியானவர்கள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து அனுப்பி வைக்குமாறும் அதில் கோரப்பட்டுள்ளது. (03)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவி

(மானிப்பாய்)

மானிப்பாய் பரிஷ் லியோ கழகத்தின் விசேட செயற்திட்டம் நேற்று முன்தினம் முல்லைத்தீவு - ஆனந்தபுரப் பகுதியில் இடம் பெற்றது. யுத்தம் மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குறித்த பிரதேசத்தினைச் சேர்ந்த சுமார் 250 இற்கும் மேற்பட்ட குடும்பங்களிற்கான உதவிப்பொருட்கள் வழங்கப்பட்டன.

குழந்தைகளுக்கான பால்மா, உலர் உணவுப்பொருட்களான பிஸ்கட் மற்றும் இதர பொருட்கள், நுளம்பு வலைகள், குழந்தைகளிற்கான உடைகள் என்பனவும் வழங்கப்பட்டன.

இவ் உதவிப்பொருட்கள் மானிப்பாய் பிரதேச பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள் மற்றும் லியோ உறுப்பினர்கள் ஆகியோரினால் மேற்படி செயற்திட்டத்திற்காக வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு ஆனந்தபுரம் அ.த.க. பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களிற்கான உளவள மேம்பாடு, கற்பித்தல் போன்ற செயற்திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வில் லியோ கழக உறுப்பினர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் பங்குபற்றினர்.

## விஞ்ஞான பாடத்திற்கு முன்னோடிப் பரீட்சை

(அச்சுவேலி)

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்படவுள்ள மாகாணமட்டப் பொதுப்பரீட்சையின் போது விஞ்ஞான பாடத்தின் அடைவு மட்டத்தை உயர்த்துவதற்காக யாழ்ப்பாண வலய பாடசாலைகளில் தரம் 09 இல் கல்வி கற்று வரும் மாணவர்களுக்கு யாழ். வலய விஞ்ஞான கல்விப் பிரிவினரால் விஞ்ஞான பாடத்திற்கென விசேட முன்னோடிப் பரீட்சை நடாத்தப்படவுள்ளது.

மேற்படி இப்பரீட்சையானது எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை காலை 09.00 மணி தொடக்கம் 11.00 மணி வரை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் பரீட்சை வினாத்தாள்களை பரீட்சை நடைபெறும் தினத்தன்று காலை வலயக் கல்வி அலுவலகத்தின் கல்வி அபிவிருத்திப் பிரிவில் பெற்றுக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.


இதேவேளை பரீட்சையின் பின்னர் வினாத்தாள்களை மதிப்பீடு செய்து மாணவர்களின் புள்ளிகளை ஏற்கனவே பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள புள்ளிப்பகுப்பாய்வு படிவத்தில் பதிந்து, விஞ்ஞானப் பிரிவின் உதவிக்கல்விப் பணிப்பாளருக்கு எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (03)

## சொற்பொழிவு

(தொண்டைமானாறு)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆலய சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையினால் நடத்தப்படும் ஆன்மீக நிகழ்வில் இன்று காலை 10.30 மணிக்கு தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் ஆறு. திருமுருகன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

## கடையின் விளம்பரப்பலகை மின் ஒழுக்கால் எரிந்து நாசம்



(கரணவாய்)

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வீதியில் அமைந்துள்ள தனியார் வியாபார நிலையத்தின் விளம்பரப்பலகை மின்ஒழுக்கினால் முழுமையாக எரிந்து நாசமாகியுள்ளது.

நேற்று முன்தினம் புதன்கிழமை அதிகாலை 4 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ள நிலையில், நெல்லியடி வர்த்தக சங்கத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கடும் பிரயத்தனத்தின் மத்தியில் தண்ணீர் ஊற்றி அணைத்துள்ளதாகவும், எனினும் அதற்குள் விளம்பரப்பலகை எரிந்து நாசமாகியுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது நெல்லியடிப் பகுதியில் மின்ஒழுக்குகள் அடிக்கடி நடைபெற்று வருவது கவனிக்கப்படவேண்டியது எனத் தெரிவிக்கும் வர்த்தகர்கள், இதனால் பெரியளவிலான பாதிப்புக்களை தாம் எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

இதேவேளை நெல்லியடிப் பகுதிக்கென தீயணைக்கும் கருவிகள் இல்லை என வர்த்தக சங்கத் தலைவர் தெரிவிக்கின்ற நிலையில், யாழ்ப்பாணத்திலிருந்து தீயணைக்கும் படை நெல்லியடிக்கு வருவதற்கு முன் தீ பற்றியது முழுவதும் எரிந்து விடும் எனவும் கரவெட்டிப் பிரதேசத்திற்கு தீயணைக்கும் கருவிகள் தேவையாக உள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (18)

## அட்டவணையில் மாற்றம்

(அச்சுவேலி)

யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்தினால் இம்மாத பிற்பகுதியில் நடாத்த திட்டமிடப்பட்டிருந்த மூன்றாம் தவணைப் பரீட்சை நேரசூசியில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக வலயக்கல்வி அலுவலகத்தினால் சகல பாடசாலைகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய திருத்தியமைக்கப்பட்ட நேரசூசியின்படி மூன்றாம் தவணைப் பரீட்சைகள் எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் மார்கழி மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறவுள்ள்து. (03)

## மின் தடை அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்புப் பணிகளுக்காகவும், உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்த வேண்டியிருப்பதாலும் மத்திய மின்நிலையத்தில் அவசர திருத்த வேலைகள் செய்யவேண்டியிருப்பதாலும் -

இன்று வெள்ளிக்கிழமை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும் பளை நகரம், கொடிகாமம் சந்தியிலிருந்து வரணி வரையான பிரதேசம் ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் பிரதேசங்களிலுள்ள மின் விநியோக மார்க்கங்களுக்கு இடையூறாகவுள்ள மரங்கள், மரக்கொப்புக்கள், தென்னை ஓலைகள், பனை ஓலைகள் என்பவற்றை வெட்டியகற்றி தடையற்ற மின்சார விநியோகத்தைப் பெற்றுக் கொள்ள மின்சார சபைக்கு உதவுமாறு பொது மக்களை மின்சார சபையினர் வேண்டிக் கொள்கின்றனர்.

தன்னம்பிக்கை, தெளிவு, துணிச்சல் இந்த மூன்றும் தான் ஒருவனை எப்போதும் காப்பாற்றி வழிநடத்திச் செல்லும். - கன்ஃப்யூசியஸ்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## அந்தக் குற்றவாளி யார்?

குற்றவாளிகளான டக்ளஸ், கே.பி. ஆகியோரை தமிழர்களின் தலைவர்களாக்க மகிந்த தலைமையிலான அரசு முயற்சிப்பது ஏன் என்று ஒரு வீராவேசக் கேள்வியை நாடாளுமன்றத்தில் எழுப்பியிருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நியமனப் பாராளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன்.

2010 ஆம் ஆண்டுத் தேர்தலில் யாழ்ப்பாண மக்களின் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்ற ஒருவரை மக்களால் தெரிவுசெய்யப்படாத ஒருவர் எப்படியெல்லாம் வாய்க்குவந்தபடி பேசமுடிகிறது என்ற விநோதத்தை ஒதுக்கி விட்டு, சுமந்திரன் அவர்களின் வீரவசனத்திலுள்ள அபத்தங்களை ஒவ்வொன்றாகப் பார்க்கலாம்.

முதலில், சர்வதேசம் விசாரணை செய்யவேண்டிய குற்றங்களைப் புரிந்தவர் என்று இவர்களே சொல்லும் மகிந்த ராஜபக்ஷ அவர்களிடம்தான் இவரது முறைப்பாட்டைச் சொல்கிறார் என்பது இவருக்கு உறைக்கவில்லை. உறைக்காது ஏனென்றால், மகிந்த தனது அமைச்சரவையில் டக்ளஸ் தேவானந்தாவை வைத்திருப்பதுதான் இவர்களுக்குப் பிரச்சினை.

மற்றபடி, மகிந்தவுக்கெதிரான இவர்களது வீரவசனங்களெல்லாம் அவருக்குத் தெற்கில் இனரீதியான வாக்குகளை வாங்கித் தரவும், தமிழர்களை இனரீதியாகப் பொங்கவைத்து தங்களுக்கான வாக்குகளை அள்ளிக்கொள்ளவும்தான். ஆதலால்தான் குற்றவாளிகளை வைத்திராதீர்கள் என்று மகிந்தவுக்கு இவர்கள் நைச்சியமாக எடுத்துச் சொல்கிறார்களாம்!

அடுத்து இவர்கள் தமிழ் மக்களிடம் காண்பித்துக் கொண்டிருக்கும் மற்றொரு அபத்தம், தாங்கள் ஆயுதங்களைத் தூக்காமல் அகிம்சைப் போராட்டங்களையே செய்தவர்கள்; அதனால் தாங்கள் தூய்மையானவர்கள் என்பதாகவும், ஆயுதமேந்திப் போராடியவர்கள் தூய்மையில்லாதவர்கள்; தமிழ் மக்களால் வெறுக்கப்பட வேண்டியவர்கள் என்றும் திரும்பத் திரும்பச் சொல்லிவருகிறார்கள்.

உண்மையில் இளைஞர்களை ஆயுதமேந்துவதற்குத் தூண்டிச் செயற்பட்டவர்கள் இவர்கள்தான் என்பதை வரலாற்றுமறதியில் மறைத்துவிடுவதற்கு அதுவொன்றும் பல நூற்றாண்டுகளுக்கு முந்து நடந்ததல்ல. எழுபதுகளின் வீரவசனங்களைக் கேட்டு கிறுகிறுத்தவர்கள் இப்போதும் நாற்பதுகளைக் கடந்து வாழ்ந்துகொண்டு தானிருக்கிறார்கள். அவர்களறிவார்கள், தமிழ் இளைஞர்களை இவர்கள் மூச்சுப்பிடித்து எதற்குத் தள்ளினார்கள் என்பதை. அப்போதுபிடித்து முள்ளிவாய்க்கால் வரை ஒரேமூச்சாய் தள்ளிக் கொண்டு தானே இருந்தார்கள்!

உண்மையில் பார்த்தால், ஆயுதப்போராட்டத்தில் இறங்கிய அத்தனை தமிழ் இளைஞர்களும், தமிழ் மக்களது விடுதலைக்காகத் தங்கள் உயிர்களைக் கொடையாக்கும் தியாக உணர்வோடுதான் இந்த அரசியலில் குதித்தார்கள். இந்த அகிம்சாவாதிகள் அரசியலுக்கு வந்ததோ பாராளுமன்றப் பதவிகளைக் குறிவைத்துத்தான் என்பதை இவர்களில் ஒருவராவது மனசாட்சியைத் தொட்டு மறுக்க முடியுமா?

இந்த லட்சணத்தில், உயிரைத் துச்சமெனப் போராடிய இளைஞர்களைக் கொச்சையாகவும் தங்களைத் தூய்மையானவர்களாகவும் இன்றைக்குக் கூச்சமின்றிக் கதையளக்கிறார்கள். அப்புக்காத்துப் படிப்புகள் வரை படித்து முடித்துவிட்டு, அதற்குப் பொசிப்பாகப் பாராளுமன்ற அதிகாரங்களையும் ருசிப்பதற்காக அரசியல் செய்ய வந்தவர்கள் இவர்கள். பாடசாலைப் படிப்பையே பாதியில் முறித்துக்கொண்டு, இவர்களது வீரவசனங்களால் நரம்புகள் முறுக்கேற்றப்பட்டு, மக்களைக் காப்பதற்காகச் சாகவும் தயாரென்று அரசியலுக்கு வந்த அன்றைய இளைஞர்களைப் பார்த்து இவர்கள் சொல்கிறார்கள் குற்றவாளிகள்; வன்முறையாளர்கள்; தீண்டத்தகாதவர்கள் என்று!

ஐந்தாம் வகுப்புத் தமிழ்ப்பாடப் புத்தகத்தில் 'அந்தப் பாவி யார்?' என்று ஒரு கதை இருந்தது. (இப்போது இருக்கிறதா தெரியவில்லை) இடி விழுந்த பிறகுதான் அந்தக் கதையில் பாவிகள் யார் என்று தெரியவருகிறது. தமிழ்ச் சமூகம் இதற்குமேலும் இடிவிழும் வரை காத்திருக்க வேண்டாம். - ஆசிரியர்

# ஒப்பந்தகாரரால் தாமதமடையும் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப்பணிகள் ஒப்பந்தகாரர்களின் அசமந்தப் போக்கினால் இழுபட்டுச் செல்வதாக மாவட்ட அரசாங்க அதிபர் ரூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்கான நிதியினை அரசாங்கம் உள்ளூராட்சி சபைகள் மற்றும் உரிய திணைக்களங்கள் ஊடாக ஒதுக்கியுள்ளது.

எனினும், அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்திருக்கும் ஒப்பந்தகாரர்களின் அசமந்தப் போக்குக் காரணமாக அபிவிருத்திப் பணிகள் பூர்த்தியடைவதில் நீண்ட இழுபறி காணப்படுகிறது. இதனால் கிளிநொச்சி பிரதேச மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

வீதி அபிவிருத்திக்காக சில இடங்களில் குழிகள் தோண்டப்பட்டுள்ள நிலையில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் அவற்றுக்குள் நீர் நிறைந்திருப்பதாகவும், இதனால் வீதிகளில் பயணிப்போர் பல்வேறு சிரமங்களுக்கு முகங் கொடுப் பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். பல்வேறு அபிவிருத்திப் பணிகள் ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

சில ஒப்பந்தகாரர்கள் உரிய காலத்தில் தமது திட்டங்களைப் பூர்த்தி செய்வதில்லை.

ஒப்பந்தகாரர்களின் செயற்பாடுகள் கண்காணிக்கப்படுவதுடன், பலருக்கு எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டிருப்பதாகவும் அரசாங்க அதிபர் மேலும் குறிப்பிட்டார்.

# பிரதேசசெயலரைத் தாக்கமுயற்சி கண்டித்து வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

வவுனியா பிரதேச செயலரைத் தாக்குமுற்பட்டவர் குறித்து முறைப்பாடு தெரிவிக்கப்பட்ட போதிலும், அவரை பொலிஸார் கைதுசெய்யாமையைக் கண்டித்து பிரதேச செயலக ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கடந்த செவ்வாய்க்கிழமை அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் ஒருவர், தனது தேவையொன்றை நிறைவு செய்து கொள்வதற்காக மூவருடன் பிரதேச செயலகத்திற்கு வருகை தந்து பிரதேச செயலாளருடனும் அங்கிருந்த ஊழியரொருவருடனும் தகாத வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டதுடன் தாக்கவும் முற்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, அங்கிருந்த ஊழியர்கள் அவரை வெளியேற வைத்ததுடன் வவுனியா பொலிஸிலும் முறைப்பாடு ஒன்றினைச் செய்திருந்தனர். எனினும், நேற்று வரை சம்பந்தப்பட்டவரைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தவில்லை எனத் தெரிவித்து பிரதேச செயலக ஊழியர்கள் மற்றும் கிராம சேவகர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனை அடுத்து ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற இடத்திற்கு வருகை தந்த வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பிரதேச செயலக ஊழியர்களுடன் கலந்துரையாடி சம்பந்தப்பட்டவரை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துவதாக தெரிவித்ததுடன் ஆர்ப்பாட்டத்தைக் கைவிடுமாறும் கேட்டுக் கொண்டார்.

எனினும் சம்பந்தப்பட்டவரைக் கைதுசெய்தாலே ஆர்ப்பாட்டம் கைவிடப்படுமென தெரிவிக்கப்பட்டது. எனினும் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சம்பவ இடத்திற்கு வருகைதந்து கலந்துரையாடியதுடன், சட்டத்தை கையிலெடுக்கும் நடவடிக்கையில் எவரும் ஈடுபடுதல் கூடாது எனத் தெரிவித்ததுடன் ஆர்ப்பாட்டக்காரர்கள் வழங்கிய மகஜரையும் பெற்றுக்கொண்டார். (160)

# விரிவுரையாளர் பிரச்சினை அரசு சாதகமான பதில்

(கொழும்பு)

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் கோரிக்கை தொடர்பில் அரசாங்கம் சாதகமான பதிலை வழங்கும் என்று உயர் கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஜயந்த நவரட்ண தெரிவித்துள்ளார். விரிவுரையாளர்களது பிரதான கோரிக்கையான தேசிய உற்பத்தியில் 6 சதவீதம் கல்விக்கு ஒதுக்குவது உள்ளிட்ட ஏனைய கோரிக்கைகளுக்கு அரசாங்கம் சாதகமான நிலைப்பாட்டுக்கு வரும் என்றும் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களது சம்மேளனத் தலைவர் நிர்மல் ரஞ்சித் தேவசிறி, தமது கோரிக்கைக்கு சாதகமான பதில் ஒரு போதும் கிடைக்காது என்று தெரிவித்துள்ள நிலையிலேயே, உயர் கல்வி அமைச்சின் செயலாளர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# கனடா தீ விபத்தில் சிக்கி இலங்கை தமிழ்ப் பெண் மரணம்

கனடாவின் ரொறன்ரோ ஸ்காபரோ நகரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தீ விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் காயமடைந்திருந்தனர். அவர்களில் ஒருவரான திருமதி சந்திரலீலா சிவபாதம்(வயது - 56) நேற்றையதினம் வைத்தியசாலையில் மரணமடைந்தார்.

சுமார் மூன்று வருடங்களிற்கு முன் இந்த ரொறன்ரோ நகரிலுள்ள வீட்டிற்கு குடிபுகுந்த குறித்த இளம்குடும்பத்தின் பெற்றோரான மேற்படி பெண்ணும் கணவரும் தமது மகள், மருமகள் மற்றும் தமது இரண்டு புத்திரர்களுடன் குறித்த வீட்டில் வசித்து வந்திருக்கின்றனர்.

இவரின் மகளிற்கு 22 மாதமேயான ஒரு பிள்ளையுண்டு அத்தோடு மகளும் அடுத்த குழந்தையை எதிர்பார்த்துக் காத்திருக்கும் ஒரு கர்ப்பிணித் தாயாவார்.

வீட்டு வாசலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனமே முதலில் தீப்பற்றி எரிந்து அதிலிருந்து தீ வீட்டிற்குப் பரவியிருக்கலாம் என்றே தீயணைப்புப் படையினரும் பொலிஸாரும் கருதுகின்றனர்.

நடுநிசி ஒரு மணியளவில் வீட்டில் தீ பரவியது. புகை எச்சரிக்கைக் கருவியின் சத்தத் தையடுத்து திருமதி சந்திரலீலா சிவபாதம் மற்றய வர்களையும் எழுப்பி தீயிலிருந்து தப்பிப் போக முயன்றுள்ளார்.

எனினும் இவர்களில் ஐவர் இத் தீவிபத்தினால் பாதிக்கப்பட்டனர். திருமதி சந்திரலீலாவினது கணவர் இன்னமும் ஆபத்தான நிலையிலேயே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். அதைவிட மூவர் அதிகளவு புகையை சுவாசித்தது உள்ளிட்ட காரணங்களிற்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# பரிசளிப்பு விழா

(யாழ். நிருபர்)

ஆனைக்கோட்டை இந்துசமய விருத்திச் சங்கம் நடத்தும் சைவத்திருமுறை விழாவும் சைவ சமய செயற்பாட்டு பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் ஆலய மண்டபத்தில் இளைப்பாறிய உதவிக்கல்விப் பணிப்பாளர் ஆ.வ.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் ஆசிரியரை க.கிருஷ்ணேஸ்வரக் குருக்கள், வாழ்த்துரை இளைப்பாறிய உப அதிபர் க.கதிரேசு ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன், சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் மாலினி கிருஷ்ணானந்தன் ஆகியோர் சிறப்புரை வழங்கவுள்ளனர். (10)

## ஜெயமோகன்

**கல்வி முழுமையை நோக்கிச் செல்வது. முழுமை என்பது முடிவின்மையில் எங்கோ இருக்கும் ஒரு புள்ளி. ஆகவே கல்விக்கு முடிவே இருக்காது. “ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்” என மரபு அதைச் சொல்கிறது. கடைசிக்கணம் வரை கல்வி நீடித்தாகவேண்டும். கல்விக்காலகட்டம் என ஒன்று இல்லை. கல்வியில் இருந்து வெளியேறும் புள்ளி என எதுவும் உலகியல் வாழ்க்கையில் இல்லை.**

# அணையாவிளக்கு

கல்விக்கும் பயிற்சிக்குமான வேறுபாடு என்ன? பயிற்சி என்பது எப்போதுமே ஏதேனும் ஒரு அம்சத்தில் மட்டுமே அடையப்பெறும் தேர்ச்சிதான். யானையை முக்காலியில் உட்கார வைக்கசர்க்கஸில் அளிக்கப்படுவது பயிற்சி. மனிதனை பதவிகளில் அமரச்செய்யவும் அதுதான் அளிக்கப்படுகிறது.

பயிற்சி என்பது திரும்பத்திரும்பச் செய்யப்படுவதன்மூலம் மனதுக்கோ உடலுக்கோ கைவரும் ஒரு பழக்கம். தட்டச்சுப்பயிற்சி என்கிறோம். வண்டிமாடு நுகத்திற்குப் பழகுவதைப் பயிற்சி என்கிறோம். நாம் நம் கல்விச்சாலைகளில் அளிப்பதும் இதுவே. கணிப்பொறியாளராகஆவதற்கான பயிற்சி. பொறியியலின் ஏதேனும் ஒருபகுதியில் பயிற்சி. மருத்துவப்பயிற்சி.

பயிற்சி ஒருபோதும் ஆளுமை உருவாக்கத்தில் பங்கெடுப்பதில்லை. ஒரு குறிப்பிட்ட பயிற்சியை அதிதீவிரமாக எடுக்கும்போது உண்மையில் ஆளுமையில் ஒரு கோணல்தான் உருவாகிறது. பிற எதுவுமே தெரியாத ஓர் அசட்டுப்பிறவியாக அது மனிதனை ஆக்கி விடுகிறது. இன்றைய நம் உயர் கல்வி பெற்ற இளைஞர்களில் பெரும்பகுதியினரைப் பார்த்தாலே இது தெரியும். ஓர் அடிப்படை ஆளுமைத் திறன்கூட இல்லாத அற்பர்கள் அல்லது அசடுகள் அவர்கள்.

கல்வி என்பது பயிற்சியில் இருந்து வேறுபடுவது ஒரு அடிப்படை இயல்பால்தான். கல்வி ஒருபோதும் குறைபட்டதாக இருக்கமுடியாது. கல்வி என்பது முழுமையானதாக, ஆளுமையை வளர்ப்பதாக மட்டுமே இருக்கமுடியும். நம்முடைய பல்லாயிரமாண்டுக்கால மரபு சொல்லும் வரையறை இதுவே. சான்றோனை உருவாக்குவதே கல்வி. திறமையுள்ளவனை, தேர்ச்சியுடையவனை உருவாக்குவதல்ல. எது ஒரு மனிதனை முழுமையானவனாக படிப்படியாக மாற்றுகிறதோ அதுவே கல்வி.

பயிற்சிக்கும் கல்விக்குமான அடுத்த வேறுபாடு இங்கேதான் வருகிறது. பயிற்சிக்கு ஓர் எல்லை உண்டு. கல்வி முழுமையை நோக்கிச் செல்வது. முழுமை என்பது முடிவின்மையில் எங்கோ இருக்கும் ஒரு புள்ளி. ஆகவே கல்விக்கு முடிவே இருக்காது. “ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்,” என மரபு அதைச் சொல்கிறது. கடைசிக்கணம் வரை கல்வி நீடித்தாகவேண்டும். கல்விக்காலகட்டம் என ஒன்று இல்லை. கல்வியில் இருந்து வெளியேறும் புள்ளி என எதுவும் உலகியல் வாழ்க்கையில் இல்லை.

இப்படிச் சொல்லலாம். பயிற்சி என்பது செல்பேசி கோபுரங்களை நட்டுவைக்கும் சிமெண்ட் மேடை போன்றது. உறுதியாக ஒருவனை அதில் நட்டு வைக்கிறது. கடைசி வரை அவன் அதுதான். பொறியாளர் பொறியாளர் மட்டுமே. வேறு எவனும் அல்ல. மருத்துவன் எந்நிலையிலும் மருத்துவன் மட்டுமே, நல்ல மனிதனாக ஆவான் என்பதற்குக்கூட ஆதாரமில்லை. ஆனால் கல்வி என்ப்து ராக்கெட்டின் ஏவுதளம் போல. அது அங்கிருந்து எம்பிப் பறப்பதற்கான ஒரு இடம். தன் மீதமர்ந்தவனை வான் நோக்கி ஏவும் மேடை அது.

கல்வி என்பது உறுதியான திட்டவட்டமான நிராகரிப்பு வழியாக அல்லது தாண்டிச்செல்லல் மூலமாக முன்னகர்கிறது. நான் ஒன்றை அறிந்துகொண்டதும் அதை ஏற்கிறேன் அல்லது நிராகரிக்கிறேன். ஏற்றுக்கொண்ட விஷயத்தை பற்றிக்கொண்டு மேலேறி இன்னும் நுட்பமான, இன்னும் தீவிரமான, இன்னும் விரிவான விஷயங்களைக் கற்க ஆரம்பிக்கிறேன். ஏற்றவற்றை கடந்துசெல்கிறேன்.


கல்வி என்பது நம்மை முன்னால் செலுத்திக்கொண்டே இருக்கக்கூடிய எலிவேட்டர் போன்றது. படிகளில் ஏறலாம். சும்மா நின்றாலும் அது மேலேதான் கொண்டுசென்று கொண்டிருக்கிறது. நம்முடைய கல்விக்கூடங்களில் கல்வி இல்லை, பயிற்சிதான் உள்ளது.ஆகவே தான் நம் இளைஞர்களால் எதையுமே அறிந்துகொள்ள முடியவில்லை. அவர்களால் மனப்பாடம் செய்ய, திருப்பிச் சொல்ல மட்டுமே முடியும். மேற்கோள் காட்டமுடியும். எல்லா தரப்பையும் கருத்தில் கொண்டு சாராம்சத்தை உள்வாங்கி தன்னுடைய முந்தைய அறிதல்களுடன் இணைத்துப் பரிசீலித்து ஓர் ஒட்டுமொத்த அறிதலை உருவாக்கிக் கொள்ள அவர்களால் முடியாது. மிக உயர்ந்த கல்விகற்று மிக முக்கியமான வேலைகளைச் செய்யும் இளைஞர்களிடம் கூட இந்த ஆற்றல் இருப்பதில்லை. ஆகவேதான் நாம் அளிப்பது கல்வியை அல்ல பயிற்சியை மட்டுமே என நான் சொல்கிறேன்.

நம் இளைஞர்கள் இணையத்தில் எழுதுவதை அவ்வப் போது பார்ப்பேன். அவர்கள் உலகமெங்கும் இருக்கிறார்கள். ஆனால் உலகத்தை அவர்கள் எழுத்தில் பார்க்கமுடியாது. எட்டாம் வகுப்பு படித்துவிட்டுக் கூலிவேலைக்குச் செல்லும் பையன்கள் மாலையில் சந்தியில் நின்று பேசும் அதே விஷயங்களைத்தான் அவர்களும் பேசுவார்கள். அதாவது சினிமா. சரி, சினிமாவைத்தான் எப்படிப் பேசுகிறார்கள் என்று பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது. வணிக சினிமாவை அந்த சினிமாவின் தரத்தைவிட கீழே போய் பிய்த்துப் போடுவதுதான் இவர்களால் முடிகிறது.

இவர்கள் கல்விகற்றவர்கள் அல்ல. பயிற்சி பெற்றவர்கள். ஒரு குறிப்பிட்ட வேலைக்காக பயிற்றுவிக்கப்பட்டு வெளியே அனுப்பப்படும் உயிர்கள். ஒரு திரைப்படத்தில் சர்க்கஸ் புலிகள் இரண்டை அதன் உரிமையாளன் காட்டில் கொண்டுசென்று விட்டுவிடுவான். அவை வளையம் வழியாகப் பாய மட்டுமே கற்றவை. அது பயிற்சி, கல்வி அல்ல. ஆனால் காட்டுப்புலி தன் குழந்தைக்கு முழுமையான காட்டையே சொல்லித் தந்து விடுகிறது. காட்டுப் புலிக்குள் இருப்பது காடு. சர்க்கஸ் புலிக்குள் இருப்பது வளையமும் சாட்டையும் மட்டுமே. நம் பிள்ளைகள் சர்க்கஸ்புலிகள்.

அந்தப் படத்தில் சர்க்கஸ் புலிகள் காட்டுக்குள் வாழத்தெரியாமல் ஊர் அருகே ஒண்டிக்கொள்கின் றன. ஊர்மக்களை வேட்டை யாட ஆரம்பிக்கின்றன. அவற்றை கடைசியில் வேட்டைக்காரர்கள் சுட்டுத் தள்ளுகிறார்கள். இங்கே நம் சர்க்கஸ்புலிகளும் உண்மையான வாழ்க்கையை அதன் விரிவுடனும் வீச்சுடனும் எதிர்கொள்ளத் தெரியாமல் ஒரு சிறு வட்டத்துக்குள் ஒண்டிக்கொள்கின்றன. அதுதான் இணையவெளி. அங்கே நக்கல்கள் கொக்கரிப்புகள். அந்த சினிமாவில் அந்த சர்க்கஸ் புலி குட்டிபோடும் இடம் ஒன்று உண்டு. சர்க்கஸ்புலியைக் கொல்ல வரும் வேட்டைக்காரன் அது குட்டி போடுவதைக் கண்டு திரும்பிவிடுவான். அந்தக் குட்டி சர்க்கஸ்புலி அல்ல. அது காட்டுப்புலி. அபாரமான அர்த்தம் அளித்த காட்சி அது. எல்லா குட்டிக்குள்ளும் காடு இருக்கிறது. வளையத்தையும் சாட்டையையும் காட்டி நாம் அதை அழிக்கிறோம்,

மசானபு ஃபுகோகா இயற்கை வேளாண்மையின் தந்தை. அவரது புகழ்பெற்ற ஒற்றை வைக்கோல் புரட்சி என்ற நூல் இயற்கையின் விதிகளை மீறாமல் வேளாண்மை செய்வதைப்பற்றி சொல்லக்கூடியது. ஆனால் அந்நூலை வாசிக்கும் ஒரு பாடப்புத்தக வாசகன் ஆச்சரியமடைவான். அந்நூலில் வேளாண்மையைப்பற்றி மட்டும் பேசப்படவில்லை. வேளாண்மையில் தொடங்கி படிப்படியாக ஒருமேலான வாழ்க்கை பற்றி அது பேசுகிறது.பிரபஞ்சவியலைப் பேசுகிறது. ஆன்மிகமான உச்சநிலை நோக்கி அந்த உரையாடலை அது கொண்டு செல்கிறது.



ஒரு மேலைநாட்டு வேளாண்மை நூலில் நீங்கள் இதை எதிர்பார்க்க முடியாது. அந்நூலை ஒரு ஐரோப்பிய நூல்தொகுப்பாளர் செப்பனிட்டிருந்தால் அந்நூலின் கால்பகுதி அது பேசும் பொருளைவிட்டு வெளியே செல்கிறது என்று சொல்லியிருப்பார். வேளாண்மை விஞ்ஞானிக்கு பிரபஞ்சவியல் பற்றிப் பேச அடிப்படை இல்லை என்று சொல்லியிருப்பார். ஆனால் அதுதான் கீழைமரபு.

இளவயதில் நான் எங்களூரின் வர்மக்கலை நிபுணர்களின், சிலம்பக்கலை ஆசான்களின் கல்விக்கூடங்களை கவனித்திருக்கிறேன். அவர்கள் வர்மம் அல்லது சிலம்புசுற்றுதல் என்னும் ஒரு கலையை மட்டும் கற்பித்தவர்கள் அல்ல. அதன் வழியாக வாழ்க்கை பற்றிய ஒரு முழுமை நோக்கை அளித்தவர்கள்.

நம்முடைய மரபில் எந்த ஒரு கலையை கற்கச்சென்றாலும் அது கடைசியில் ஆன்மீகக் கல்வியை நோக்கிச் செல்வதைக் காணலாம். சிற்பமானாலும் மருத்துவமானாலும். பிறநூல்களில் உள்ள அதே ஆன்மஞானம் அந்தத் தொழில்நுட்ப நூல்களிலும் உள்ளது. ஏனென்றால் கல்வி என்பது ஞானத்துக்கான பாதை. ஆம், மெய்ஞானத்தை நோக்கி கொண்டுசெல்லும் திராணி அற்றது கல்வியே அல்ல.

பயிற்சி தெரிந்துகொள்ளுதலை அளிக்கிறது. கல்வி, அறிவை அளிக்கிறது. பயிற்சி தேர்ச்சியை அளிக்கிறது. கல்வி ஆளுமை வளர்ச்சியை அளிக்கிறது. தெரிந்து கொள்ளுதல் அரைகுறையானது. அறிவு முழுமையும் சமநிலையும் கொண்டது.

நமக்கும் இப்பிரபஞ்சத்துக்கும் இடையே ஒரு பிரம்மாண்டமான திரை உள்ளது. நம் அறியாமையின் திரை இது. மிக் விசித்திரமான திரை. இந்தத் திரை நம் அகங்காரத்தாலும் ஆசைகளாலும் ஊடுபாவாகநெய்யப்பட்டுள்ளது. நாம் நமக்குத் தேவையானதை, நாம் விரும்புவதை மட்டுமே அறிகிறோம். நாம் அறிந்ததை வைத்து மேலே அறியவேண்டியதை தடுத்துவிடுகிறோம்.

இளமையில் குழந்தை கல்விக்கான பேராசையுடன் இருக்கிறது. எதை புதியதாகச் சொன்னாலும் குழந்தை கவனிக்கும். ஆனால் வளர்ந்ததும் ஒரு கட்டத்தில் எந்தப் புதிய விஷயத்தையும் நாம் உள்வாங்காதவர்களாகிறோம். ஆசையாலும் அகங்காரத்தாலும் அறிதல் நிலைத்து நின்றுவிடுகிறது. அந்த அகங்காரத்தையும் ஆசையையும் கடந்துதான் அறியாமைத்திரையைக் கிழித்து முழுமையறிவை அடைய முடியும் என்று சொல்லப்பட்டுள்ளது. அதுவே ஞானத்தின் பாதை.ஒரு விழியிழந்த மனிதர் ஞானியின் வீட்டைவிட்டுக் கிளம்பும்போது இரவாகி விட்டது. அவர் தனக்கு ஒரு கைவிளக்கு கேட்டார். “பார்வையற்ற உனக்கு ஏன் விளக்கு?” என்றார் ஞானி “விளக்கொளியில் என்னை மற்றவர்கள் பார்ப்பார்களே, அவர்கள் என் மேல் மோதாமலிருப்பார்கள் அல்லவா?” என்றார் பார்வையற்றவர்.

வழியில் ஒருவர் பார்வையற்றவர் மேல் மோதிக் கொண்டார் “மூடா, நீ விளக்கைப் பார்க்கவில்லையா?” என்றார் பார்வையற்றவர் கோபமாக. அவர் சொன்னார், “சகோதரா விளக்கு ஏற்கனவே அணைந்து விட்டிருக்கிறது.”

பார்வையற்றவர் விளக்கின் எல்லையை அப்போதுதான் உணர்ந்தார். ஞானியிடம் திரும்பிவந்தபோது அணையாத ஒரு விளக்கை அவர் அவருக்குச் சுட்டிக்காட்டினார்.

அந்த அணையாவிளக்கு - கல்வி.

# 13 ஆவது திருத்தம் இல்லையெனில் அமெரிக்கா கூட உடைந்திருக்கும்

## அரசாங்கம் தெரிவிப்பு



(கொழும்பு)

மாகாணசபை தேர்தல் முறைமை தொடர்பில் பலரும் பல்வேறு விதமான கருத்துக்களை தெரிவிக்கின்றனர். 13 ஆவது திருத்தமே கசக்கிறது அவ்வாறானதொரு திருத்தம் அமெரிக்க அரசியலமைப்பில் கொண்டு வரப்பட்டு இருக்காவிட்டால் அமெரிக்கா பல இராஜ்ஜியங்களாக பிரிந்திருக்கும் என அரசாங்கம் தெளிவுபடுத்தியுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் அமைச்சர்களான டலஸ் அழகப்பெரும, சுசில் பிரேமஜயந்த மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் இணைந்து, மாகாவலி கேந்திர நிலையத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டின் போது, செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் டலஸ் அழகப்பெரும மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னதாக கேள்வி எழுப்பிய ஊடகவியலாளர், மாகாண சபை முறைமையையே முழுமையாக இல்லாதொழிக்க வேண்டும் என அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளான தேசிய சுதந்திர முன்னணி மற்றும் ஹெல உறுமய ஆகியன கோரிக்கை விடுத்துள்ளன. இது தொடர்பில் அரசாங்கத்தின் நிலைபாடு என்ன? என்று வினவினார்.

அதற்கு அமைச்சர் பதிலளிக்கையில், 13 ஆவது திருத்தமே சிலருக்கு கசக்கிறது. 13 ஆவது இலக்கத்தையே சில விமானங்கள் வெறுக்கின்றன. அவ்வாறான விமானங்களில் 13 ஆவது இலக்கம் கொண்ட ஆசனமேயில்லை. எனினும் அமெரிக்காவின் அரசியலைமைப்பில் கூட 13 ஆவது திருத்தம் இருக்கிறது.

13 ஆவது திருத்தத்தில் இருக்கும் நல்ல விடயங்கள் சிலருக்குத் தெரிவதில்லை. எனினும் அமெரிக்காவைச் சேர்ந்த ஸ்டீபன் பில் பெல்ட் இயக்குநரினால் டேனியல் டேவிட் நடித்த லிங்கன் எனும் திரைப்படம் அமெரிக்காவின் அரசியலமைப்பில் ஏற்படுத்தப்பட்ட 13 ஆவது திருத்தம் தொடர்பானது.

இந்தப் படத்தைப் பார்த்தால் 13 ஆவது திருத்தம் கசக்காது அமெரிக்க அரசியலமைப்பில் 13 ஆவது திருத்தத்தை கொண்டு வந்திருக்காவிடின் அமெரிக்கா பல ராஜ்ஜியங்களாக பிரிந்திருக்கும் அமெரிக்காவே இருந்திருக்காது என்றார்.

# ராஜீவின் படுகொலைக்கு 13 ஆவது திருத்தமே காரணம்

## என்கிறார் அமைச்சர் விமல்

(கொழும்பு)



மாகாண சபைகள் உருவாக்கப்பட்ட பின்னர் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைப்பர் என கூறப்பட்டபோதும் பலகைகளினால் செய்யப்பட்ட ஆயுதங்களையே புலிகள் கீழே வைத்தனர். இந்த 13 ஆவது திருத்தமே இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியை படுகொலை செயதது என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

தேசிய சுந்திர முன்னணி மற்றும் ஹெல உறுமய ஆகிய கட்சிகள் இணைந்து, தேசிய நூலக ஆவணாக்கல் சபை கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், 13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட மாகாணசபையின் பெறுபேறாக இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ்காந்தியை படுகொலை செய்தனர். இந்த திருத்தம் புலிகளுக்கு பயந்தே கொண்டுவரப்பட்டது. ஆனால், இன்று யாருக்கு பயப்படுகிறார்கள் என்று தெரியவில்லை.

அரசியலமைப்பின் பிரகாரம் மக்களின் ஆணையை இது மீறுகின்ற செயலாகும். மாகாணசபைகள் இருப்பதினால் நாடாளுமன்றம் விரைவில் நொண்டி நிறுவனமாக மாறும் என்றார்.

# வறட்சிப் பாதிப்பிற்கு வட்டியில்லாக் கடன்

(கொழும்பு)

வரட்சியால் பாதிக்கப்பட்ட நிலங்களுக்கு வட்டியில்லா கடனை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்கீழ் 15 ஆயிரம் ரூபா வரையில் கடனுதவி வழங்கப்பட உள்ளதாக கமநல சேவைகள் மற்றும் வனஜீவராசிகள் பிரதியமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன குறிப்பிட்டுள்ளார்.

பயிர்ச்செய்கைப் பாதிக்கப்பட்டவர்களின் நிலைமையினை கருத்திற்கொண்டு ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன் கடந்தமுறை பயிர்ச செய்கையின்போது வட்டியுடன் கடன்பெற்ற விவசாயிகள் அதனைச் செலுத்துவதற்கான காலஅவகாசம் நீடிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை வறட்சியால் செய்கைகள் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இலவச விதை நெல்லை வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

# 13 ஆவது திருத்தச் சட்டத்தினால் 62 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்

## என்கிறார் அத்துரலிய ரத்னதேரர்

(கொழும்பு)

மக்களின் ஆணையை கொள்ளையடித்தே மூன்றில். இரண்டு பெரும்பான்மையுடன் 13 ஆவது திருத்தம் உயர்நீதிமன்றத்தின் முரண்பாடுகளுடன் நிறைவேற்றப்பட்டது. இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் ஏற்படுத்தப்பட்ட 13 ஆவது திருத்தத்தினால் 62,000 பேர் பலியெடுக்கப்பட்டனர் என்று ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.



தேசிய சுந்திர முன்னணி மறறும் ஹெல உறுமய ஆகியன இணைந்து, தேசிய நூலக ஆவணாக்கல் சபை கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டமையினால் தமிழ் சிங்கள முஸ்லிம் மக்கள் சமாதானமாகப் பேசுவதற்கான சந்தர்ப்பம் கிட்டியுள்ளது. இந்நிலையில் மூவின மக்களும் சமாதானமாக வாழ்கின்றனர்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் அரசியலமைப்பைத் திருத்த வேண்டும் 13 ஆவது திருத்தம் 62 ஆயிரம் பேரைப பலியெடுத்தே அரசியலமைப்புக்கு முரண்பட்டவகையில் நிறைவேற்றப்பட்டது என்றார்.

# தலைமைத்துவப் பயிற்சி டிசம்பர் 2 இல் ஆரம்பம்

(கொழும்பு)



இம்முறை பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ள மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சியை எதிர்வரும் டிசம்பர் 2 ஆம் திகதி முதல் ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாக உயர்கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற தலைமைத்துவப் பயிற்சி போன்றே இம்முறையும் இடம்பெறும் என உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்தார்.

இம்முறை பல்கலைக்கழகத்திற்கு அதிக மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவதால் மூன்று கட்டங்களாக தலைமைத்துவப் பயிற்சி அளிக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து எதிர்வரும் நாட்களில் மாணவர்கள் தெளிவுபடுத்தப்படுவார்கள் என அவர் கூறியுள்ளார்.

# வடகொரியா போன்று இலங்கையும் சர்வாதிகார ஆட்சி நோக்கி நகர்கிறது

## கரு ஜயசூரிய குற்றச்சாட்டு

வடகொரிய பாணியிலான சர்வாதிகார ஆட்சி நோக்கி நாடு நகர்வதாக ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பிரதித் தலைவர் கருஜயசூரிய தெரிவித்துள்ளார். வடகொரியா சிம்பாப்பே போன்ற நாடுகளில் காணப்படும் சர்வாதிகார ஆட்சியை ஒத்த வகையில் இலங்கையின் ஆட்சி முறை மாற்றமடைந்து செல்வதாக அவர் வருத்தம் வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் நீதிமன்றம் சுயாதீனமாக இயங்கக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

அண்மையில் சட்ட மா அதிபர் திணைக்களம் நேரடியாக ஜனாதிபதியின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். 17 ஆம் திருத்தச் சட்டம் இரத்துச் செய்யப்பட்டதன் மூலம் நாட்டில் பாரியளவு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

# நம்பிக்கையில்லாப் பிரேரணை மக்களுக்கு தெளிவுபடுத்தப்படும்

## அமைச்சர் மைத்திரிபால தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் எனவும் அதன் ஒரு அங்கமாகவே பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்ப்பதாக ஐக்கிய தேசியக்கட்சி கூறினாலும், 78 ஆம் ஆண்டு அரசியல் அமைப்புச் சட்டத்தில் இந்த ஏற்பாடுகளைக் கொண்டு வந்து அதனை உறுதி செய்ததே ஐக்கிய தேசியக்கட்சி தான். எனினும் அவர்கள் கடந்த காலத்தை மறந்து விட்டனர் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து மக்கள் மத்தியில் குழப்பம் காணப்பட்டது. எனினும் அவருக்கு எதிரான 14 குற்றச்சாட்டுகள் என்ன என்பதை முழு நாடும் அறிந்து கொண்டுள்ளது எனவும் மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவது என்பது நாட்டுக்கு புதிய விடயமல்ல, அது ஜே.ஆர்.ஜயவர்தனவின் ஆட்சியிலும் ஆர்.பிரேமதாசவின் ஆடசியிலும் கொண்டு வரப்பட்டது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# படகு மூலம் சென்றவர்கள் விமானத்தில் வருகின்றனர்

(கொழும்பு)

புகலிடம் கோரி அவுஸ்ரேலியாவுக்கு வரும் எண்ணத்தை மழுங்கச் செய்யும் வகையிலான கடுமையான நடவடிக்கையாக படகு மூலம் வந்த மேலும் ஒரு குழுவை அவுஸ்ரேலிய அரசாங்கம் இலங்கைக்கு திருப்பியனுப்பியுள்ளது. தாமாக விருமபி வராதவர்களைக் கொண்ட இந்த குழுவிலுள்ள 30 தனியான ஆணகள் (கிறிஸ்மஸ் தீவிலிருந்து) வாடகை விமானம் ஒன்றில் கட்டாயப்படுத்தி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.,

இவர்கள் பல்வேறு படகுகள் மூலம் அண்மையில் அவுஸ்ரேலியாவுக்கு வந்தவர்கள். இவர்கள் அவுஸ்ரேலியாவின் சர்வதேச கடப்பாடுகள் குறித்து எதுவும் பேசவில்லை என குடிவரவு அமைச்சர் கிறிஸ் போவன் கூறினார்.

பொருளாதார அகதிகளை அவுஸ்ரேலியா ஏற்கமாட்டாது எனற செய்தியை அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை தெளிவாக அறிவிக்கும் எனவும் கிறிஸ் போவன் தெரிவித்துள்ளார். தாமாக விரும்பித் திரும்பாதவர்களுக்கு உதவியேதும் கிடைக்காது எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, இவ்வாறாக கட்டாயமாக திருப்பியனுப்புவதை பசுமை கட்சியினர் கண்டிததுள்ளனர். காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே அவுஸ்ரேலியாவிலிருந்து விமானம் மூலம் இவ்வாறு திருப்பியனுபபப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்

# இடையூறுகளைப் பொருட்படுத்தாது ஆசிரியர்கள் கற்பிக்க வேண்டும்



(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்கள் இடையூறுகளைப் பொருட்படுத்தாது மனத் தூய்மையுடன் மாணவர்களுக்கு கல்வி கற்பிக்க முன்வர வேண்டுமென ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தீவக பிரதேசங்களின் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின்(உதயன்) தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஊர்காவற்றுறை - தம்பாட்டி அ.த.க. வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டட திறப்பு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மிகவும் பின்தங்கிய பிரதேசங்கள் எனக் குறிப்பிடப்படுகின்ற தீவக பிரதேச மாணவர்களின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், நாமும் தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகின்றோம்.

கற்றல், கற்பித்தலுக்கான பௌதீக வளத்தேவைகளை நாம் விரைவாகப் பூர்த்தி செய்து வருகின்றோம். இருப்பினும் இப்பிரதேச மாணவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்க கல்விச்சமூகம் தயக்கம் காட்டி வருகின்றமை எமக்கு வேதனையளிக்கின்றது.

குறிப்பாக கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை தொடர்ச்சியாக நிலவுவதுடன், பெரும்பாலான ஆசிரியர்கள் இவ் வலயத்திலிருந்தே இடமாற்றம் பெற்றுச் செல்கின்றனர். எனவே இவ்வாறான பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்ற சந்தர்ப்பத்திலேயே தீவக மாணவர்கள் சிறப்பானதொரு கல்வியைப்பெறமுடியும. இதற்கு கல்விச் சமூகத்தினர் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும் எனத்தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தீவக வலயக் கல்விப்பணிப்பாளர், ஈ.பி.டி.பியின் ஊர்காவற்றுறை பிரதேச அமைப்பாளரும் ஊர்காவற்றுறை பிரதேசசபைத் தவிசாளருமான ஜெயகாந்தன், ஈ.பி.டி.பியின் நெடுந்தீவு பிரதேச அமைப்பாளரும் நெடுந்தீவு பிரதேசசபை தவிசாளருமான தானியல றெக்சியன்(றஜீவ்) மற்றும் பாடசாலை சமூகத்தினர் எனப்பலர் கலந்து கொண்டனர்.



சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் நடத்திய சர்வதேச முதியோர், மாற்று ஆற்றலுடையோர் தின விழாவில் நடைபெற்ற முதியோர்களுக்கான விளையாட்டில் வெற்றி பெற்றவருக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் பரிசில் வழங்குவதைக் காணலாம். (104)

## கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினால் மட்டுவில் பால் வழங்குனர்களுடனான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சந்திரபுரம் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பால் கொள்வனவை அதிகரித்தல், பால் வழங்குனர்களை அதிகரித்தல், பால் வழங்குனர்களுக்கும் சங்கத்திற்கும் தொடர்பை அதிகரித்தல், பால் வழங்குனர்களுக்கு கிடைக்கக்கூடிய உதவித்திட்டம் தொடர்பாக ஆராயப்படவுள்ளதால் தற்போதைய பால் வழங்குனர்கள் எதிர்கால பால் வழங்குனர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் பங்குபற்றுமாறு சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (இ)

## அடுத்துவரும் மழைக்கு முன் கால்வாய்களைச் சீர் செய்யவும்

(மானிப்பாய்)

வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட ஆனைக்கோட்டை வைத்தியசாலை வீதி, மானிப்பாய் சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய் மத்திக் கிடங்கடி வீதி, சின்னப்பா வீதி, சங்கையான் வீதி என்பன சீர் செய்யப்படாமையினால் கடந்த வாரம் தொடர்ந்து பெய்த பெருமழையால் வெள்ளம் வழிந்தோட முடியாது வீடுகள், வளவுகள் என்பனவற்றில் தேங்கி நின்றதால் இயல்பு வாழ்வும், போக்குவரத்தும் தடைப்பட்டிருந்தன.

இந்த வீதிகளின் கால்வாய்களில் வீடுகட்டுவதற்கான பாரிய கற்கள் பறிக்கப்பட்டும், மண் குவியல்கள், மரக்குற்றிகள் என்பன பறிக்கப்பட்டு முள்ளதால் வெள்ளம் வழிந்தோட முடியாது தேங்கி நிற்கின்றது.

சுதுமலை, மானிப்பாய், ஆனைக்கோட்டை, நவாலி ஆகிய பகுதிகளில் ஏற்படும் வெள்ளங்கள் இந்த கால்வாய்கள் வழியாகவே கடலுக்கும், வயலுக்கும் செல்வது வழக்கம் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ் கால்வாய்கள் சீர் செய்யப்படாமையால் இவ்வீதிகளில் வெள்ளம் தேங்கி நிற்பதற்கு காரணமாக அமைவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே உரிய அதிகாரிகள் அடுத்துவரும் மழைக்கு முன்னர் இவ்வீதிகளில் வெள்ளம் தேங்கி நிற்காத வண்ணம் கால்வாய்களைப் புனரமைப்புச் செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (104)

## தீபாவளியை முன்னிட்டு விடுமுறை இரத்து

(குருநகர்)

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக யாழ்.சிகை ஒப்பனையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளை 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீபாவளி தினத்தன்று சகல சிகை அலங்கார நிலையங்களையும் மூடி விடுமுறையை அனுஷ்டிக்குமாறு சகல அங்கத்துவ நிலையங்களுக்கும் அறிவிக்கப்படுவதாகவும் சங்கத் தலைவர் அ.அல்பேட் தெரிவித்தார். (68)

## மண்டைதீவுப் பகுதியில் பாம்புகள் தொல்லை

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுப் பகுதியில் பாம்புகளின் தொல்லை அண்மை நாட்களாக அதிகரித்துக்காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

காடு மண்டியிருந்த பகுதிகளில் மழைநீர் சூழ்ந்து கொண்டதனை அடுத்து அங்கிருந்து பாம்புகள் இடம்பெயர்ந்து ஊர்மனைக்குள் வந்து தொல்லை தருவதாகவும் அப்பகுதி மக்கள் மேலும் தெரிவித்தனர்.

இரவு வேளையில் சில வீடுகளின் வளவினுள் புகுந்து அங்கு கோழிக்கூடுகளில் அடைக்கப்பட்டிருந்த கோழிகளைக் கொன்று வரும் சம்பவங்களும் நடைபெற்றிருப்பதாகவும் அக்கிராம மக்கள் மேலும் தெரிவித்தனர்.

அத்துடன் இரவில் நடமாடவும் அங்குள்ள மக்கள் அஞ்சுவதாகவும் தெரியவருகிறது. (பா)

## முரசின் இன்றைய பலன்

(09.11.2012 - வெள்ளிக்கிழமை)

நந்தன வருஷம் ஐப்பசி மாதம் 24 ஆம் திகதி. நட்சத்திரம் பூரம்.
முன்னிரவு 7.42 வரை. சித்தயோகம். திதி தசமி பிற்பகல் 1.14 வரை.
இராகுகாலம் 10.35 - 12.05 வரை. சுபநேரம் 6.05 - 7.35 வரை.
எமகண்டம் 3.05 - 4.35 வரை, குளிகன் காலம் 7.35 - 9.05 வரை.
கேதாரகௌரி விரத 17 ஆவது நாள்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | துணிச்சலாக முடிவுகள். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசை. தாராள பணவரவு. நண்பருக்கு உதவி. அரசால் இலாபம். பிரபலங்கள் அறிமுகம். |
| ரிஷபம் | வருமானத்தை உயர்த்த புது முயற்சிகள். நட்பால் ஆதாயம். பொறுப்புகள் தேடி வரும். தொழில் விரிவுபடும். சிக்கனம் சிரமம் தவிர்க்கும். குடும்ப ஒற்றுமை. |
| மிதுனம் | எதிர்பாராத ஒரு வேலை முடியும். புதிய பொருட்கள் வாங்குவீர்கள். பேச்சில் அன்பும், பண்பும். தெழிலில் கூட்டு லாபம். சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். |
| கடகம் | சவால்கள் சாதாரணமாகும். பிள்ளைகளால் பெருமை. கல்யாண பேச்சு. தாயார் வழியில் ஆதரவு.. தொழில் முன்னேற்றம். யோக பலன். உயர்ந்தோர் நட்பு. |
| சிம்மம் | பச்சில் தத்துவச் சாயல். அடுத்தவர் நலனில் அக்கறை. தொழிலில் புதிய வழிமுறை. அளவான பணவரவு. சமூகத்தில் மதிப்பு, மரியாதை உயரும். |
| கன்னி | அலைச்சல், கோபம் நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி. நேர்மறை எண்ணங்கள். நல்ல வாய்ப்புகள் தேடி வரும். அலுவலகத்தில் ஒத்துழைப்பு. |
| துலாம் | எடுத்த காரியம் வெற்றி. தொழிலில் புதிய யுக்தி. சராசரி பணவரவு. உடல்நலம் பலம் பெறும். பயணத் திட்டத்தில் மாறுதல். தகுதியை வளர்ப்பீர்கள். |
| விருச்சிகம் | பெற்றோரின் விருப்பம் நிறைவேற்றுவீர்கள். அந்தஸ்து உயரும். உயர்பதவியினர் உதவுவார்கள். சக ஊழியர் பாராட்டுவார்கள். உபரி வருமானம். |
| தனுசு | எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம். பிறருக்கு உதவி. வாழ்க்கைத்துணை வழியில் ஒத்துழைப்பு. மனதிற்கு இதமான செய்தி வரும். அலுவலகத்தில் மரியாதை. |
| மகரம் | மனதில் பயம் வரும். கணவன்-மனைவிக்குள் வீண் சந்தேகம். எதிர்பார்த்தவை தாமதம். பயணத்தில் கவனம். குடும்பம் அனுசரிக்கும். |
| கும்பம் | பெருந்தன்மையுடன் நடந்து, நன்மதிப்பு. தொழில் அபரிமிதமான முன்னேற்றம். உபரி வருமானம். விரும்பிய பொருள் வாங்குவீர்கள். வழிபாடு. |
| மீனம் | கலகலப்பாக பேசி, பிறரைக் கவருவீர்கள். வெற்றிகள் எளிதாகும். தொழில், புதிய பரிமாணம். வரவு முன்னேற்றம். குடும்பத் தேவை பூர்த்தி. |

# முதல் டெஸ்ட் இன்று



(பிரிஸ்பேன்)

அவுஸ்ரேலிய, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி இன்று பிரிஸ்பேன் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அவுஸ்ரேலியாவுக்குச் சுற்றுப் பணத்தை மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி, டெஸ்ட், ஒரு நாள் போட்டிகளில் பங்குபற்றவுள்ளது. அந்த அடிப்படையில் முதலாவது டெஸ்ட் போட்டி இன்றைய தினம் ஆரம்பமாகவுள்ளது.

இப்போட்டி குறித்து கருத்துத் தெரிவித்த அவுஸ்ரேலியாவின் முன்னாள் கப்டன் ரிக்கி பொண்டிங்,


இந்தத் தொடரில் நாங்கள் குறைவாக மதிப்பிடுவது பற்றி எதிர்மறையாக சிந்திக்க வேண்டியதில்லை. தென்னாபிரிக்க அணி டெஸ்ட் தரப்படுத்தலில் முதல் இடத்தில் இருப்பதற்கு தகுதி பெற்ற அணியே. ஆனால் அந்த அணிக்கும் எங்கள் அணிக்கும் இடைவெளி பெரிதாக இல்லை. நாங்கள் முதல் நிலையில் இருந்தபோது அனைவரும் எங்களைத் துரத்தி வந்தனர். அதேபோல்தான் இப்போதும், தென்னாபிரிக்க அணிக்கு அடுத்த வாரம் புரியும். அதாவது ஒரு கடினமான அணி அவர்களைத் துரத்தி அவர்களது முதல் நிலையைத் தட்டிப் பறிக்கும் என்பதைப் புரிந்துகொள்ள முடியும் எனத் தெரிவித்தார்.

# இந்திய, பாகிஸ்தான் தொடருக்காக காத்திருக்கும் இம்ரான்கான்

(லாகூர்)

இந்தியா, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடருக்காக எதிர்பார்ப்புடன் காத்திருப்பதாக பாகிஸ்தான் அணி யின் முன்னாள் தலைவர் இம்ரான் கான் தெரிவித்துள்ளார். அடுத்த மாத இறுதியில் இந்தியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தான் அணி ஜனவரி மாத தொடக்கம் வரை 2 ருவென்ரி-20 போட்டிகளிலும், 3 ஒருநாள் போட்டிகளிலும் பங்குபெறவுள்ளது.

இக் கிரிக்கெட் தொடர் அரசியல் ரீதியாக மாறான கருத்துக்களை கொண்டுள்ள இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை மேம்படுத்த உதவும். எனினும் அரசியல்வாதிகளின் பிழையான கருத்துக்கள்



உறவுகளை மோசமாக்கும். இரு நாடுகளின் அரசியல்வாதிகள், அரசாங் கங்களுக்கிடையிலான உறவுகள் ஓரளவு நேர்முகத்தன்மையுடன்காணப் படும்போது இரு நாடுகளுக்குமிடையிலான உறவுக்கான சிமெந்து போல் கிரிக்கெட் செயற்பட முடியும். கிரிக்கெட் இரு நாடுகளையும் இணைப்பதற்கு உதவும். கிரிக்கெட் போட்டி களை ஆரோக்கியமானபோட்டி. மக்களை இணைக்கக்கூடியது. அதன் காரணமாக இரு நாடுகளுக்குமிடையிலானகிரிக்கெட் போட்டிகளுக்காகக் காத்திருப்பதாகவும்அவர் தெரி வித்தார்.தன்னுடைய காலத்திலும் இரு நாடுகளுக்குமிடையிலான அமைதி நிலவிய காலத்திலும், இரு நாடுகளுக்குமிடையிலான போர் இடம்பெற்று வந்த காலத்திலும் தான் கிரிக்கெட் போட்டிகளிலும்பங்குபற்றியதை நினைவுபடுத்தினார்.

# நான்காவது போட்டி இன்று

(அம்பாந்தோட்டை)

இலங்கை மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கிடையேயான நான்காவது ஒரு நாள் சர்வதேச கிரிக்கட் போட்டி இன்றைய தினம் அம்பாந்தோட்டையில் இடம் பெறவுள்ளது.

இதனிடையே இதுவரை இடம் பெற்ற போட்டிகளில் இரண்டு போட்டிகளில் இலங்கை அணி வெற்றி பெற்று முன்னிலை வகிக்கின்றது.

இதேவேளை, மூன்றாவது ஒரு நாள் போட்டியில் இலங்கை அணி ஏழு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. இதில் டில்சான் சதம் அடித்தமை குறிப்பிடத்தக்கது.

# சாதனை முறியடிப்பு

(லண்டன்)

ரோஜர் பெடரர் மற்றுமொரு சாதனையை முறிடியத்துள்ளார்.

இங்கிலாந்தில் உலக சம்பியன் ஷிப் ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகின்றது.

இதில் பி.பி.பீ. பிரிவில் நடந்த ஒரு ஆட்டத்தில் ரோஜர் பெடரர் 6-3, 6-1 என்ற நேர் செட்டில் டிப்சரேவிச்சை தோற்கடித்தார்.

இந்த சம்பியன்ஷிப் போட்டியில் பெடரர் பதிவு செய்த 40ஆவது வெற்றி இதுவாகும்.

இதன் மூலம் இந்தப் போட்டி யில் அதிக வெற்றிகளை (39 வெற்றி) பெற்றவரான செக்கோஸ்லோ வாக்கியாவின் இவான்லெண்டிலின் சாதனையை முறியடித்தார்.

# ஆச்சரியமளிக்கும் சுழற்பந்து இந்திய அணியில் இல்லை




இந்திய அணியில் ஆச்சரியம் அளிக்கக்கூடிய சுழற்பந்து வீச்சாளர்கள் தற்போது இல்லை. எனவே டெஸ்ட் தொடரில் இந்திய அணியை எங்களால் வெல்ல முடியும் என இங்கிலாந்து சுழற்பந்து வீச்சாளர் ஸ்வான் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு தொடக்கத்தில் ஐக்கிய அரபு எமிரேட்சில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து 0 – 3 என்ற கணக்கில் தோல்வியைத்தழுவியது. அங்குள்ள ஆடுகளம் வழுக்கும் தன்மையுடன் வித்தியாசமாகக் காணப்பட்டது. ஆனால் இந்தியாவில் உள்ள ஆடுகளம் எல்லாம் நீண்ட பாரம்பரிய தன்மை கொண்டது. எனவே இந்த ஆண்டு தொடக்கத்தில் நடந்தது போல் (பாகிஸ்தானுக்கு எதிராக) மீண்டும் நடக்காது. அப்படி நடந்தால் அது மிகவும் ஆச்சரியமாகத்தான் இருக்கும்.

மேலும் கடந்த காலங்களில் ஆச்சரியம் அளிக்கும் வகையிலும், புரிந்து கொள்ள முடியாத வகையிலும் அமைந்த இந்திய சுழற்பந்து வீச்சுக்கு எதிராக எங்கள் துடுப்பாட்ட வீரர்கள் ஆட்டம் இழந்தனர். பாகிஸ்தானுக்கு எதிராகவும் அது போன்ற சுழற்பந்து வீச்சாளர் சயீத் அஜ்மலின் பந்து வீச்சில் தான் எங்களது துடுப்பாட்ட வீரர்கள் வீழ்ந்தனர். ஆனால் தற்போது அவரைப் போன்ற எளிதில் கணிக்க முடியாத தந்திரமாக பந்து வீசக்கூடிய சுழற்பந்து வீச்சாளர்கள் யாரும் இந்திய அணியில் இல்லை. சுழற்பந்து வீச்சைச் சமாளிப்பதில் எங்கள் துடுப்பாட்ட வீரர்கள் சரியான தீர்வை இன்னும் காணாவிட்டாலும். நல்ல முன்னேற்றம் கண்டு இருக்கிறார்கள். இந்த ஆண்டில் நடந்த இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரை நாங்கள் சமன் செய்தோம். அவுஸ்ரேலியாவுக்கு அடுத்த படியாக ஆட்டத்தில் திருப்பமும், தந்திரமும் நிறைந்த ஆடுகளத்தை கொண்டது இந்தியாவாகும். அவுஸ்ரேலிய மண்ணில் அந்தத் தந்திரங்களை எல்லாம் சமாளித்து நாங்கள் டெஸ்ட் தொடரை 3 – 1 என்ற கணக்கில் வென்றோம். தற்போதைய அணியில் இடம் பிடித்து இருக்கும் வீரர்களில் பெரும்பாலானவர்கள் அவுஸ்ரேலிய பயணத்தில் ஆடி அனுபவம் பெற்றவர்கள். அதேபோல் இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்திலும் நாங்கள் அதே பாணியை கடைப்பிடிக்க வேண்டும். சொந்த மண்ணில் இந்திய அணியினர் சிறப்பாக செயற்படக்கூடியவர்கள். அவர்களை வெல்ல வேண்டும் என்றால் நல்ல ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும். அதனை எங்களால் செய்து இந்திய அணியை வெல்ல முடியும் என்று நம்புகிறேன் எனவும் அவர் தெரிவித்தார்.

# புற்றுநோய் பாதிப்பு



(ஜோகன்ஸ்பேர்க்)

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரும், பிரபல தொலைக்காட்சி வர்ணனையாளருமான ரொபின் ஜேக்மேன் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளார். இந்த புற்று நோய் பாதிப்புக்கு 7 வாரங்கள் அவர் ரேடியோதெரபி சிகிச்சை பெறுகிறார்.

வர்ணனை செய்வதில் 67 வயதான ஜேக்மேன் வல்லவர். அத்தோடு அவரது குரலும் நல்ல தெளிவான உச்சரிப்புடன் அழுத்தமாக இருக்கும். ஏற்கனவே முன்னாள் வீரர்களான டோனி கிரேக் (இங்கிலாந்து), மார்ட்டின் குரோவ் (நியூசிலாந்து) ஆகியோர் புற்று நோயால் பாதிக்கப்பட்டு உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சச்சினின் ஓய்வை அவரே தீர்மானிப்பார்

டெண்டுல்கர் மிகச்சிறந்த வீரர். அவருக்கு எப்போது ஓய்வு பெற வேண்டும் என்பது தெரியும். ஓய்வு குறித்து அவர் தான் முடிவு செய்ய வேண்டும். அதுபற்றி நான் எதுவும் கருத்துத் தெரிவிக்க முடியாது என கபில்தேவ் தெரிவித்தார். சிறந்த வீரர்களின் சாதனைகள் நீண்ட காலமாக நினைவில் இருக்கும். உதாரணத்துக்கு கவாஸ்கர் படைத்த சாதனைகள் இன்னும் ஞாபகத்தில் இருக்கிறது. ராவிட், லக்ஸ்மன் இடத்தை நிரப்ப நீண்ட காலம் தேவைப்படும். அவர்கள் இடத்தை நிரப்பக் கூடிய வீரர்கள் இன்னும் வரவில்லை எனவும் கபில்தேவ் மேலும் தெரிவித்தார்.

# முதலிடம் பிடிப்போம்

(மும்பை)

டெஸ்ட் போட்டியில் இழந்த முதல் இடத்தை மீண்டும் பிடிப்போம் என்ற நம்பிக்கை உள்ளது. இதற்கானநடவடிக்கைகளைத்தொடங்கிவிட்டோம் என இந்திய அணிக் கப்டன் டோனி தெரிவித்தார்.

படிப்படியாக முன்னேறினால்தான் முதல் இடத்தைப்பிடிப்போம். இங்கிலாந்துடனான தொடர் சிறப்பாக இருக்கும். எங்களது பலத்தையும், பலவீனத்தையும் ஆராய்ந்து வருகிறோம். நான் ஒரு சிறிய நகரத்தில் இருந்து வந்துள்ளேன். கிரிக்கெட்தான் எனது தொழிலாக இருக்கும் என்று நான் நினைத்துப் பார்த்தது இல்லை. இராணுவத்தில் சேரவே நான் விரும்பினேன். அதுவே எனது கனவாகவும் இருந்தது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# அவுஸ்ரேலிய பங்களிப்பை நினைவு கூரும் சச்சின்



(மும்பை)

என்னை சிறந்த ஆட்டக்காரராக மாற்றியதில் அவுஸ்ரேலியாவின் பங்களிப்பு உள்ளதென சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட்டில் பல்வேறு உலக சாதனைகள் படைத்துள்ள சச்சின் டெண்டுல்கருக்கு அவுஸ்ரேலிய அரசின் 'ஓடர் ஒப் அவுஸ்ரேலியா' என்ற உயரிய விருது மும்பையில் நடந்த நிகழ்ச்சியில் அவுஸ்ரேலிய அமைச்சர் சிமோன் கிரியினால் வழங்கப்பட்டது. இதையடுத்து பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் பேசுகையில்,1991 – 92இல் அவுஸ்ரேலிய சுற்றுப்பயணத்தில் நான் முதல் முறையாக விளையாடினேன். இந்தப் பயணம் முற்றிலும் என்னை ஒரு சிறந்த கிரிக்கெட் வீரராக மாற்றியது. இது என் வாழ்க்கையில் முக்கிய தருணமாக அமைந்தது. இனி உலகின் எந்த அணிக்கு எதிராகவும் விளையாட நான் தயாராகிவிட்டதாக நினைத்தேன். இவ்வாறு என்னை மிகவும் சவாலான வீரராக மாற்றியதில் அவுஸ்ரேலியாவின் சில பங்களிப்பும் உண்டு. அவுஸ்ரேலிய வீரர்கள் மனவலிமையுடன் மிகச்சிறப்பாக விளையாடக் கூடியவர்கள். அவுஸ்ரேலியாவில் டொன் பிரட்மனின் 90ஆவது பிறந்தநாளில் பங்கேற்று அவரை வாழ்த்தியது மறக்க முடியாத அனுபவம் ஆகும். அப்போது சென்னையில் தேசிய பயிற்சி முகாமில் இருந்த என்னை அவுஸ்ரேலியாவுக்கு அனுப்பி வைப்பதற்கு பி.சி.சி.ஐ. கருணையுடன் ஒப்புதல் அளித்தமை குறிப்பிடத்தக்கது.



படப்பிடிப்பு: சுரேஷ்

# காணிவேல் கால்பந்து விழா

(யாழ்ப்பாணம்)

சென்.ஜோன்ஸ் கல்லூரியினால் வருடா வருடம் நடத்தப்படும் சிறுவர்களுக்கான காணிவேல் கால்பந்து விழா மிகவும் சிறப்புற நடைபெற்றது.

கடந்த 3ஆம் திகதி சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி, சென். ஜேம்ஸ், யாழ். மத்திய கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, சென்.சாள்ஸ், சென். மேரிஸ், நாவாந்துறை ஆர்.சி., மணற்காடு ஆர்.சி., முல்லைத்தீவு ம.வி. ஆகிய பாடசாலை அணிகள் மோதின.

இப்போட்டிகள் சிறுவர்களின் கால்பந்தாட்ட வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் வருடா வருடம் நடத்தப்படும் இப்போட்டி, சென். ஜோன்ஸ் கல்லூரியின் முன்னாள் அதிபர் அமலசீலன் தலைமையில் நடைபெற்றது.

இப்போட்டியில் பங்குகொண்ட அனைத்து அணிகளுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.இப்போட்டி குறித்து ஏற்பாட்டாளர்கள் குறிப்பிடுகையில், இளம் வீரர்களை ஊக்குவிக்கும்வகையில் இப்போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

தொடர்ந்தும் ஒவ்வொரு வருடமும் நடத்தப்படும். இதன் மூலம் எதிர்காலத்தில் சிறந்த கால்பந்தாட்ட வீரர்கள் உருவாகக்கூடிய வாய்ப்புக் கிடைக்கும் எனத் தெரிவித்துள்ளனர். (எஸ்.பி., 20)



போட்டியில் பங்குகொண்ட சகல வீரர்கள் விருந்தினர்களுடன் நிற்பதைக் காணலாம்

# வயாவிளான் மத்திய ம.வி. சம்பியன்



(அளவெட்டி)

தெல்லிப்பளைக் கோட்ட கால்பந்தாட்டத் தொடரின் 16 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் சம்பியனாகியது.

யாழ். தெல்லிப்பளைக் கோட்டப் பாடசாலைகளின் கால்பந்தாட்டப் போட்டிகள் அளவெட்டி அருணோதயக் கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

16 வயதுப்பிரிவினருக்கான இறுதிப் போட்டியில் வயாவிளான் மகாவித்தியாலயத்தை எதிர்த்து அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணி மோதியது.

முதல் பாதி ஆட்டத்தில் வயாவிளான் அணி வீரர் விஜிதரன் முதலாவது கோலினைப் போட்டார். இந்நிலையில், முதல் பாதி ஆட்டம் 1 : 0 என்ற கோல்கணக்கில் முடிவுற்றது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலய அணி தடுப்பாட்டத்தில் ஈடுபட்டது.இதனால் அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணி கோல் எதனையும் போட முடியவில்லை. ஆனாலும், வயாவிளான் மத்திய மகா வித்தியாலய வீரர் ரெலன்ஸன் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தனது அணிக்காக மேலும் ஒரு கோலினைப் போட்டார். இறுதியில் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் 2 : 0 என்ற ரீதியில் வெற்றிபெற்று சம்பியனாகியது. ஏற்கனவே 14 வயதுப் பிரிவுக்கான போட்டியிலும் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் சம்பியனானமை குறிப்பிடத்தக்கது. (93)

# சென்று வா மகனே வென்று வா



(யாழ்ப்பாணம்)

அவுஸ்ரேலியா அல்பேட்பார்க்கில் நடைபெறவுள்ள தடகள விளையாட்டுப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வீரன் இ.செந்தூரன் உயரம் பாய்தல் நிகழ்வில் பங்கேற்கின்றார். இவரது நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை அவுஸ்ரேலிய நேரப்படி பி.ப 2.30 மணிக்கு அல்பேட் பார்க்கில் நடைபெறவுள்ளது.

இவர் கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் 16 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான உயரம் பாய்தலில் 192 மீற்றர் உயரம் பாய்ந்து சாதனை முறியடிப்புச் செய்தவர் என்ப தும் குறிப்பிடத்தக்கது. இவருடன் எட்டு வீரர்கள் செல்கின்றார்கள். வடக்கில் இருந்து செல்லும் ஒரே ஒரு வீரர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது வெற்றிப் பயணத்திற்கான ஒத்துழைப்பை கல்லூரி அதிபர், விளையாட்டுத் துறைப் பொறுப்பாசிரியர், மற்றும் பயிற்சி நெறிப்படுத்தலையும் பயிற்சியினையும் க.சுவாமிநாதன், செ.றமணன் ஆகியோரும் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (93)

# மாகாண கால்பந்து துரையப்பாவில்

(யாழ்ப்பாணம்)

தேசிய கால்பந்தாட்ட அணிக்கு வீரர்களை இணைக்கும் மூன்றாம் கட்ட போட்டியான மாகாண மட்டப் போட்டி நாளையதினம் யாழ். துரையப்பாவிளையாட்டு மைதானத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

விளையாட்டுச் செய்திகள்

இப்போட்டிகள் கடந்த 31,1ஆம் திகதிகளில் வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

சீரற்றகால நிலை காரணமாக குறித்த நாட்களில் போட்டிகள் நடைபெறவில்லை.

இந்நிலையில் இப்போட்டி நாளையும், நாளை மறுதினமும் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

பங்குகொள்ளும் மாவட்ட அணிகளை குறித்த நேரத்திற்கு வருகை தருமாறும் போட்டி அமைப்பாளர் கேட்டுள்ளனர்.

(எஸ்.பி.)

# தேசிய மட்ட கராத்தே இறுதி நாள் இன்று

(கொழும்பு)

இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் நடத்தப்பட்டு வரும் தேசிய மட்ட கராத்தே போட்டியின் இறுதி நாள் போட்டிகள் இன்றைய தினம் இடம்பெறவுள்ளன.

இலங்கை கராத்தே சம்மேளனத்தின் ஏற்பாட்டில் தேசிய கராத்தே சுற்றுப்போட்டி கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நடைபெறவுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை தொடங்கிய இப்போட்டி இன்று வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ளது. இச்சுற்றுப் போட்டியில் 6 தொடக்கம் 13 வயதுக்கிடைப்பட்ட பிரிவி லும், 14 தொடக்கம் 15 வயது கடேற் பிரிவிலும், 16 தொடக்கம் 17 வயது கனிஷ்ட பிரிவிலும், 18 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரிவிலும் பட்டி நிறம். நிறை அடிப்படையில் போட்டிகள் நடைபெறுகின்றன.

இப்போட்டியில் இலங்கையின் 09 மாகாணங்களிலும் நடைபெற்று முடிந்த மாகாண மட்ட சுற்றுப் போட்டிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். இதில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த அதிகளவான வீர,வீராங்கனைகள் பங்குபற்றியுள்ளனர். இவர்களில் அதிகமானவர்கள் பதக்கங்களை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)



# கூட்டமைப்பிடம் ஒரு தெளிவான அரசியல் வேலைத்திட்டமோ, நிலைப்பாடோ ஆரம்பத்திலிருந்தே இல்லை

**– யதீந்திரா கட்டுரையிலிருந்து.**



தமிழ் தேசியக் கூட்டமைப்பு 13ஆவது திருத்தச் சட்டம் குறித்து எந்தவொரு தெளிவான நிலைப்பாட்டையும் இதுவரை வெளிப்படுத்தவில்லை. இத்தனைக்கும் கிழக்கு மாகாணசபையில் கூட்டமைப்பு போட்டியிட்டு எதிர்க்கட்சியாசனத்திலும் அமர்ந்திருக்கிறது. தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத் தலைவருமான இரா.சம்பந்தன் அவர்கள், இது குறித்து வாய் திறக்கும்வரை கூட்டமைப்பின் உத்தியோக பூர்வமான நிலைப்பாட்டை எவரும் அறிந்துகொள்ள முடியாது. ஏனெனில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்பது கொள்கை இணக்கம் காணப்பட்ட ஒரு அரசியல் அமைப்பு அல்ல. அது தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கூடிக் கலைவதற்கான ஒரு ஏற்பாடு மட்டுமே. ஆனால் சம்பந்தன் அவர்கள், 13ஆவது திருத்தச் சட்டம் நீக்கப்பட்டால், அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றவாறான எச்சரிக்கை குறிப்பொன்றை வழங்கியிருக்கின்றார். ஆனால் இவ்வாறான வீராவேச அறிக்கைகள் எவற்றையும் தற்போதைய மகிந்த அரசு பொருட்படுத்தப் போவதில்லை. தவிர இவ்வாறான வீராவேச அறிக்கைகள் அரசின் நிலைப்பாட்டை மேலும் வலுப்படுத்தவே பயன்படும்.

வரலாற்றின் முக்கியமான ஒவ்வொரு தருணங்களிலும் வீராவேச வசனங்களில் திருப்திகண்ட தமிழ் தலைமைகளின் தொடர்ச்சியான கூட்டமைப்பு, 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பிலும் அவ்வாறுதான் நடந்து கொள்ளப் போகின்றதா? 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான வீராவேச கருத்துக்களின் பின்னணியை அவதானித்தால் ஒரு விடயம் மறை பொருளாக இருக்கின்றது. அது இந்தியா பற்றியது. 13ஆவது திருத்தச் சட்டத்தை அரசு நீக்காது. ஏனெனில், இந்தியாவை அரசு பகைத்துக் கொள்ள விரும்பாது என்றவாறான ஒரு தமிழ்ப் புரிதலும் இருக்கிறது. இந்தியா தமிழர் பிரச்சினையில் மட்டுமல்ல இலங்கை தொடர்பான விடயங்களிலும் ஒரு தீர்க்கமான சக்தி என்பதில் மாறுபட ஒன்றுமில்லை. ஆனால் இந்தியாவின் இடம் பற்றி தமிழ் தலைமைகள் அறிந்து வைத்திருப்பதிலும் பார்க்க, சிங்கள தலைமைகள் அதிகம் அறிந்து வைத்திருக்கின்றன. இந்தியாவை மிகவும் நுட்பமாக கையாளும் ஆற்றல் சிங்கள இராஜதந்திரத்திற்கு இருக்கிறது.

இந்தியாவின் பிராந்திய நலனுக்கு இலங்கையின் நடவடிக்கைகள் பாதகமாக அமையுமிடத்து, இந்தியா எவ்வாறு நடந்து கொள்ளும் என்பதை அனுபவ ரீதியாக அறிந்திருக்கும் கொழும்பு, மாறியிருக்கின்ற உலக ஒழுங்கில் இந்தியாவின் ஆர்வங்கள் என்ன என்பதையும் அறிந்தே செயற்படுகிறது. இதற்காக இரவு பகலாக பணியாற்றுவதற்கான மூளைசாலிகளும் அரசாங்கத்தின் வசம் ஏராளம். இந்த நிலைமையை அப்படியே தமிழ் சூழலுக்கு பொருத்திப் பார்த்தால் எத்தனை பேர் தேறுவார்கள்? எனவே இந்தியா பின்-யுத்த இலங்கையில் எத்தகைய ஈடுபாட்டைக் கொண்டிருக்கின்றது என்பதை துல்லியமாக மதிப்பிட்டே கொழும்பு தனது நடவடிக்கைளை முன்னெடுத்து வருகின்றது. 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான சர்ச்சையும் இத்தகையதொரு பின்புலத்தில்தான் எழுந்திருக்கிறது. தற்போது வெறும் சர்ச்சையாக இருக்கின்ற மேற்படி விவகாரம், நடைமுறைக்கு வராதென்று தமிழ் தலைமை கணிப்பிடுமானால் அது தவறு.....

விடுதலைப் புலிகள் தமிழர் அரசியல் அரங்கிலிருந்து அகற்றப்பட்ட பின்புலத்தில் தமிழர் தலைமையான கூட்டமைப்பின் தலைவர்கள், கடந்த மூன்று வருடத்தில் ஒன்றுபட்டு தங்களது நிலைப்பாட்டை தற்செயலாகக்கூட தெரிவித்ததில்லை. தவிர, கூட்டமைப்பிடம் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பாக பகிரங்கப்படுத்தக்கூடிய எந்தவொரு திட்டமும் இல்லை. சமீபத்தில் இரா.சம்பந்தன் அவர்களது தலைமையில் புதுடில்லி சென்ற கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு, இந்திய பிரதமர் மன்மோகன் சிங் உள்ளிட்ட இந்திய அதிகார தரப்பினரை சந்தித்து திரும்பினர் என்பதுதான் பரவலான செய்தி. ஆனால் அங்கு மன்மோகன் சிங், உங்களின் முன்மொழிவு என்ன என்று கேட்டதற்கு எந்தவொரு ஆவணத்தையும் காண்பிக்க முடியாதவர்களாகவே மேற்படி குழுவினர் இருந்தனர் என்பது வெளிவராத செய்தி.

ஆரம்பத்திலிருந்தே தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் ஒரு தெளிவான அரசியல் வேலைத்திட்டமோ, தெளிவான அரசியல் நிலைப்பாடோ இருந்திருக்கவில்லை. கூட்டமைப்பின் அடிப்படையான சிக்கல் அதன் உருவாக்கத்தில் இருந்தே ஆரம்பிக்கின்றது. ஆரம்பத்தில் இயக்க அரசியலால் கையாளப்பட்ட கூட்டமைப்பு, 2009இல் இருந்து மிதவாத தலைமையால் வழிநடத்தப்பட்டு வருகின்றது. இதுவே இன்று கூட்டமைப்பிற்குள் நிலவும் அனைத்து பிரச்சினைகளுக்குமான காரணமாகும்.

எனவே இங்கு கூட்டமைப்பு என்பதே ஒரு பிரச்சினையாக மாறியுள்ள நிலையில், கூட்டமைப்பால் எந்தவொரு உருப்படியான திட்டத்தையும் முன்வைக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. தவிர ஆரம்பத்திலிருந்தே, கூட்டமைப்பு ஒரு தலைமைக்குரிய கம்பீரத்துடன் விடயங்களை கையாள முற்படவில்லை. இதன் விளைவு, கூட்டமைப்பு பல்வேறு முரண்பட்ட தரப்பினர்களையும் தாஜா பண்ண வேண்டிய நிலைமைக்கு ஆளானது. இதன் தொடர்ச்சியாகத்தான் இன்று 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் எந்தவொரு உறுதியான முடிவையும் பகிரங்கப்படுத்த முடியாத கையறு நிலை தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு ஏற்பட்டுள்ளது.

# லப்டப் பார்க்கும் டாக்டர் ரோபோ



இங்கிலாந்து ஆஸ்பத்திரியில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள ரோபோ டாக்டர், நோயாளிகள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

டாக்டரிடம் போகிறோம். என்ன செய்கிறார்? ஸ்டெதஸ்கோப் வைத்து பார்ப்பார். பீ.பி. செக் பண்ணுவார். நமது கண்ணை திறந்து பார்ப்பார். வாய்க்குள் டோர்ச் அடித்து சோதிப்பார். இந்த வேலைகளை எல்லாம் இங்கிலாந்தின் நியூரி நகரில் உள்ள டெய்சி ஹில் ஆஸ்பத்திரியில் ஒரு ரோபோ செய்கிறது. இந்த ரோபோ டாக்டரின் பெயர் "ஆர்பி 7". நோயாளியின் இரத்த அழுத்தம், நாடி துடிப்பு, இதய துடிப்பு ஆகியவற்றை அளவிடும் கருவிகள் இதில் இருக்கின்றன.

ரோபோ டாக்டரை ஆஸ்பத்திரியில் இருக்கும் ஊழியர்கள் இயக்கலாம். அல்லது, எங்கோ வீட்டிலோ, வெளியூரிலோ இருக்கும் "பெரிய" டாக்டர்கூட ஜோய் ஸ்டிக் உதவியுடன் இயக்க முடியும். அவர்கள் உத்தரவிட்டால், டாக்டர் ரோபோ மெல்ல நகர்ந்து நோயாளியின் படுக்கைக்கு அருகில் வருகிறது. பின்னர், அவர்களது கையை நீட்டச் சொல்லி நாடி பார்க்கிறது. அடுத்து, ஸ்டெதஸ்கோப் உதவியுடன் லப்டப் துடிப்பை பார்க்கிறது. பீ.பி. சோதிக்கிறது. இவை அனைத்தையும் ரோபோவில் இருக்கும் வெப்கமெரா உதவியுடன் டாக்டர் பார்ப்பார். ரோபோவின் மேல் பகுதியில் இருக்கும் மொனிட்டரில் டாக்டரின் முகம் தெரியும். தேவைப் பட்டால், நோயாளியின் கண்ணை அகலமாக விரிக்கச் செய்து சிவந்திருக்கிறதா, வேறு மாற்றங்கள் தெரிகிறதா என்றும் தனது நவீன கமெரா உதவியுடன் ரோபோ "கூர்ந்து" கவனிக்கும். இதையும் தன் இருப்பிடத்தில் இருந்தபடியே டாக்டர் பார்வையிடுவார். அவசர சிகிச்சை தேவைப்படும் நோயாளிகளுக்கு உடனடியாக தரவேண்டிய முதலுதவிகள், அவசர கால மருந்துகள் ஆகியவற்றை டாக்டர் அங்கிருந்தபடியே வழங்குவார்.

"ஆர்பி7 ரோபோ டாக்டரின் விலை ரூபா4.30 கோடி. மாரடைப்பு, ஸ்ட்ரோக் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டும் பிரசவ காலத்திலும் உயிருக்குப் போராடிய பலர் ஆர்பி7 உதவியுடன் காப்பாற்றப் பட்டுள்ளனர்" என்று டெய்சி ஹில் ஆஸ்பத்திரியின் இயக்குனர் டாக்டர் ஷேன் மோன் கூறுகிறார்.

இன் டச் ஹெல்த் என்ற நிறுவனம் ஆர்பி7 ரோபோவை விற்பனை செய்து வருகிறது. இங்கிலாந்தில் மேலும் 2 ஆஸ்பத்திரிகளில் விரைவில் ஆர்பி7 ரோபோக்கள் "பணியை" தொடங்க உள்ளன.

இமயமலையில் கோண்டில்யர் என்ற ஒரு ரிஷி, தவம் செய்து கொண்டிருந்தார். ஒரு நாள் அவர் கீழே இறங்கி வந்து காண்டீப நாட்டு ராஜ்யத்தை அடைந்தார். ரிஷியை வரவேற்று உபசரித்து, "என் நாட்டுக்கு நீங்கள் வந்தது, நான் செய்த பெரிய பாக்கியம்..." என்றான் அந்த நாட்டு ராஜா.

உடன் ரிஷி, "அது சரி... இது உன் ராஜ்யம் என்கிறாயே... இதற்கு முன் இது யாருடைய ராஜ்யமாக இருந்தது?" என்று கேட்டார். 'இந்த ராஜ்யம், என் தகப்பனாரிடமிருந்து எனக்கு வந்தது..." என்றான் ராஜா! "அதற்கு முன் இது யாரிடம் இருந்தது?" என்று கேட்டார் ரிஷி.

"இந்த ராஜ்யம் வேறு நாட்டைச் சேர்ந்த அரசனிடம் இருந்தது. போர் செய்து அந்த அரசனிடமிருந்து இந்த நாட்டை ஜெயித்தார் என் பாட்டனார். அந்த ராஜ்யம், இப்போது என்னிடம் உள்ளது..." என்றான் ராஜா!

அதற்கு, "இது, உன் பாட்டனாரின் சொத்து. அதை, என்னுடையது என்று நீ சொல்வது எப்படி சரியாகும்..." என்றார் ரிஷி விழித்தான் ராஜா.

அதே போல, இப்போது நாம் அனுபவிப்பதெல்லாம் இயற்கை கொடுத்தது; எல்லோருக்குமாகக் கொடுத்தது அதை நாம் அனுபவிக்கிறோம்.

அதனால், எதுவும் நிலையானதல்ல. இன்று நம்மிடம் இருக்கும் பொருள், வேறு ஒருவருக்கு நாளை சொந்தமாகலாம். அதனால், "இது என்னுடையது" என்று உரிமை கொண்டாடுவதில் அர்த்தமே இல்லை. இயற்கை கொடுத்ததை நாம் அனுபவிக்கிறோம். அனுபவ காலம் முடிந்ததும், அது நம்மை விட்டுப் போய் விடுகிறது. இப்படி எந்தப் பொருளையும் நம்முடையது, என்னுடையது என்று சொல்வது சரியில்லை; அது சரியுமில்லை.



# வெற்றியின் இரகசியம் 01

சி. அருண்பரத்

“நம்மால் முடியாது” என்று, நம் உயரத்தை நாமே குறைத்துக் கொள்ளாமல், நமக்குள் இருக்கும் மாபெரும் சக்தியை நம்புவோம். நம் வளர்ச்சி, பெரிய ஆலமரமாக விஸ்வரூபம் எடுப்பதற்குத் தேவையானதெல்லாம், நம் மனதில் மாற்றம் ஏற்படுத்தக்கூடிய, “எண்ணம்” என்கிற சிறிய விதை. இந்தத் தொடரைத் தொடர்ந்து படிக்கும்போது, அந்த விதை உங்கள் மனதில் விழுந்து, வேர் ஊன்ற ஆரம்பித்து விடும்.

நம் ஒவ்வொருவர் வாழ்க்கைக்கும் அர்த்த முண்டு. புல், பூண்டு மற்றும் விட்டில் பூச்சி போல, “பிறந்தோம், வாழ்ந்தோம், இறந்தோம்” என்று இல்லாமல், நாம் வாழ்ந்ததற்கு அடையாளமாக எதையாவது சாதித்து விட்டுச் செல்ல வேண்டும். மனிதன் பறவையைப் போல பறக்க இயலாது, யானை அளவுக்கு பலம் கிடையாது, சிறுத்தை அளவுக்கு வேகமாக ஓட முடியாது. ஆனால், எந்த விலங்கினத்திற்கும் இல்லாத சக்தி மனிதனுக்கு உண்டு. அது தன் சிந்தனாசக்தியின் மூலம், தன்னுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளும் சக்தி.

“நம் வாழ்க்கை நம் கையில்” என்று நம்புவோம். நம் இன்றைய நிலை, நாம் இதுவரை எடுத்த முடிவு-களின் விளைவுதான். நாம் இன்று எடுக்கப் போகும் முடிவு மற்றும் எடுத்த முடிவைச் செயலாக்கும் விதம்தான் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போகிறது.

நம் வருங்காலக் கதை, திரைப்படமாக வரப் போகிறது என்று வைத்துக் கொள்வோம்... அதில், நாம்தான் கதாநாயகன் அல்லது கதாநாயகி. அந்தத் திரைப் படத்திற்குத் திரைக்கதை எழுதும் பொறுப்பு நம்மிடம் ஒப்படைக்கப்பட்டால் எப்படியிருக்கும் எனக் கற்பனை செய்து பாருங்கள். அந்தத் திரைக்கதை நிஜமாகும் என்ற நம்பிக்கையோடு, இன்றே எழுதத் தொடங்குங்கள்.

சராசரி எண்ணங்கள் என்ற சங்கிலி நம்மை, “சாமானியர்” என்கிற கூண்டுக்குள் கைதியாக வைத்திருக்கிறது. இந்தத் தொடர் உங்களைக் கூண்டை உடைத்து விடுதலை செய்யும். இந்த பரந்து விரிந்த உலகம், உங்களின் கால் தடம் பதிந்து, வெற்றி பெறக் காத்துக் கிடக்கிறது. நீங்கள் தேர்ந்தெடுத்த துறையில், வெற்றிபெற சரியான தருணம் வந்து விட்டது.



வெற்றியின் இரகசியத்தை அறிந்து கொள்வதற்கு முன், உங்களின் உள் மனதை அறிந்து கொள்வது மிகவும் அவசியம். உங்களைப் பொறுத்தவரையில், “வாழ்க்கையில் வெற்றி என்பதற்கு என்ன அர்த்தம்? யார் வெற்றி பெற்றதாக நீங்கள் கருதுகிறீர்கள்?” என்ற கேள்விகளுக்கு, தெளிவான பதில் இருக்க வேண்டும். நீங்கள் வெற்றி பெறுவதற்கு தேவை, கல்வியா, பணமா, பதவியா, புகழா, அந்தஸ்தா, மகிழ்ச்சியான உறவா அல்லது எல்லாம் கலந்த கலவையா? எல்லாம் தேவையென்றால் எது எந்த அளவுக்கு முக்கியம்? இதில் குழப்பம் என்றால் உங்களைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்ளுங்கள். “உன்னை அறிந்தால், நீ உன்னை அறிந்தால் உலகத்தில் போராடலாம்...” என்ற திரைப்படப் பாடலைக் கேட்டிருப்பீர்கள். வெற்றிப் பாதையில் நாம் கடக்க வேண்டிய முதற்படி, நம்மை நாமே புரிந்து கொள்வது. ஏனென்றால், நம்மைப் பற்றி, நம் மனதில் வரைந்து வைத்துள்ள சுயசித்திரம்தான், ஒரு நாள் நிஜமாகப் போகிறது.




தொடரும்....

# அன்றைய யாழ்ப்பாணத்தில் தீண்டாமை

அன்றைய யாழ்ப்பாணத்தில் சாதிப் பாகுபாடும் தீண்டாமையும் மிகு மோசமாக இருந்தது பற்றி இன்றைய சந்ததியினர் அறிந்திருக்க மாட்டார்கள். தீண்டாமைக் கொடுமை பற்றிய எத்தனையோ சம்பவங்கள் வரலாற்றில் பதிவாகியிருக்கின்றன. அவற்றுள் இரண்டு சம்பவங்களைப் பார்ப்போம்.

1930 ஆம் ஆண்டு கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் வெள்ளாள மாணவர்களும் தாழ்த்தப்பட்ட மாணவர்களும் சமமாக இருந்து உணவு உண்பதற்கு அனுமதிக்கப்பட்டனர். சைவ வேளாளப் பிரமுகர்கள் இதைக் கடுமையாக ஆட்சேபித்தார்கள். சேர் பொன்னம்பலம் இராமநாதனின் தலைமையில் மூன்று இந்து அரசியல்வாதிகள் ஆளுநரைச் சந்தித்து இந்து மதக் கோட்பாட்டுக்கு விரோதமான இந்த அனுமதியை இரத்துச் செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்கள்.




தாழ்த்தப்பட்டவர்கள் பஸ்களில் ஆசனங்களில் இருந்து பிரயாணம் செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து 1933 ஆம் ஆண்டு பஸ் சாரதிகள் வேலை நிறுத்தம் செய்தார்கள். அக்காலத்தில் உயர் சாதியா-கச் சொல்லப்பட்டவர்களே பஸ் சாரதிகளாக இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவின் குடியரசு தினம்

ஜனவரி 26 ஆம் திகதி இந்தியாவின் குடியரசு தின-மாகக் கொண்டாடப்படுகின்றது. இத்தினத்தைக் குடியரசு தின-மாகக் கொண்டாடுவதற்கு ஒரு வரலாற்றுப் பின்னணி உண்டு.

சுதந்திரப் போராட்ட காலத்தில் காங்கிரஸ் இயக்கம் நிறைவேற்றிய ஒரு தீர்மானத்துக்கமைய 1930 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஜனவரி 26 ஆம் திகதியும் இந்திய மக்கள் அனைவரும் தத்தமது ஊர்களில் கூடிப் பிரித்தானிய ஆட்சியிலிருந்து இந்தியா சுதந்திரம் அடைவதற்குப் பாடுபடுவோம் என்று உறுதிமொழி எடுத்து வந்தனர். இந்த வழக்கத்தை நினைவுகூரும் வகையில் இந்தியாவின் குடியரசு அரசியலமைப்பு 1950 ஜனவரி 26 ஆம் திகதி நடைமுறைக்கு வந்தது. அந்தத் தினமே குடியரசு தினமாகக் கொண்டாடப்படுகின்றது.





# டணால் K.A.தங்கவேலு

- R.P. ராஜநாயஹம் -

டணால் K.A.தங்கவேலு தமிழ் திரையுலகம் கண்ட விசேஷமான காமெடியன். 1950களில் சரியான மார்க்கெட்டில் சந்திரபாபுவுடன் இருந்த காலம் தொடங்கி, பின்னால் நாகேஷ் காலம், சோ, பின் தேங்காய் சீனிவாசன், சுருளிராஜன் காலங்களையும் தாண்டி கொஞ்சமும் சலிப்பு ஏற்படுத்தாத, பொறி சற்றும் குறையாத நடிப்பு.

கல்யாணப் பரிசு பைரவன் மட்டுமல்ல. அறிவாளி முத்துலட்சுமியுடன் பூரி சுடும் காமெடி, தெய்வப்பிறவி “அடியே, நீ என்ன சோப்பு போட்டாலும் வெள்ளையாக மாட்ட”

வீரக்கனல் படத்தில் “தப்பித்தவறி அடி ஒங்க மேல பட்டுறுச்சின்னு வச்சிக்க்க்கிங்ங்ங்...க..” என்று கேட்கும் தங்கவேலு.

“தங்கவேலு சுவாமியாக வந்ததும் நாங்களே! வேலுத்தங்கமாக வந்ததும் நாங்களே! காதலர்ர்ர்ரா...க வந்ததும் நாங்களே!” அடுத்தவீட்டுப்பெண்!

மிஸ்ஸியம்மாவில் பாட்டு கற்றுக் கொள்ளும் தங்கவேலு. அப்போது ஜெமினி அந்த அறைக்குள் வந்தவுடன் வெட்கப்பட்டு தவிக்கிற காட்சி!

“திருடாதே” படத்தில் “பிசாசு ஏன் புரோட்டா கடைக்கு வருது? ஒரு வேளை குஞ்சு பொரிச்சிருக்குமோ?...”


சந்தானம் தனக்கு பிடித்த காமெடியன்களாக தங்கவேலுவையும் கவுண்டமணியையும் அடிக்கடி குறிப்பிடுவது சந்தோசம். இந்த இருவரும் நகைச்சுவையில் மிகவும் மாறுபட்ட சிகர சாதனையாளர்கள்.

கவுண்டமணி “மேட்டுக்குடி” படத்தில் ஜெமினி கணேசனை “டேய்” என்பதற்கும் கல்யாணப் பரிசில் தங்கவேலு ஜெமினியை “டேய்” என்றதற்கும் மிகப் பெரிய வித்தியாசம் இருக்கிறது.

சந்தானம் தன் நடிப்புக்கு கவுண்டமணியை பின்பற்றுவது தெரிகிறது.

தங்கவேலு எந்தப் படத்திலும் கல்யாணப் பொண்ணு மாப்பிள்ளையைப் பார்த்து “இவ என்ன யாரோடயாவது ஓடிப் போயிட்டாளா? இல்ல இவன் தான் செத்துப் போயிட்டானா?” என்று கேட்கவே மாட்டார். தொந்தரவான வில்லனைக் கூட “அட நீ நல்லாருக்க” என்பார்.

“பணம்”(1952) படத்தில் வயதானவராக நடித்த பின் தான் தங்கவேலு பிசியான நடிகரானார். அதே வருடம் தான் சிவாஜிக்கு “பராசக்தி”. “பணம்” சிவாஜிக்கு இரண்டாவது படம்!



“பணம்” படத்தில் நடித்ததற்காக தயாரிப்பாளர் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அந்தகாலத்தில் தங்கவேலுவுக்கு 5000 ரூபாய் கொடுத்தாராம். இவரும் அந்தப் பணத்தை வீட்டுக்கு கொண்டு போய் காட்ட, இவருடைய பெரியப்பா “அடப் பாவி, அன்னமிட்ட வீட்டுல கன்னமிடலாமாடா? கலைவாணர் கிட்ட திருடினா நீ விளங்கவே மாட்ட”ன்னு அடிச்சு இழுத்துக்கொண்டு என்.எஸ்.கே விடம் அழைத்துக்கொண்டு போனார். என்.எஸ்.கே “அந்தப் பணம் தங்கவேலுவுக்கு நான் கொடுத்த சம்பளம்” என்று சொன்ன போது தான் சமாதானம் ஆனாராம்.



எம்.ஜி.ஆர் அறிமு-கமான சதி லீலாவதி(1936) யில் தங்கவேலுவுக்கு ஒரு சின்ன ரோல். சதிலீலாவதிதான் எம். ஜி.ஆர்., தங்கவேலுவுக்கு மட்டுமல்லாமல் என்.எஸ். கே, டி.எஸ் பாலையா ஆகியோருக்கும் முதல்படம். “இன்னைக்கு உன்னை shoot பண்ணப் போறோம்”னு இயக்குனர் தங்கவேலுவிடம் சொன்னதும் இவர் பதறிப் பயந்து என்.எஸ்.கே விடம் போய் “அண்ணே, என்னை சுடப் போறாங்களா?” என்று அழுதாராம்.

என்.எஸ்.கே விளக்கம் சொன்னாராம். “பைத்தியக்காரா! உன்னை படம் பிடிக்கப் போறாங்கடா!”

தங்கவேலுவுக்கு பின்னணி பாடல்கள் பலவற்றை பாடியவர் எஸ்.சி.கிருஷ்ணன்.

“கண்ணே நல்வாக்கு நீ கூறடி, நான் நாலு நாளில் திரும்பிடுவேன்.

என் செல்வக்களஞ்சியமே! என் சின்னக்கண்ணு மோகனமே!”

சீர்காழி சில பாடல்கள். பிரபலமான ரம்பையின் காதல்(1956) பாடல்! “சமரசம் உலாவும் இடமே நம் வாழ்வில் காணா சமரசம் உலாவும் இடமே” சுடுகாட்டில் தங்கவேலு பாடுவதாக காட்சி.

பி.பிஸ்ரீனிவாஸ் பாடிய அடுத்த வீட்டுப்பெண் பாடல்கள்.

“கண்ணாலே பேசி பேசி கொல்லாதே!”

“மாலையில் மலர்ச்சோலையில்”

வாரம் ஒரு பாடசாலை




# யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்

## எமது பாடசாலை...

சிவபூமியென திருமூலரால் சிறப்பிக்கப்பட்ட இலங்கைத் தீவின் "இலங்கையின் சிரசு" என சோமசுந்தர புலவரால் சிறப்பிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தின் பழமை வாய்ந்த பாடசாலைகளில் ஒன்றாக யா/பெரியபுலம் மகாவித்தியாலயம் திகழ்கின்றது.

பிரித்தானியாவிலிருந்து கிறிஸ்தவ மதத்தைப் பரப்பும் நோக்குடன் இலங்கை வந்த ஜேம்ஸ் லிங்ஸ் என்பவரால் 1823ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி மெதடிஸ்த மிஸன் தமிழ்க கலைவன் பாடசாலை என்ற பெயருடன் தற்போதய பெரியபுலம் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

1923 – 1937 வரையான காலப்பகுதியில் இப் பாடசாலையின் வரலாற்றுப் பதிவுகள் எவையும் கிடைக்கப்பெறாமையினால் ஒரு இருண்ட காலப் பகுதியாகவே காணப்படுகின்றது. 1937ஆம் ஆண்டு திருவாளர் எஸ். ரி. தம்பித்துரை அதிபராகப் பதவியேற்று 2 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். 1939ஆம் ஆண்டு திருவாளர் எஸ். நல்லையா. இரண்டு ஆண்டுகள் அதிபராகப் பணிபுரிந்துள்ளார். பின் 1941ஆம் ஆண்டு திருவாளர் கே.எஸ். திரவியம் அதிபராகி நீண்ட காலம் இப்பாடசாலையை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் சென்றுள்ளார். இவரது காலத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் கல்விப் பிரிவான "யுனெஸ்கோ" அகில இலங்கை ரீதியில் நடத்திய நடனப் போட்டியில் இப் பாடசாலையின் அரிவு வெட்டு நடனம் அகில இலங்கை ரீதியில் 1ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டதுடன் அப்போதைய கல்வி அமைச்சரான திரு. ப. தகநாயக்கா அவர்களின் நேரடிப் பாராட்டினையும் பெற்றுக் கொண்டது. இக் காலத்தில் 147 மாணவர்களே இப் பாடசாலையில் கல்வி கற்றனர்.

1963.12.23.இல் இலங்கையில் ஏற்பட்ட சூறாவளியின் காரணமாக இப்பாடசாலையின் கட்டடங்கள் தரைமட்டமாகின. இந்நிலையில் பெற்றோர்கள் தாமாகவே முன்வந்து தற்காலிக கொட்டில்களை அமைத்தனர். அதோடு பாடசாலை அபிவிருத்திச் சங்கமானது நாடக விழா ஒன்றை நடத்தி 200 சதுர அடி கொண்ட கட்டடம் ஒன்றையும் அமைத்தது.

இக் காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் சேர். பொன். இராமநாதனால் ஆண்களுக்கென நிறுவப்பட்ட பரமேஸ்வராக் கல்லூரி யாழ். பல்கலைக் கழகமாகத் தரமுயர்த்தப்பட்டமையால் இக் கல்லூரியில் கற்ற ஏறத்தாள 500 மாணவர்கள் இப் பாடசாலையுடன் இணைக்கப்பட்டனர்.

ஆரம்ப காலத்தில் 1–5 வகுப்புக்களே இருந்தன. 1955ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரம் வரை ஆரம்பிக்கப்பட்டது. 1980ஆம் ஆண்டு உயர்தரம் வரை ஆரம்பிக்கப்பட்டது.

1982ஆம் ஆண்டு ஆர்.வசந்தி என்ற மாணவி பல்கலைக்கழகத்திற்கு அனுமதியைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. திருவாளர் எஸ். திரவியம் அதிபராக இருந்த காலத்தில் வெஸ்லி, பெஞ்சமின், வைபர் ஆகிய மூன்று மாணவர் இல்லங்கள் இருந்தன. பின்னர் திருவாளர் சிவபாத சிங்கம் காலத்தில் கம்பன், பாரதி, வள்ளுவன் என்று பெயர் மாற்றப்பட்டது.

1989ஆம் ஆண்டு இப்பாடசாலை முதல்வராக கந்தையா கணகசிங்கம் அவர்கள் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.இவருடைய காலத்தில் 4 இல்லங்களாக மாற்றப்பட்டு குளக்கோட்டன், சங்கிலியன், எல்லாளன், பண்டாரவன்னியன் எனப் பெயர் சூட்டப்பட்டது.

இக் காலத்தில் ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்றனர். 1991ஆம் ஆண்டு நாட்டில் நடந்த போர்ச்சூழல் காரணமாக இப்பாடசாலையில் 104 குடும்பங்கள் தஞ்ச மடைந்தன. 1992ஆம் ஆண்டு முதன்முறையாக இப்பாடசாலையில் ஒன்று கூடல் நிகழ்வு நடைபெற்றது. இவரது காலத்தில் தமிழ்மன்றம், இந்துமன்றம், ஆங்கிலமன்றம், தொழில்நுட்ப மன்றம், கணித, விஞ்ஞானமன்றம் என பல்வேறு மன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டு இணைபாடவிதான செயற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டன. இவரது காலத்தில் 120 அடி நீளமும் 30 அடி அகலமும் கொண்ட 1000பேர் அமர்ந்து நிகழ்வுகளை பார்க்கும் மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டதோடு, 2006 .08.09ஆம் திகதி கனகசிங்கம் மண்டபமென பெயர்சூட்டி பாடசாலை மண்டபத்தினைத் திறந்து வைத்தமை குறிப்பிடத்தக்கது.


2000ஆம் ஆண்டு தமிழ்தினப் போட்டியில் செல்வி. ந. நிரோசிகா தனி நடனப்போட்டியில் மாகாணமட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டதுடன், பாடசாலை வில்லிசை குழுவும் மாகாண மட்டப்போட்டியில் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது. 2001ஆம் ஆண்டு தனி நடனப் பிரிவு 1இல் செல்வி பா.கீர்த்தனா மாகாணமட்டப்போட்டியில் 3ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டார். 2003ஆம் ஆண்டு செல்வன் பா.அனோஜன் மாகாணமட்ட தனி நடனப் போட்டியில் 2ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டார். இவர் மீண்டும். 2004ஆம் ஆண்டு தேசியமட்டப்போட்டியில் பிரிவு 4இல் 2ஆம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார். செல்வன் செ.சிறிகண்ணன் தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகியபோதும் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ் நிலை காரணமாகப் போட்டியில் பங்குபற்ற முடியவில்லை.

கல்வியியற்கல்லூரியினால் முதன் முறையாக நடத்தப்பட்ட 'அழகெழல்' போட்டியில் இப்பாடசாலை தனி நடனத்தில் 1ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.


செல்வி' அ. கந்தையா அதிபராக இருந்த காலத்தில் சிறுவர் நாடகத்துறை வளர்ச்சி பெற்றமை குறிப்பிடத்தக்கது. இலக்கிய நாடகம், நாட்டிய நாடகம், வில்லுப்பாட்டு போன்ற போட்டிகளில் பெரியபுலம் பங்கு கொள்கின்றது என்றால் பெரிய பாடசாலைகள் கூட கலங்கி நிற்கும் அளவிற்கு பெரியபுலம் வெற்றிவாகை சூடியது. வித்தியாலயத்தின் க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவியான செல்வி ச. தட்சாயினி சைவபரிபாலனசபை நடாத்திய உயர்தர மாணவர்களுக்கான எழுத்துப் போட்டியில் தங்கப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார். இதேபோட்டியில் செல்வன் ச.சச்சிதானந்தன் வெண்கலப்பதக்கத்தினைப் பெற்றுக்கொண்டார். மனித உரிமைகள் பாதுகாப்பு தொடர்பாக அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட கட்டுரைப்போட்டியில் செல்வி ச.சஞ்சிகா முதலாம் இடத்தைப்பெற்று 25,000ரூபா பணப்பரிசினையும் தட்டிச் சென்றார்.இவரது காலத்தில் பல மாணவ மாணவிகள் பல்கலைக்கழகத்திற்கும் கல்வியியற்கல்லூரிக்கும் அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




இன்ரறக்ட் கழக உறுப்பினர்களுடன் ஆளுநர்



அதிபர், ஆசிரியர்கள்.



## அதிபர் திரு.செ.இளங்கோ

இவர் 2012ஆம் ஆண்டு அதிபராக பாடசாலையில் கடமையேற்றவர். இவர் வந்த காலம் தொட்டு பல அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இவர் வந்த காலத்தில் துரித கல்வி வளர்ச்சி காணப்பட்டது. இன்னும் பல வேலைத்திட்டங்கள் இவரால் மேற்கொள்ளப்படவிருக்கிறது. இவருடைய வேலைத்திட்டங்களை இலகுவாக்கி பாடசாலையின் கல்வி வளர்ச்சி மேன் மேலும் ஓங்க அயலவர்கள், பெற்றோர்கள், வெளிநாடுகளில் உள்ள புலம்பெயர்தமிழர்கள், பழைய மாண்வர்கள், நலன் விரும்பிகள் ஒன்றிணைந்து அதிபருக்கு துணையாகஇருந்து செயற்பட்டு வருகின்றனர்.

# சனநெரிசலைப் பயன்படுத்தி திருடர்கள் கைவரிசை

(புதுக்குடியிருப்பு)

யாழ். வைத்தியசாலை வாசல்களில் நோயாளர்களைப் பார்வையிடும் நேரத்திற்கு பார்வையாளர்களை உள் அனுமதிக்கும் போது, அங்கு ஏற்படும் சன நெரிசல்களைப் பயன்படுத்தி 'ஜேப்படித் திருடா கள்' தங்கள் கைவரிசையைக் காட்டுவதாக பொது மக்களால் முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் யாழ். வைத்தியசாலையில் உள்ள 26 ஆம் இலக்க விடுதியொன்றில் அனுமதிக்கப்பட்டிருந்த தனது கணவனை, வடமராட்சி ஊறணிப் பகுதியைச் சேர்ந்த திருமதி பாலசுந்தரம் யோகமலர் என்பவர் பார்வையிடச் சென்ற போது, வைத்தியசாலை வளாகத்தின் வாசலொன்றில் சன நெரிசல்களின் மத்தியில் இவரது கையில் இருந்த பையில் உள்ள சிறுபொதியை திருடர்கள் சாதுரியமாகத் திருடிச் சென்றதாகக் கூறப்படுகிறது.

நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற இச்சம்பவத்தில் 15 ஆயிரம் ரூபா பணம், கைத் தொலைபேசி மற்றும் கணவன் - மனைவி இருவரினதும் தேசிய அடையாள அட்டைகள் என்பன திருடப்பட்டுள்ளன. சமீபகாலமாக யாழ். வைத்தியசாலையை அண்டிய பகுதிகளில் இவ்வாறான ஜேப்படித்திருடர்களின் கைவரிசை மேலோங்கிக் காணப்படுவதாக பொதுமக்களால் முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது. (138)

# வடமாகாண அபிவிருத்தி ஜப்பானிய தூதுவர் ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர். நோபுகிட்டோ கோபோ மற்றும் தூதரக முதன்மைச் செயலாளர் ஹமடா ஆகியோர் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியை கொழும்பு -பத்தரமுல்லையிலுள்ள ஆளுநர் உப அலுவலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை சந்தித்து கலந்துரையாடினர்.

இலங்கை - ஜப்பான் நாடுகளுக்கிடையிலான 60 ஆண்டு கால நட்புறவை வெளிக்காட்டும் முகமாக ஜப்பானிய கலாசார விழா எதிர்வரும் 16,17 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழா ஏற்பாடுகள் தொடர்பாக ஜப்பானிய தூதுவரும் வட மாகாண ஆளுநரும் கலந்துரையாடினர்.

கலந்துரையாடலின் போது வட மாகாண மக்கள் தமது அன்றாட வாழ்வில் எவ்வாறு சமாதானத்தின் நன்மைகளை அனுபவிக்கிறார்கள் என்றும் எவ்வாறு வட மாகாணம் அரசாங்கத்தின் அபிவிருத்தி திட்டங்களின் மூலம் அபிவிருத்தி செய்யப்படுகின்றது என்றும் ஆளுநர் விளக்கினார்.

16 ஆம் திகதி 'வங்கோ' என்ற ஜப்பானிய திரைப்படம் மாலை 4.30 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் திரையிடப்படவுள்ளது. 17 ஆம்திகதி மாலை 4.30 மணிக்கு கெய்கோ ஹோபயாசி என்ற ஜப்பானிய இசைக் கலைஞரின் இசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குழாய்பொருத்தும் நடவடிக்கை

குடிநீர் இன்றி அல்லற் பட்ட வேலணை முருகன் கோவில் வீதிப் பகுதியில் வாழும் பொதுமக்களுக்கு நேற்று முன்தினம் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்குவதற் கென குழாய்கள் பொருத்தும் வைபவம் இடம்பெற்றது.

இந் நிகழ்வை ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன் வேலணை பிரதேச சபையின் தவிசாளரும் வேலணை பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளருமான சி.சிவராசா (போல்) ஆகியோர் இணைந்து ஆரம்பித்து வைத்தனர்.

இதில் அப் பகுதி மக்களுடன் ஈ.பி.டி.பி. புங்குடுதீவுப் பகுதி அமைப்பாளர் நவம் மற்றும் வேலணை பிரதேச சபையின் உறுப்பினர் ஜெ.ஜெயரஞ்சன் ஆகியோரும் கலந்து கொண்டு மேற்படி பணிகளுக்கு உறுதுணையாகச் செயற்பட்டனர்.



# வடபகுதி புகையிரதப் பணிகள் மூன்று கட்டங்களாக முன்னெடுப்பு

(கிரு -சிகரம்)

வடக்கையும், தெற்கையும் இணைக்கும் வட பகுதி புகையிரத பாதையின் நிர்மாணப் பணிகள் மிகவும் துரிதகதியில் நடைபெற்று வருவதாகவும், ஓமந்தையிலிருந்து பளை வரையான புகையிரதப் பாதையிலுள்ள வளைவுகள் குறைக்கப்படுவதன் காரணமாக மணிக்கு 100 கிலோ மீற்றர் வேகத்தில் புகையிரத்தை சேவையில் ஈடுபடுத்த முடியுமெனவும் புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தப் பணிகள் 185 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் மூன்று கட்டங்களாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. ஓமந்தையிலிருந்து மாங்குளம் வரையில் முதல் கட்டப்பணியும், மாங்குளத்திலிருந்து பளை வரை இரண்டாவது கட்டப் பணியும், பளையிலிருந்து காங்கேசன்துறை வரை மூன்றாவது கட்ட பணிகளுமாக புகையிரதப் பாதையின் நிர்மாணப் பணிகள் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசின் உதவித் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் புகையிரதப் பாதையின் நிர்மாணப் பணிகளை துரிதமாக பூர்த்தி செய்து காங்கேசன் துறை வரையில் விரைவாக புகையிரதச் சேவையை மேற்கொள்வதே அரசாங்கத்தின் நோக்கம் எனவும் புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (03)

# பதிவிறக்கப் பெட்டகம்

நீ பார்த்தாயா
என் தூக்கத்தின் டைரியை
அதில் என்
அடையாள அட்டை
தொலைபேசி எண்கள்
சில கணக்குகள்
குறித்து வைத்திருந்தேன்
அதற்காக வெல்லாம்
தேடவில்லை அதை.
ஒரே நேரத்தில்
நான்கு திசைகளிலும்
ஊர்ந்து கொண்டிருக்கும்
பாம்பு ஒன்றின்
படத்தை, அதில்
ஒட்டி வைத்திருக்கிறேன்
அதைப் பார்க்க வேண்டும் போலிருக்கிறது எனக்கு.

**– தேவதச்சன்**

நின்று நின்று
வரிசையை நகர்த்தும்
எறும்புகளுக்குத் தெரிந்திருக்கும்
அருகில் வரும் சக
எறும்பிலொரு வித்தியாசம்.

**– பா.வெங்கடேசன்**

அன்று
மறதியில்
இன்று
போதையில்
செருப்புத் தொலைவது மட்டும்
மாறவே இல்லை.

**– விக்ரமாதித்யன்**

உனக்கெனப்பட்ட உணவைத் தேடி
மேய்ந்து கொண்டிருந்தாய் உன் உறவுகளோடு
இறைஞ்சுகின்ற முழு வெளிப்பாட்டுத் தோற்றத்துடன்
கீழிறங்கி உன் மேல் கைகளை வைத்துத் தடவுகிறேன்
பன்றி அழகுதான்
கற்பிதங்களை உலவ விட்ட மனிதர்களை விட.

**– முனியப்பராஜ்**

தேடிக் கொண்டிருப்பது போல்
வீசும்
உப்பங்காற்று.
கடற்கரை மணலில்
யாருமில்லை.
அனாதையாய்
அலைகள் புலம்பும்.
எங்கிருந்தோ
அதைக் கேட்டு
நிலத்திலிருந்து
ஒரு அலை
குரைத்துக் கொண்டே
கடலை நோக்கி
ஓடும்.

**– கு.அழகர்சாமி**

எல்லோரும் புழுதியைத் துடைத்துவிட்டு
உட்கார்கிறார்கள்
நான் புழுதியின்மீதே உட்காருகிறேன்
நானும் புழுதி என்பதும் ஒன்று
என் மேலும் படியட்டும் புழுதி என்பது
இன்னொன்றாக இருக்கலாம்
உலகத்தில் துடைக்க முடியாதது
எவ்வளவோ வேறு இருக்கிறது
என்னையும் புழுதியையும் தவிர.

**– கல்யாண்ஜி**

சிறு நண்டு மணல் மீது
படம் ஒன்று கீறும்
சிலவேளை அலை வந்து
அதைக் கொண்டு போகும்

**– மஹாகவி**

போட்டோ எடுக்கையில்
என்னையே பார்த்தார்கள்
போட்டோவை காட்டுகையில்
தன்னையே பார்த்தார்கள்.

**– சி.சு.செல்லப்பா**

மகாலட்சுமி மாதிரி
நீ இருக்கிறாய்
யார் மாதிரி
மகாலட்சுமி இருக்கிறாள்?

**– காளிதாஸ்**

பொழுதுகளோடு நான் புரிந்த
யுத்தங்களையெல்லாம் முடித்துவிட்டு
நான் உன்னருகே வருகிறேன்
அமைதி என்பது மரணத்தறுவாயோ?
வந்தமர்ந்த பறவையினால் அசையும் கிளையோ?
வாழ்வின் பொருள் புரியும்போது
உலக ஒழுங்குமுறையின் லட்சணமும்
புரிந்துவிடுகிறது
அமைதி என்பது
வாழ்வின் தலைவாயிலோ?
எழுந்துசென்ற பறவையினால்
அசையும் கிளையோ?

**– தேவதேவன்**

மோசம் [அவள் கூறினாள்]
ஆடை களையும் கணம்
அச்சமயம்
அவர்களின் வெறித்த
பார்வைக்கடியில்
அவள் கண்டுபிடித்தாள்
அவர்கள் பற்றிச்
சகலத்தையும்.

**– ரெய்னர் குன்ஸ்**

சற்றைக்கு முன்னே
ஜன்னல் சட்டமிட்ட வானில்
பறந்து கொண்டிருந்த
பறவை எங்கே?
அது
சற்றைக்கு முன்
பறந்து கொண்
டிருக்கிறது.

**– ஆனந்த்**

நஞ்சருந்தியோ சுருக்கிட்டோ
தற்கொலைக்கு முனையும் பெண்கள்
முன் எச்சரிக்கையுடன் உள்ளாடைகளை
மறக்காமல் அணிந்துகொள்கின்றனர்

**– மாலதி மைத்ரி**

இரவு முடிந்துவிட்டது
என் கதை மட்டும்
முடியவில்லை
அதற்காக
இரவை நான் எப்படி
நொந்துகொள்ள முடியும்?

**– சூஃபி கவிதை**

எனக்கு வெளியில்
மொத்த உலகமும் யுத்தத்திலும்
கனவிலும் சுழல்கிறது.
ஆனால் எனக்குள்ளேயும்
அதன் குரல் எதிரொலிக்கிறது
எனக்கு வெளியில்
அவர்கள் காதலிக்கிறார்கள் கொல்கிறார்கள்
இலட்சக்கணக்கானவர்களைப் பிறப்பிக்கிறார்கள்
ஆனால் எனக்குள்ளேயும்
காதல் – கொலை – பிறப்பு
எல்லாம் இயங்கிக்கொண்டேயிருக்கின்றன.

**– மிமோஸா அஹ்மதி**

# மன்னாரில் திருப்தியளிக்காத டெங்கு குறித்த வேலைத்திட்டம்

## — சுகாதார வைத்திய அதிகாரி விசனம் —

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் டெங்கு தொடர்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத் திட்டங்கள் திருப்திகரமானதாக இல்லை என மன்னார் மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியகலாநிதி ஜீ.குணசீலன் தெரிவித்தார். மன்னார் மாவட்டச் செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை டெங்கு தொடர்பான கலந்துரை யாடல் இடம் பெற்ற போதே அவர் அவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் பெய்த கடும் மழையினைத்தொடர்ந்து கடந்த 2 வாரங்களுக்குள் மன்னார் மாவட்டத்தில் 7 பேர் டெங்கு காய்ச்சலுக்கு உள்ளாகியுள்ளனர். மன்னார் மாவட்டத்தில் குப்பை அகற்றுதல், வடிகால்கள் சீரமைத்தல், கழிவு நீர் வெளியேற்றுதல் போன்ற வேலைததிட்டங்கள் உடனடியாக இடம் பெற வேண்டும். ஆனால் மன்னாரில் டெங்கு தொடர்பாக முன்னெடுக்கப்படுகின்ற வேலைத்திட்டங்கள் தற்போது திருப்தியில்லாத நிலையில் அமைந்துள்ளது.

இதற்கு மன்னார் நகர சபை மற்றும் பிரதேச சபைகள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

குறித்த செயற்பாடுகள் திருப்தியில்லாமை குறித்து பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ந்தும் எனக்கு முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

இதேவேளை நகர சபையும், பிரதேச சபைகளும் கழிவுகளை அகற்றுதல்,கழிவு நீரை வெளியேற்றுதல்,கழிவு நீர் கால்வாய்களைச் சீர் செய்தல் போன்ற பணிகளை துரிதப்படுத்தும் பட்சத்தில் மன்னார் மாவட்டத்தில் டெங்கு நுளம்பைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர முடியும்.

இதற்கு அனைவரும் ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என மன்னார் மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் மேலும் தெரிவித்தார்.

# கொலைக்குற்றச்சாட்டு இருவருக்கு பிணை

(யாழ்ப்பாணம்)

8 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்து கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட இருவருக்கு யாழ். மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் பிணை வழங்கியுள்ளது.

வட்டுக்கோட்டை பகுதியில் கடந்த 28.08.2011 கிருஸ்ணமூர்த்தி சாளினி என்ற சிறுமியைக கடத்திச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்து கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு வட்டுக் கோட்டை பொலிஸாரினால் இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

சுமார் ஒரு வருடமாக சிறைத்தண்டணை அநுபவித்து வந்த சுழிபுரம் பகுதியைச் சேர்ந்த தவம் சுரேஸ்குமார் மற்றும் முருகேசு கேதீஸ்வரன் ஆகியோருக்கு எதிரான இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது.

இதன்போது, யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி ஜே. விஸ்வநாதன் இருவரையும் தலா 50,000 காசு பிணையிலும் தலா 2 இலட்சம் பெறுமதியான 4 ஆட்பிணையிலும் செல்ல அனுமதித்தார்.

மேலும், பருத்தித்துறை தும்பளைப் பகுதியில் பெண் ஒருவரைக் கடத்தி கொலை செய்த அதே இடத்தினைச் சேர்ந்த இராசையா இராசரூபன் மற்றும் பி.மாணிக்கதாஸ் ஆகிய இருவருக்கும் தலா 50,000 ரூபா காசு பிணையிலும் 2 இலட்சம் ரூபா பெறுமதியான 4 ஆட்பிணையிலும் செல்ல அனுமதித்துள்ளார்

# வவுனியாவில் பரவும் பாத்தீனியம்; கட்டுப்படுத்த துரித நடவடிக்கை

(வவுனியா)

வவுனியாவில் பரவி வரும் பாத்தீனியத்தைக் கட்டுப்படுத்த நீர்ப்பாசன திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வவுனியா மாவட்டத்தில் அதிகரித்து வரும் பாத்தீனியம் எனும் நச்சு செடியினை அகற்றுவதற்கு நீர்ப்பாசன திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வவுனியா குளம் அமைந்துள்ள பகுதியில் அதிகரித்துக் காணப்படும் இந்தச் செடியினை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்ட நீர்ப் பாசனத் திணைக்கள ஊழியர்களின் துணையுடன் சிரமதான வேலைத திட்டம் முதற்கட்டமாக ஆரம் பித்து வைக்கப்பட்டது.



விவசாய நடவடிக்கைகள் ஆரம்பித்துள்ளமையினால் எதிர்காலத்தில் வயல்களுக்கு நீர்ப்பாசனம் செய்யும் போது நீரின் மூலமாக வயல் நிலங்களுக்கு பாத்தீனியம் பரவுவதைத் தடுப்பதற்கே முதற்கட்டமாக தாம் வவுனியா குளம் சூழ்ந்த பகுதியில் பாத்தீனியத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக நீர்ப்பாசன திணைக்களத்தின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

# கே.பி. மீதான சட்ட நடவடிக்கை சட்ட மா அதிபரே தீர்மானிப்பார்

(கொழும்பு)

கே.பி. எனப்படுகின்ற குமரன பத்மநாதன் மீது அரசாங்கம் இதுவரையில் எந்தவொரு குற்றச்சாட்டினையும் முன்வைக்கவில்லை. அவருக்கு புனர்வாழ்வளிப்பதோ இல்லாவிட்டால் அவருக்கு எதிராக குற்றப் பிரேரணை தாக்கல் செய்வதோ எதுவாக இருந்தாலும் அதனை சட்டமா அதிபரே தீர்மானிக்க வேண்டும். அவ்வாறானதொரு தீர்மானம் இல்லாத பட்சத்தில் கே.பி.விடயத்தில் எதுவும் செய்ய முடியாது என நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை ஐக்கிய தேசியக் கட்சியின் மாத்தறை மாவட்ட எம்.பி. மங்கள சமரவீரவினால் கே.பி. தொடர்பில் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குற்றவாளியாக அழைத்து வரப்பட்ட குமரன் பத்மநாதன் அரசாங்கத்தினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். ஆனாலும் அவர் குற்றவாளியாக அறிவிக்கப்படவில்லை. அவர் மீது எந்தவொரு குற்றச்சாட்டும் முன்வைக்கப்படவில்லை.



அந்த வகையில் கே.பி.க்கு புனர்வாழ்வு அளிப் பதா அல்லது அவருக்கு எதி ராக குற்றப் பிரேரணை சமர்ப்பிப்பதா என்பது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களமே தீர்மானிக்க வேண்டும். எனினும் இதுவரையில் அவ்வாறானதொரு தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை. இந் நிலையில் கே.பி. தொடர்பில் எதுவும் செய்ய முடியாது என்றார்.

### வல்வெட்டித்துறை நகரசபையின்

# தலைவர், உபதலைவர் முறுகல் சமரசமாகத் தீர்க்கப்பட்டது

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை நகர சபைத்தலைவர் மற்றும் உபதலைவருக்கிடையில் கடந்த சில வாரங்களாக இடம்பெற்று வந்த முறுகல் நிலை நேற்று முன்தினம் பொலிஸாரின் தலையீட்டினால் சமரசமாகத் தீர்த்து வைக்கப்பட்டது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கடந்த வாரம் இடம்பெற்ற வல்வெட்டித்துறை நகரசபையின் மாதாந்தக் கூட்ட அமர்வின் போது இடம்பெற்ற விவாதத்தில் சபைத் தலைவர் நடராசா அனந்தராஜை தகாத வார்த்தைகளால் பேசிய உபதலைவர் கந்தசாமி சதீஸ் அவரை அச்சுறுத்தியிருந்தார்.

இது தொடர்பாக தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவிடம் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைவாக அவரின் பணிப்பின்படி தமிழரசுக் கட்சியின் செயலாளர்களுள் ஒருவரான சி.வி.கே.சிவஞானம் நகரசபைத் தலைவரை அழைத்து சமாதானமாகப் போகும்படி கூறிவிட்டுச் சென்றாரே தவிர பிரச்சினையை முடிவுக்குக் கொணடுவர வில்லை.

இதனால் திருப்தியடையாத தலைவர் தமக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல் தொடர்பாக பொலிஸில் முறைப்பாட்டினைப் பதிவு செய்தார்.

இதற்கு ஆதாரமாக (03.11.2012) இல் தினமுரசு நாளிதழில் வெளிவந்த நகரசபை தொடர்பான செய்தியையும் சமர்ப்பித்திருந்தார்.

இதனையடுத்து தலைவர் மற்றும் உபதலைவரை பொலிஸ நிலையம் அழைத்த வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குமாரசிங்க இணக்கப்பாட்டிற்கு வராதவிடதது இவ் விடயத்தை நீதிமன்றிடம் பாரப்படுத்தப் போவதாகத் தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த கந்தசாமி சதீஸ் உறுப்பினர்கள் சிலரின் தூண்டுதலுக்க மைவாகவே தாம் செயற்பட்டதாகவும், இனி அவ்வாறு நடந்து கொள்ளப் போவதில்லை எனவும் தெரிவித்தார். (116)

# இலவசக்கல்வியைப் பெறுவதில் கிராமப்புறப் பிள்ளைகள் சிரமம்

(கொழும்பு)

வளப்பற்றாக்குறையால் கிராமப் புறங்களில் வாழும் பிள்ளைகள் இலவசக் கல்வியைப் பெறுவதில் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற வைபவமொன்றிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.



சில பாடசாலைகளில் தமது பிள்ளைகளை அனுமதிப்பதற்கு பெற்றோர்கள் முன்வருவதில்லை. இதற்கமைய, 25 வீதமான பாடசாலைகளுக்கு முதலாம் தரத்தில் பிள்ளைகளை அனுமதிப்பதற்கான 10 விண்ணப்பங்கள் கூடக் கிடைப்பதில்லை.

கல்வி நிரல்படுத்தலுக்கு அமைய 56 வீத பாடசாலைகளில் மாத்திரமே உரிய தேர்ச்சி மட்டம் காணப்படுவதாகத் தெரிவித்த அமைச்சர், இந்த பாடசாலைகளில் பிள்ளைகளை அனுமதிப்பதில் பெற்றோர் அதிக ஆர்வம் கொண்டுள்ளதாகவும் கூறினார். வளங்கள் உரிய முறையில் பகிரப்படாமையினால் கிராமப் புறங்களில் வாழும் பிள்ளைகள் இலவசக் கல்விக்கான உரிமையை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# பிரதம நீதியரசரின் சொத்து; பகிரங்கப்படுத்தியது குற்றம்



## சட்டத்தரணிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

தலைமை நீதிபதி ஷிரானி பண்டாரநாயக் காவின் சொத்துகள் பற்றிய விபரத்தை பகிரங்கப் படுத்தியதன் மூலம் ஆளும கட்சி நாடாளுமன்ற உறுப் பினர்கள் தண்டனை பெறக் கூடிய குற்றம் ஒன்றைப் புரிந்துள்ளதாக சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

தலைமை நீதிபதிக்கு எதிரான குற்றவியல் பிரேரணையை மீளப்பெறுமாறுகோரி கையெழுத்து வேட்டை ஒன்றை கொழும்பு மேல்நீதிமன்ற வளாகத்தில் தேசிய சட்டத்தரணிகள் சங்கத்தினர் நடத்தினர்.

அப்போது அங்கு செய்தியாளர்களிடம் உரையாற்றிய அந்தச் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி உபுல் ஜயசூரிய இந்தக் கருத்தை முன்வைத்தார்.

குற்றவியல் பிரேரணை சபாநாயகரிடம் கையளிக்கப்பட்ட பின்னர், பிரதம நீதியரசரின் வங்கிக் கணக்குகள் மற்றும் சொத்துக்கள் பற்றிய விபரங்கள் பகிரங்கப்படுத்தப்பட்டன என்றும், குற்றவியல் பிரேரணை தாக்கல் செய்யப்பட்ட பின்னர் அது குறித்த விபரத்தை வெளியிட்டமை நாடாளுமன்ற விதிமுறைகளின்படி ஒரு குற்றம் என்றும் அவர் கூறினார்.

ஆகவே இந்தக் குற்றத்தை செய்த ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக வழக்கு நடத்தி, தண்டனை வழங்க நீதிமன்றங்களுக்கு அதிகாரம் இருப்பதாகவும் அவர் கூறினார். இந்தக் குற்றவியல் பிரேரணை குறித்த விடயங்களைக் கண்காணிக்க சர்வதேச கண்காணிப்பாளர்கள் அவசியம் என்றும் சட்டத்தரணிகள் அங்கு வலியுறுத்தினார்கள்.

தமது கையெழுத்து வேட்டை நாடுமுழுவதும் நடைபெறும் என்றும் அவர்கள் மேலும் கூறினார்கள்.

**25 - 27 வரையான வினாக்களுக்குக் கீழ்வரும் பந்தியை வாசித்து விடையளிக்க.**

செல்வனின் வயது தாயின் வயதின் 1/5 பங்காகும். ராதாவின் வயது தாயின் வயதின் 1/8 பங்காகும். தற்போது ராதாவின் வயது 5 ஆகும்.

25) தாயின் தற்போதைய வயது என்ன?
   1. 40   2. 13   3. 30

26) இரு வருடங்களின் பின் செல்வனின் வயது என்ன?
   1. 10   2. 12   3. 8

27) 3 வருடங்களின் முன் ராதாவின் வயது என்ன?
   1. 5   2. 2   3. 3

28) பௌர்ணமி தினம் மாதத்தில் 20 ஆம் திகதியன்று வந்ததெனில், படத்திலுள்ளபடி சந்திரன் காணப்படும் தினம்?



   1) 4ஆம் திகதியாகும்
   2) 8ஆம் திகதியாகும்
   3) 12ஆம் திகதியாகும்
   4) 16ஆம் திகதியாகும்

29) இலங்கையில் பல பிரதேசங்களில் ஆறுகளும் அருவிகளும் வற்றிக்கொண்டு போகின்றன. இதற்குக் காரணம்,
   1. மக்கள் விவசாயத்திற்காக அதிகளவு நீரைப் பயன்படுத்துகின்றமை
   2. மக்கள் தொடர்ந்து மரங்களை வெட்டி வீழ்த்தி வருகின்றமை

30) 'தினைவிதைத்தவன் தினை அறுப்பான். வினை விதைத்தவன் வினை அறுப்பான்' என்பதன் கருத்து,
   1. ஒருவர் தான் செய்த செயலின் பயனை அனுபவிப்பார் என்பதாகும்
   2. முயற்சி திருவினையாக்கும் என்பதாகும்

31) நாளைய தினம் சூரிய வெய்யில் இல்லாவிட்டால் பின்வருவனவற்றுள் எது நடந்திட அதிக வாய்ப்பு உண்டு?
   1. தொடர்ந்து மின்சார விளக்கு எரிந்து கொண்டிருக்கும்   2. தொடர்ந்து இருட்டாக இருக்கும்
   3. மக்கள் தொடர்ந்து தூங்கிக் கொண்டிருப்பர்

32) நான்கு கால் விலங்குகள் யாவும் சோறு உண்ண ஆரம்பித்தால், அதன் விளைவாக உடனடியாக நடந்திட வாய்ப்புள்ளது பின்வருவனவற்றுள் எது?
   1. மனிதர் அதிகமாக நெல் உற்பத்தி செய்தல்   2. நெல்லுற்பத்தியில் புதியமுறை கண்டுபிடித்தல்
   3. அரிசித் தட்டுப்பாடு ஏற்படுதல்

33) ஒரு பூங்காவனத்தில் சில புறாக்கள் பறந்து சென்றன. அவற்றில் ஒன்றுக்கு முன்னால் இரண்டும், ஒன்றுக்குப் பின்னால் இரண்டும், நடுவில் ஒன்றுமாகப் பறந்து சென்றன. அங்கே பறந்து சென்ற ஆகக் குறைந்த புறாக்களின் எண்ணிக்கை யாது?
   1. 5   2. 3   3. 4   4. 6

34) தந்தையிடம் மகனிடமுள்ள பணத்தைப் போல் நான்கு மடங்குடன் 10 ரூபா அதிகமாக இருந்தது. இருவரிடமும் இருந்த மொத்தத் தொகை 60 ரூபாக்களாகும். ஆகவே மகனிடம் உள்ள தொகை எவ்வளவு?
   1. ரூபா 10   2. ரூபா 15   3. ரூபா 20

35) கமலனும், விமலனும் புத்தகக் கடைக்குச் சென்று கமலன் பேனாவும், விமலன் புத்தகமும் வாங்கினார்கள். புத்தகத்தின் விலை பேனாவின் விலையைப் போல் மும்மடங்கைவிட ரூபா 12 அதிகமாகும். பேனாவின் விலை ரூபா 6 எனின், அவர்கள் இருவரும் செலவழித்த மொத்தப் பணத் தொகை எவ்வளவு?
   1. ரூபா 30   2. ரூபா 36   3. ரூபா 46



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - I
1 மணி

# கல்வி முரசு

வெளியீடு 10





**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**


**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.**

1 ஆம், 2ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் உருக்கள் உள்ள மூன்று அடைப்புக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று அதில் உள்ள உருக்களுக்கு ஏற்ப ஏனைய இரண்டில் இருந்தும் வேறுபடுகின்றது. இவ்வாறு வேறுபடும் அடைப்பினைத் தெரிவுசெய்க.

01)



1)



2)


3)

02)


1)



2)



3)

03)

| |
|---|
| ❍ விரைவு |
| ❍ தொடர்பாடல் |
| ❍ நேரடித் தகவல் பரிமாற்றம் |

கூட்டுக்குள் தரப்பட்டுள்ள இயல்புகள் யாவற்றுடனும் பொருந்தும் உருவைத் தெரிவு செய்க.







04)

● + ● = 10
● + ▲ = 15
▲ + ■ = 20

அருகேயுள்ள தொடர்பின்படி ● x ▲ x ■ என்பதன் பெறுமதி?
   1. 25   2. 50   3. 500

05) பேராசை பெருநட்டம் என்பது, பழமொழியாகும். இங்கு ஆசை என்பதன் பொருள்,
   1. அவா   2. நிராசை   3. விருப்பு

06) மனிதனிடம் இருக்கக் கூடாத குணங்களின் ஒன்று கோபம், இங்கு கோபம் என்பதன் எதிர்ப்பொருள்
   1. சாந்தம்   2. பொறுமை   3. அமைதி

07)

| | | | |
|---|---|---|---|
| 8 | 10 | 12 | 14 |
| 6 | 4 | 2 | 16 |
| 24 | 22 | 20 | 18 |

| | | | |
|---|---|---|---|
| A | 15 | 18 | B |
| 9 | 6 | 3 | 24 |
| 36 | 33 | C | 27 |

1) A - 12, B - 21, C - 32
2) A - 12, B - 21, C - 30
3) A - 21, B - 12, C - 30

08) விமலன் மருத்துவமனையில் ஒரு மாதம் வரை தங்கி இருந்து சிகிச்சை பெற்றான். இதற்குக் காரணம்?
   1. அவனது வீட்டைவிட வைத்தியசாலை வசதியுடையதாக இருந்தமை
   2. அவனைப் பாதித்த கடுமையான நோயின் சிகிச்சைக்குரிய வசதிகள் யாவும் அங்கு கிடைத்தமை
   3. அவனிற்கு மருத்துவரையும் அங்கு பணிபுரியும் ஊழியரையும் மிகவும் பிடித்தமை

09) 5 மனிதர் சேர்ந்து ஒரு வயலை 6 நாட்களில் பண்படுத்தி முடிப்பர் எனின், இந்த வயலை 2 மனிதர் எத்தனை நாளில் பண்படுத்தி முடிப்பர்?
   1. 30 நாட்கள்   2. 15 நாட்கள்   3. 45 நாட்கள்

10) செல்வியை விட கமலி 6 ஆண்டுகள் மூத்தவள். இருவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 34 ஆண்டுகள் எனின், கமலியின் தற்போதைய வயது என்ன?
   1. 14 ஆண்டுகள்   2. 17 ஆண்டுகள்   3. 20 ஆண்டுகள்

11) உடற்பயிற்சி போட்டி ஒன்றுக்காக மாணவர்கள் வரிசையாக நின்றிருந்தார்கள். இவர்களில் மாதவனின் வலது கைப்பக்கம் 8 மாணவர்களும், இடது கைப்பக்கம் கேசவனும் கோவிந்தனும் நின்றிருந்தனர். ஆகவே அந்த வரிசையில் நின்ற மாணவரின் எண்ணிக்கை எத்தனை?
   1. 11 பேர்   2. 10 பேர்   3. 8 பேர்

12) 
அருகே காட்டப்பட்டுள்ள சாலைக் குறியீட்டின் பொருள்
   1. முந்திச் செல்லத் தடை
   2. வாகனம் நிறுத்தவும் தரிக்கவும் தடை
   3. ஒலி எழுப்பத் தடை

13) மகரகம என்னும் சொல் ABXBA எனவும் கரகம என்னும் சொல் BXBY எனவும் எழுதப்படின் கரகாட்டக்காரி என்னும் சொல் எழுதப்பட்டுள்ள விதத்தைத் தெரிவு செய்க.
   1. BXZCDEZF   2. BXZCDEEF   3. BXZZDEZF

14) கீழே உள்ள கோலத்தை அவதானித்து அடுத்துவரும் பின்னத்தை எழுதுக.

100 → 10 → 1 → $\frac{1}{10}$ → ?


   1. 2/20   2. 1/100   3. 1/1000

15) பரீட்சை ஒன்றில் ஒரு பாடத்தில் 40 வினாக்களுக்கு சமப் புள்ளிப்படி மொத்தம் 100 புள்ளிகள் ஆகக் கணிக்கப்படுகிறது. ஒரு மாணவன் அப்பரீட்சையில் 65 புள்ளிகள் பெற்றான். அவன் எத்தனை வினாக்களுக்குச் சரியான விடையளித்தான்?
   1. 30   2. 26   3. 32

16) 20 பயணிகளைக் கொண்ட பேருந்தின் சில்லுகளின் எண்ணிக்கை 6 ஆகும். இதே பேருந்தில் 50 பேர் பயணம் செய்தால் பேருந்தில் இருக்கும் சில்லுகளின் எண்ணிக்கை யாது?
   1. 6   2. 15   3. 12

17) தாயின் வயதுடன் மகளின் வயதைக் கூட்ட வருவது 60 ஆகும். தாயின் வயது மகளின் வயதின் இரு மடங்கெனில் தாயின் வயது யாது?
   1. 20   2. 40   3. 60




18) 


வட்டத்திற்குள் மட்டும் உள்ள எண்களைக் கூட்டினால் பெறப்படும் விடை என்ன?
   1) 7
   2) 14
   3) 9

19) சந்திரன் வீட்டிலிருந்து 2 கிலோமீற்றர் தூரத்திலுள்ள தபாற்கந்தோருக்கு ஒரே வேகத்தில் நடந்துபோய் வருவதற்கு 40 நிமிடங்கள் எடுக்கும் எனின், 5 கிலோமீற்றர் தூரத்திலுள்ள சந்தைக்குப் போய் வருவதற்கு எடுக்கும் நேரம் எவ்வளவு?
   1. 50 நிமிடம்   2. 20 நிமிடம்   3. 100 நிமிடம்


20) அஜித், மஜித், சஜித் ஆகிய மூவரும் ஒரு பொருளைச் சமமாகப் பங்கிட்டுக் கொண்டனர் என்பதைக் கீழே காட்டும் சரியான வரிப்படம் எது?
   1)   2)   3)




21 - 24 வரையான வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.



A, B, C, D ஆகிய பாடசாலைகளிலே அண்மையில் பரீட்சை ஒன்றில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை



A, B, C, D ஆகிய பாடசாலைகளில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை

21) சித்தியடைந்த பிள்ளைகளில் பெண் பிள்ளைகள் 3/5 பங்கினர் ஆவர். 4 பாடசாலைகளிலும் சித்தியடைந்த பெண்களின் எண்ணிக்கை எவ்வளவு?
   1. 150   2. 100   3. 160

22) சித்தியடைந்த பிள்ளைகளில் பெண் பிள்ளைகள் 3/5 பங்கினர் ஆவர். 4 பாடசாலைகளிலும் சித்தியடைந்த ஆண்களின் எண்ணிக்கை எவை?
   1. 150   2. 160   3. 100

23) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையில் 1/5 பங்கினர் மட்டும் சித்தியடைந்த பாடசாலைகள் எவை?
   1. B, C   2. A, C   3. A, B

24) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையில் 1/3 பங்கினர் மட்டும் சித்தியடைந்த பாடசாலை எது?
   1. B   2. A   3. C

# வருவாயை மிஞ்சிய செலவுகளால் 20 ஆயிரம் கோடி கடன்பெறத் திட்டம்




(புதுடில்லி)

மத்திய அரசு நடப்பு நிதியாண்டின், பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில், கூடுதலாக, 20 ஆயிரம் கோடி ரூபாய்கடன் வாங்க திட்டமிட்டுள்ளதாக மத்திய நிதி அமைச்சகத்தின் உயரதிகாரி தெரிவித்தார். அரசின் வருவாயை விட, செலவுகள் அதிகரித்துள்ளதால் ஏற்பட்டுள்ள நிதிப் பற்றாக்குறையை சமாளிக்க மத்திய அரசு, வெளிச் சந்தையிலிருந்து கடன் வாங்கி வருகிறது. இவ்வகையில், வரும் பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில், கூடுதலாக, 20 ஆயிரம் கோடி ரூபாய் கடன் பெற திட்டமிட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜி.டீ.பி.) நிதிப் பற்றாக்குறை 5.1 சதவீதமாக இருக்கும் என பட்ஜெட்டில் மதிப்பிடப்பட்டிருந்தது. வருவாய் அதிகரிக்காத நிலையில், மானியம் உள்ளிட்ட செலவினங்கள் உயர்ந்து வருகிறது. இதனால், நாட்டின் நிதிப் பற்றாக்குறை, 5.3 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பட்ஜெட் மதிப்பீட்டின்படி, நாட்டின், நிதிப் பற்றாக்குறை, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.1 சதவீதமாக இருக்கும் நிலையில், மத்திய அரசு, 5.70 இலட்சம் கோடி ரூபாய் கடன் திரட்ட திட்டமிட்டிருந்தது.ஆனால், நிதிப் பற்றாக்குறை 5.3 சதவீதமாக உயருமானால், அரசு, வெளிச் சந்தையிலிருந்து, 5.90 இலட்சம் கோடி ரூபாய் கடன் திரட்ட வேண்டியிருக்கும்.

நடப்பு நிதியாண்டின், முதல் ஆறு மாத காலத்தில், நாட்டின் நிதிப் பற்றாக்குறை, 3.37 இலட்சம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

# ஸ்பெக்ட்ரம் ஊழலை விசாரித்த சி.பி.ஐ. அதிகாரி திடீர் மரணம்

(புதுடில்லி)

மத்திய குற்றப்புலனாய்வுத் துறை (சி.பி.ஐ.)யில் அதிகாரியாக பணியாற்றி வந்தவர் சுரேஷ்குமார் பல்சானியா (வயது - 44). மிகவும் திறமையான அதிகாரி என்று பெயர் பெற்றவர்.

2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கை விசாரித்து வரும் குழுவில் இவரும் இடம் பெற்று இருந்தார். 2 ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கின் விசாரணையில் துடிப்புடன் செயற்பட்டு முன்னாள் தொலைத்தொடர்பு துறை அமைச்சர் ஆ.ராசா, தி.மு.க. எம்.பி. கனிமொழி ஆகியோருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தயாரித்து நீதிமன்றில் தாக்கல் செய்தார்.

இந்த வழக்கை விரைந்து முடிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டார். இதற்காக சட்டத்தரணிகளுடன் அடிக்கடி ஆலோசனை நடத்தி வந்தார். சமீபத்தில் அவருக்கு திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டது. உடனடியாக தெற்கு டில்லியில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனளிக்காமல் நேற்று முன்தினம் இரவு அவர் மரணம் அடைந்தார்.

இதை கேள்விப்பட்டதும் சி.பி.ஐ. அதிகாரிகள் அதிர்ச்சி அடைந்தனர். சர்வதேச பொலிஸ் அதிகாரிகள் மாநாட்டில் கலந்துகொள்ள ரோம் சென்றுள்ள சி.பி.ஐ. இயக்குனர் ஏ.பி.சிங், பல்சானியாவின் மரணச் செய்தியை கேட்டு அதிர்ச்சி அடைந்தார்.

நாங்கள் அனைவரும் அதிர்ச்சி அடைந்ததுடன், நொறுங்கிப் போனோம். சி.பி.ஐ.யில் உள்ள மிகச்சிறந்த அதிகாரிகளில் பல்சானியாவும் ஒருவர் என்று தனது இரங்கல் செய்தியில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியச் செய்திகள்

# 3,600 பேர் வசிக்கின்ற கிராமத்தைக் காணவில்லை

(லக்னோ)

உத்தர பிரதேச மாநில அரசு ஆவணங்களில் அம் மாநிலத்தில் உள்ள செம்ராவுல் என்ற கிராமத்தின் பெயரையே காணவில்லை.

உத்தர பிரதேச மாநிலம் காசிபூர் மாவட்டத்தில் உள்ளது செம்ராவுல் கிராமம். அந்த கிராமத்தில் 3,600 பேர் வசிக்கின்றனர். ஆனால் அரசு ஆவணங்களில் அக்கிராமத்தின் பெயரே இல்லை. அந்த கிராமத்தில் 1,900 வாக்காளர்கள் உள்ளனர். ஆனால் கடந்த 2001ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட குடிசனக் கணக்கெடுப்பின்படி செம்ராவுலில் யாருமே வசிக்கவில்லை என்று பதிவாகியுள்ளது. கடந்த 11 ஆண்டுகளில் 3 பஞ்சாயத்து தேர்தல்கள், 2 லோக்சபா தேர்தல்கள் மற்றும் சட்டசபை தேர்தல்கள் ஆகியவை நடந்துள்ளன.

செம்ராவுலில் வறுமை கோட்டுக்கீழ் உள்ளவர்களுக்கான அட்டை வைத்திருப்பவர்களின் எண்ணிக்கை 116. அங்கு ஒரு தொடக்கப் பள்ளி உள்ளது. அதிகாரப்பூர்வமாக அங்கு யாரும் வசிக்காததால் செம்ராவுலில் நடுநிலைப் பள்ளி இல்லை.

இந்நிலையில் கடந்த 2010ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் செம்ராவுல் கிராம பஞ்சாயத்து தலைவராகப் பொறுப்பேற்ற சபாஜித் சிங் குஸ்வாஹா பதவியேற்ற கையோடு இந்தப் பிரச்சினைகள் குறித்து அப்போதைய வருவாய் மற்றும் கிராமப்புற வளர்ச்சித் துறை அமைச்சரை சந்தித்து பேசியுள்ளார். ஆனால் அப்படியும் நிலைமை மாறியபாடில்லை.

# கைக்குழந்தையுடன் ரிக்ஷா ஓட்டிய அப்பாவிற்கு கிடைத்தது 18 இலட்சம்



பிறந்த 5 நாளில் அம்மாவை பறிகொடுத்ததால் குறைமாதத்தில் பிறந்த குழந்தையுடன் ரிக்ஷா ஓட்டிய அப்பாவின் பரிதாப கதை ஊடகங்களில் வெளியானதால் அவருக்கு ரூபா 18 இலட்சம் உதவிநிதி குவிந்துள்ளது. மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட கைக்குழந்தை உடல் நிலை தேறியதால் வீட்டிற்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

ராஜஸ்தான் மாநிலம் பரத்பூரை சேர்ந்த ரிக்ஷாகாரர் பப்லு. இவரது மனைவிக்கு கடந்த செப்ரெம்பரில் அரசு மருத்துவமனையில் பெண் குழந்தை பிறந்தது. குறைமாதத்தில் பிறந்ததால் 2 கிலோ எடை மட்டுமே இருந்த அந்த குழந்தைக்கு தாமினி என்று பெயர் சூட்டினர். பிறந்த 5 நாளில் தாயை இழந்தாள் குழந்தை தாமினி.

குழந்தையைக் கவனிக்கக் கூட உறவினர் யாரும் இல்லாததால் பப்லு தவித்தார். சில நாட்கள் ரிக்ஷா ஓட்டாமல் வீட்டிலேயே இருந்து குழந்தையை பார்த்துக் கொண்டார். கையில் பணம் இல்லாததால் மீண்டும் ரிக்ஷா ஓட்ட பப்லு முடிவு செய்தார். இதனால், குழந்தை தாமினியை தன் உடலோடு சேர்த்துத் துணியால் கட்டிவைத்துக் கொண்டு ரிக்ஷா ஓட்டினார். தாய்ப்பால் கிடைக்காததால் தாமினியின் உடல் நிலை மோசமானது. அழுவதற்குக் கூட சக்தி இல்லாமல் துவண்டு கிடக்கும் தாமினியை உடலில் கட்டிக்கொண்டு அவர் ரிக்ஷா ஓட்டுவது ஊடகங்களில் கடந்த மாதம் வெளியானது.

இது பற்றிய தகவல் கிடைத்ததும், தாமினியை உடனடியாக தனியார் மருத்துவமனையில் சேர்க்க ராஜஸ்தான் அரசு நடவடிக்கை எடுத்தது. கடந்த மாதம் 21ஆம் திகதி ஜெய்ப்பூரில் உள்ள பிரபல தனியார் மருத்துவமனையில் தாமினி சேர்க்கப்பட்டாள். இதற்கிடையே, தாமினியின் பரிதாப நிலையைப் பார்த்து ஏராளமானோர் நிதிவழங்க தொடங்கினர். இதுவரை ரூபா18 இலட்சம் நிதி சேர்ந்துள்ளது. அவளுக்கு இலவச கல்வி அளிக்க பல முன்னணி கல்வி நிறுவனங்கள் முன் வந்துள்ளன. தாமினியை எங்களிடம் கொடுங்கள் நாங்கள் வளர்க்கிறோம் என்று தொண்டு நிறுவனங்கள் போட்டி போடுகின்றன. ஆனால், அதற்கு பப்லு மறுத்துவிட்டார்.

# கலப்புத் திருமணத்தால் பற்றி எரிந்தது கிராமம்

காதல் பிரச்சினையால் தர்மபுரியில் ஏற்பட்ட கலவரத்தில், 100இற்கும் மேற்பட்ட வீடுகள் தீ வைத்து கொளுத்தப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தர்மபுரி நாயக்கின் கொட்டாய் நத்தம் கொலனியைச் சேர்ந்த கல்லூரி மாணவர் இளவரசனும், பக்கத்து கிராமமான கோணங்கி நாயக்கின் ஹள்ளியைச் சேர்ந்த கல்லூரி மாணவி திவ்யாவும் காதலித்து திருமணம் செய்து கொண்டனர்.



இதனால், திவ்யாவின் தந்தை நாகராஜ் தற்கொலை செய்து கொண்டதாக கூறப்படுகிறது.

தகவல் அறிந்த உறவினர்கள் மற்றும் அவரது சமூகத்தைச் சேர்ந்த 1000இற்கும் மேற்பட்டோர் ஒன்று திரண்டு, நத்தம் காலணியில் உள்ள மற்றொரு சமூகத்தைச் சேர்ந்தவர்களின் வீடுகளை தீ வைத்து கொளுத்தினர்.

இதில், நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகள் சாம்பலாகின. மேலும், இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களுக்கும் தீ வைக்கப்பட்டன.

மேலும், திருப்பத்தூர் செல்லும் சாலையில் மரங்களை வெட்டிப் போட்டு, தீயிட்டு கொளுத்தி வன்முறையில் ஈடுபட்டதையடுத்து, அப்பகுதியில் அதிகளவு பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

## ஒபாமாவின் வெற்றி குறித்து மணல் சிற்பம் வரைந்த கலைஞர்




அமெரிக்க ஜனாதிபதியாக இரண்டாவது முறையாக தெரிவு செய்யப்பட்டுள்ள பராக் ஒபாமாவின் உருவத்தை ஒரிசா கடற்கரை மணலில் சர்வதேச மணல் சிற்பக் கலைஞர் உருவாக்கியுள்ளார்.

ஒரிசா மாநிலத்தைச் சேர்ந்த சர்வதேச மணல் சிற்பக் கலைஞர் சுதர்சன் பட்நாயக், உலகம் முழுவதும் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளை அவ்வப்போது மணல் சிற்பமாக வடித்து வருகிறார்.

இதன் அடிப்படையில், ஒபாமாவின் வெற்றி குறித்து புரி கடற்கரைப் பகுதியில் ஒபாமாவை மணல் சிற்பமாக வடித்துள்ளார்.

ஒபாமாவின் பின்னணியில் வெள்ளை மாளிகையின் உருவத்தையும் வடித்துள்ளார். இதை ஏராளமானோர் ஆர்வத்துடன் பார்த்துச் செல்கின்றனர்.



**சட்டீஸ்கர் மாநிலம் நாராயண்பூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சுவாமி விவேகானந்தர் சிலை முன்பாக விளக்கேற்றி வழிபட்ட ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி. அருகில் மாநில ஆளுநர் சேகர் தத் மற்றும் முதல்வர் ராமன் சிங்**

# கௌதமாலாவில் நிலநடுக்கம்
## 48 பேர் பலி; பலரைக் காணவில்லை



(மெக்சிக்கோ)

கௌதமாலாவில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்திற்கு 48 பேர் பலியாகியுள்ளனர்.


பசிபிக் கடலின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள கௌதமாலாவின் மேற்குப் பகுதியில் நேற்று முன்தினம் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. அது ரிக்டர் அளவுகோலில் 7.4 பதிவாகியிருந்தது. கௌதமாலா அருகில் உள்ள மெக்சிக்கோ மற்றும் எல்சால்வாடேரிலும் நிலநடுக்கம் ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது.

கௌதமாலாவில் நில நடுக்கம் ஏற்பட்டதும் மக்கள் அலறியடித்துக் கொண்டு தெருக்களுக்கு ஓடி வந்தனர். நிலநடுக்கத்தால் 135 வீடுகள் சேதமடைந்தன. பல்வேறு கட்டடங்கள் இடிந்தன. இடிபாடுகளில் சிக்கி 39 பேர் பலியாகினர். 155 பேர் காயம் அடைந்துள்ளனர். இது தவிர 100 பேரைக் காணவில்லை என்று கௌதமாலா அதிபர் ஓட்டோ பெரெஸ் மொலினா தெரிவித்துள்ளார்.

நிலநடுக்கம் ஏற்பட்டதை அடுதது பொதுக் கட்டடங்களில் உள்ளவர்கள் வெளியேற்றப்பட்டனர். 73,000 வீடுகள் மின்சாரமின்றித் தவித்தன. இந்த நிலநடுக்கத்தால் பல்வேறு இடங்களில் நிலச்சரிவுகளும் ஏற்பட்டுள்ளன. மெக்சிகோவில் ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 7.3 ஆக பதிவாகியிருந்தது.

கௌதமாலாவில் கடந்த 1976 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி ஏற்பட்ட 7.5 அளவிலான நிலநடுக்கத்திற்குப் பிறகு தற்போது தான் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏறபட்டுள்ளது. 1976 இல் ஏற்பட்ட நிலநடுக்கத்திற்கு 23,000 பேர் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஒபாமாவின் வெற்றியால் சங்கடப்படும் இஸ்ரேல் பிரதமர்



(டெல்அவிவ்)

அமெரிக்க அதிபராக ஒபாமா மீண்டும் வெற்றி பெற்றதற்கு பரவலாக உலகெங்கிலும் இருந்து பாராட்டுகள் குவிந்த நிலையில் இஸ்ரேல் மட்டும் ஏமாற்றத்துடன உள்ளது. இந்தத் தேர்தலில் மிட் ரோம்னிக்கு ஆதரவு தெரிவித்து வந்தார் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு. அதனால் மீண்டும் அதிபராக தேர்வாகியுள்ள ஒபாமா பழி தீர்த்துக் கொள்வாரோ என்கிற அச்சம் இஸ்ரேலை ஆட்டிப்படைக்கிறது.

இருந்தபோதிலும், முறைப்படி ஒபாமாவுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார் பிரதமர். ஆனால் ஆளும் கட்சியின் பிற தலைவர்களோ ஒபாமா நம்பக்கூடிய மனிதர் இல்லை என்று குறிப்பிடுகின்றனர்.

உலகச் செய்திகள்

# பெரு நாட்டின் மம்மியை ஒப்படைத்தது பொலிவியா



(லிமா)

பல நூறு ஆண்டுகள் பழமையான குழந்தை மம்மி ஒன்றை பொலிவியாவிடம் இருந்து திரும்ப பெற்றுள்ளது பெரு. இதன் மூலம் தங்களின் கலாசார பெருமை மீட்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் கூறியுள்ளனர்.

தென் அமெரிக்காவில் சுமார் 700 வருடங்களுக்கு முன்பு "இன்கா கலாசார மக்கள்" வாழ்ந்துள்ளனர். அவர்களுக்கு முந்தைய காலத்திய பெரு நாட்டுக்கு சொந்தமான ஒரு குழந்தை மம்மியை, புராதானப்பொருட்கள் கடத்தல் கும்பல் ஒன்று கடந்த 2 வருடங்களுக்கு முன்பு பொலிவியாவிலிருந்து பிரான்சுக்கு கடத்த இருந்தது. அதை பொலிவியா அரசு அப்போது கைப்பற்றியது.

வேறொரு குழந்தையின் ஒரு காலுடன் இருந்த இந்த மம்மி பாதுகாப்பாக இருக்க லாமா மற்றும் அல்பகாஸ் விலங்குகளின் முடிகளால் ஆனா கம்பளியால் மூடப்பட்டிருந்தது. 2 வயதான இந்த குழந்தை மம்மி ஆணா அல்லது பெண்ணா என்று ஆராய்சியாளர்களால் அறியமுடியவில்லை.

பெரு நாட்டின் கலாசாரத்தை பறைசாற்றும் இந்தக் குழந்தை மம்மியை மீட்கும் முயற்சியை பெரு நாடு தொடர்ந்து மேற்கொண்டது. இதனைத் தொடர்ந்து பொலிவியா நாட்டின் கலாசார அமைச்சர், முதுகு சாய்ந்தா வாறு உட்கார்ந்த நிலையில் இருக்கும் குழந்தை மம்மியை பெரு நாட்டிடம் முறைப்படி ஒப்படைத்தார். இதனைப் பெற்றுக்கொண்ட பெரு நாட்டின் அமைச்சர், எங்கள் வம்சம் மற்றும் பரம்பரையின் பெருமையை உலகுக்கு காட்டும் ஒரு சிறிய மாதிரியே இந்தக் குழந்தை மம்மி என்று தெரிவித்தார்.

முந்தைய இன்கா கலாசாரத்தின் மையமாக விளங்கிய பெரு நாட்டின் செராமிக்ஸ், வெள்ளி, தங்கம் மற்றும் அரிய ஓவியங்கள் திருடப்பட்டுவிட்டதாகவும் பெரு நாடு கூறி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# சிரிய தலைவர்களைக் குறிவைத்து புரட்சிப்படையினர் தாக்குதல்



(டமஸ்கஸ்)

சிரியாவில் அரசு ஆதரவாளர்களுக்கும், புரட்சிப் படையினருக்கும் இடையேயான உள்நாட்டு போர் மிக தீவிரமடைந்து வருகின்றது.

சிரியாவின் முக்கிய பகுதிகளைக் கைப்பற்றியுள்ள புரட்சி படையினர், தற்போது தலைவர்களைக் குறிவைத்து தாக்குதல் நடத்த ஆரம்பித்துள்ளனர்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம ஜனாதிபதி மாளிகையைக் குறிவைத்துப் புரட்சிப் படையினர் தாக்குதல் நடத்தினர். ஆனால் இவர்கள் வீசிய குண்டுகள் ஜனாதிபதி மாளிகையை தாக்கவிலலை. மாறாக ஜனாதிபதி அசாத்தின் குடும்ப உறுப்பினர்கள் அதிகம் வசிக்கும் இடங்களில் வெடித்துள்ளன. இத் தாக்குதலில் 3 பேர் கொல்லப்பட்டதாகவும், 7 பேர் படுகாயமடைந்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இதே போன்று கடந்த ஜூலை மாதம் நடந்த வெடிகுண்டுத் தாக்குதலில், ஜனாதிபதி அசாத்தின் 4 முக்கிய பாதுகாப்பு அதிகாரிகள் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தககது.

# முட்டாள் பட்டம் வாங்கிய அமெரிக்க பெண் சாரதி

(ஒஹியோ)

அமெரிக்காவில் உள்ள க்லீவ்லாண்டில் வாகனத்தை வீதியில் ஓட்டிச் சென்றதாக குற்றம்சாற்றப்பட்ட பெண் முட்டாள் என அடையாளப் படுத்தி இரண்டு நாட்கள் நிற்க வேண்டும் என அந்த மாகாண நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஒஹியோவில் - க்லீவ்லாணடு மாகாணத்தில் 32 வயதுடைய ஷினா ஹார்டின் என்ற பெண் ஒருவர் நடைபாதையில் வாகனத்தை ஓட்டிச் சென்ற காட்சி அந்த சாலையில் பொருத்தப் படடிருந்த கமராவில் பதிவாகியிருந்தது. இதனை அடுத்து அவர் மீது வழக்குத் தொடரப்படடு நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றது.

வசாரணையில் பாடசாலை மாணவர்களை வெகு நேரமாக வரிசையில் ஏற்றிக் கொண்டிருந்ததால் அருகே இருந்த நடைபாதையில் வாகனத்தை செலுத்தியதாக அவர் விளக்கமளித்திருந்தார்.

இதனை ஏற்க மறுத்த நீதிபதி, ஷினா ஹார்டின் இரண்டு நாட்கள் ஒரு மணி நேரத்திற்கு முட்டாள் என எச்சரிக்கைப்படுத்தும் அடையாளத்தை கொண்டு நிற்க வேண்டும் என உத்தர விட்டார்.

# காதல் தோல்வியால் விரக்தி; ஐவர் சூட்டில் மடிந்தனர்

(மொஸ்கோ)

காதலில் தோல்வியடைந்ததால் விரக்தியில் இருந்த நபர், அலுவலக ஊழியர்கள் மீது திடீரென துப்பாக்கி சூடு நடத்தியதில் 5 பேர் பலியாகினர்.

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் உள்ள மருந்து நிறுவனத்தில் பணிபுரியும் இளைஞர் ஒருவர், தன்னுடன் வேலை செய்யும் பெண் ஒருவரைக் காதலித்து வந்துள்ளார்.

சமீபத்தில் அந்த பெண்ணிடம் சென்று காதலை சொன்ன போது, அவர் மறுத்து விட்டார். இதனால் மிகவும் மனமுடைந்து போன வாலிபர், நேற்று முன்தினம் வழக்கம் போல் அலுவலகத்திற்கு வந்தார்.

திடீரென துப்பாக்கியை எடுத்து அங்கிருந்த நபர்களை சரமாரியாக சுட்டதில் இரண்டு பெண்கள் உட்பட ஐந்து பேர் பலியாகினர். மேலும் 2 பேருக்கு பலத்த காயம் ஏற்பட்டுள்ளது.

உடனே அலுவலக பாதுகாவலர் இவரை மடக்கிப் பிடித்து பொலிஸில் ஒப்படைத்தனர். பலியான நபர்களில் இவர் காதலித்த பெண்ணும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானிலிருந்து படைகளை ஒபாமா திரும்பப்பெற வேண்டும்
## தலிபான்கள் வலியுறுத்து

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்கப் படைகளை ஒபாமா திரும்பப் பெற வேண்டும் என்று தலிபான்கள் வலியுறுத்தியுள்ளனர். இது தொடர்பாக தலிபான் அமைப்பின் செய்தித் தொடர்பாளர் சபியுல்லா முஜாகித் இஸ்லாமியர்களின் இணையத்தளத்தில் எழுதியுள்ளதாவது,

ஆப்கானிஸ்தான் போரில் அமெரிக்கா தோற்றுவிட்டதை ஒபாமா புரிந்துகொள்ள வேண்டும். எனவே, தாமதமின்றி அமெரிக்கப்படைகள் எங்களின் புனித பூமியில் இருந்து வெளியேற வேண்டும். உலகின் பொலிஸ்காரனாக அமெரிக்கா தன்னை எண்ணிக் கொண்டிராமல், சொந்த நாட்டு மக்களின் பிரச்சினைகளில் கவனம் செலுத்த வேண்டும். அமெரிக்கர்களை உலகம் மேலும் வெறுக்கும் வகையில் நடந்து கொள்ளக்கூடாது என்று தெரிவித்துள்ளார்.

# இந்து ஆலயங்கள் புனரமைப்பு யாழ். மாவட்டத்தில் துரிதம்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இவ்வருடம் யாழ். மாவட்டத்திலுள்ள 72 இந்து ஆலயங்களின் அபிவிருத்திக்கென தலா ஒரு இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான 72 இலட்சம் ரூபா காசோலைகள் யாழ். செயலக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் காரியாலயத்தினால் அந்தந்தப் பிரதேச செயலர் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

எனவே யாழ். மாவட்டத்தில் இருந்து இந்து ஆலய அபிவிருத்தி வேலைகளுக்கு விண்ணப்பித்த ஆலய நிர்வாகத்தினர் அந்தந்த பிரதேச செயலகங்களுடன் தொடர்புகொண்டு நிதி வழங்கப்பட்டுள்ள ஆலயங்களின் பெயர்ப்பட்டியலைப் பார்வையிட்டு உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து இந்த நிதிக்கான காசோலைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று யாழ். செயலக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (பா)




2011 ஆம் ஆண்டின் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை சிறப்பாக செயற்படுத்தி ஆவணப்படுத்திய சிறந்த நூலகங்களுக்கான விருதுகள் அண்மையில் வழங்கப்பட்டது. ஊர்காவற்றுறை பிரதேச சபையின் அனலைதீவு பொதுநூலகத்துக்கான விருதை அனலைதீவு பொதுநூலகர் சந்திரசேகரம் தர்மிளா, ஊர்காவற்றுறை பிரதேசசபை செயலாளர் சுந்தரேஸ்வரன் சுதர்ஜன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

# சந்தைக்குள் வந்தது மலர் வளையம்

## மர்மம் துலங்கியது

(யாழ்ப்பாணம்)

நாரந்தனை பிரதேசத்தில் நேற்று முன்தினம் நிகழ்ந்த மரணச் சடங்கு ஒன்றில் வைக்கப்பட்ட விலையுயர்ந்த மலர் வளையங்களை வியாபார நோக்கில் நபரொருவர் (அடையாளம் காணப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது) மயானத்தில் இருந்து நகரப்பகுதியில் அமைந்துள்ள அந்திமகால சேவை நிலையத்திற்கு கொண்டு வந்த போது அந்நிலையம் பூட்டப்பட்டிருந்தது.

இதனால் அவர் அதனை அவ்விடத்தில் வைத்துவிட்டு சென்று விட்டார். அதன் பின்னர் சில சமூக விரோத விஷமிகள் அம்மலர்வளையங்களை எடுத்து சந்தைக் கடைத்தொகுதியின் முன்னால் வைத்துள்ளனர்.

சமூக விஷமிகளின் வேண்டாத இந்தச் செயற்பாடு ஊர்காவற்றுறையில் சிறிது பரபரப்பை ஏற்படுத்தியது. பின்னர் நிலைமை வ்ழமைக்குத் திரும்பியது.

# கட்டுமீறுகிறது டெங்கு

(யாழ்ப்பாணம்)



யாழ். மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் நேற்று வரை 408 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக யாழ். போதனா வைத்தியசாலையின் தொற்று நோய் தடுப்புப் பிரிவு அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்த நோயின் தாக்கத்திற்கு கடந்த மாதம் மட்டும் 124 பேர் இலக்காகி சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்ட அவ் அதிகாரி இந்தமாதம் இதுவரை 17 பேர் இந்நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் நேற்று முன்தினம் மானிப்பாயிலிருந்து ஒருவரும் நேற்றைய தினம் சங்கானையிலிருந்து இருவரும், ஆனைக்கோட்டையிலிருந்து ஒருவரும் இந்நோய்த் தாக்கத்திற்கு இலக்காகிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்த அந்த அதிகாரி இந்த நோயினால் இந்த வருடத்தில் இதுவரை 2 இறப்புக்களே நிகழ்ந்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (பா)

# சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் தெற்கு சங்குவேலிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் கிணற்றிலிருந்து வயோதிபரின் சடலம் ஒன்று நேற்றுக்காலை மானிப்பாய் பொலிஸாரினால் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையாகிய கந்தையா தவராசா (வயது - 65) என்பவரது சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

இவரைக் காணாததை அடுத்து அவரது வீட்டின் கிணற்றில் காலை 6.00 மணியளவில் உறவினர் ஒருவர் 'சென்று பார்த்தபோது இறந்த நிலையில் அவரது சடலம் கிணற்றில் மிதப்பதைக் கண்டுகொண்டதையடுத்து மானிப்பாய் பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று ஒப்படைக்கப்பட்டிருந்தது.

மேலும் இந்த நபர் ஏற்கனவே வாதநோயினால் பீடிக்கப்பட்டிருந்ததாகவும் அவரது சகோதரன் தெரிவித்துள்ளார். (பா)

## ப்பளாய குக்குக்ஷயஜ

மாரடைப்பு நோய் காரணமாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்தன நேற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

## வடக்கில்...

நோக்கில் வடமாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் 2013 ஆண்டு நடத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்துடன் சேர்ந்து இயங்கும் கட்சிகளான தேசிய சுதந்திர முன்னணி, ஹெல உறுமய ஆகியன மாகாண சபை முறையை முற்றாக ஒழிக்குமாறு கோரிக்கை விடுத்து வரும் நிலையில் ஜனாதிபதி இவ்வாறு அறிவித்துள்ளமை குறிப்பட்டத்தக்கது.

## பொருளாதாரம்...

நிச்சயமற்ற தன்மை குறைவடைவதனாலும் உலக பொருளாதார மீட்சியும் 2013 இல் நடைபெறும் என மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

கவனமான நாணய, இறைகொள்கையோடு உள்நாட்டு நிரம்பல் நிலைமைகளில் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ள முன்னேற்றங்கள் ஆகியன இணைந்து 2013 ஆம் ஆண்டில் பண வீக்கத்தை ஒற்றை இலக்க மட்டத்தில் பேணும் என மத்திய வங்கி கருத்துத் தெரிவித்துள்ளது.

## விஜயகலா...

பெற்றபோது குறித்த நாடாளுமன்ற உறுப்பினர் சமுகமளிக்காததை அடுத்தே ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிபதி பிடியாணை பிறப்பித்துள்ளார்.

நீதிபதி எதிர்வரும் டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி அன்று உறுப்பினரை நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு கிராம சேவையாளருக்கு அவர் பணித்துள்ளார்.

பல தடவை வழக்கு விசாரணைக்கு சமுகமளிக்காததை அடுத்தே நீதிபதி பிடியாணை பிறப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வறியமக்களுக்கு...

விட்டுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா கூறினார்.

இந்த வரவு - செலவுத் திட்டம் நாட்டின் சனத்தொகையில் 0.1 சதவீதமானோருக்காக கொண்டுவரப்பட்டது. யாருக்கு பந்தயக் கார்கள் தேவை? இது மக்களுக்கு உள்ள ஒரு பிரச்சினையா? வெளிநாட்டு வங்கிகளிலுள்ள பணத்தை கேள்வியின்றி இலங்கைக்கு கொண்டுவர இது அனுமதியளிக்கின்றது. இது பங்குச் சந்தையில் முதலீடு செய்யப்படுமென நான் நினைக்கின்றேன் என ஹர்ஷ டி சில்வா குறிப்பிட்டார்.

இந்த வரவு செலவுத் திட்டத்தில் விவசாயிகள், கடற்தொழிலாளர்கள், கடின வேலை செய்து உழைப்போருக்கு எந்தவித நன்மையும் இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார். கறுப்பு பணத்தை சுதந்திரமாக எடுத்துச் செல்லவும் கொண்டுவரவும் இந்த வரவு - செலவுத் திட்டம் வழி செய்துள்ளது என்று அ்வர் மேலும் கூறினார்.

## நாடாளுமன்றில்...

வெளிநாட்டு வேலைவாய்ப்பு - 325.7 மில்லியன், நாடாளுமன்ற அலுவல்கள் - 417 மில்லியன், அரச மூலங்கள் தொழில் முயற்சி - 430 மில்லியன்.

வரவு - செலவுத் திட்டத்தில் ஆகவும் கூடியதாக பாதுகாப்பு அமைச்சுக்கு 289.5 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த வருட ஒதுக்கீடான 229.9 பில்லியன் ரூபாவை விட 60 பில்லியன் அதிகமாகும்.

நேற்று மதியம் 12.50 மணிக்கு ஆரம்பமாகிய வரவு - செலவுத் திட்ட உரை 3.35 மணிக்கு நிறைவடைந்தது.

இதனிடையே, நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்ட யோசனைகள் குறித்த நாடாளுமன்ற விவாதங்கள் இன்று ஆரம்பித்து 17 ஆம் திகதி வரை இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, இதற்கான வாக்கெடுப்புக்கள் நவம்பர் மாதம் 17 ஆம் திகதி பிற்பகல் இடம் பெறவுள்ளது.

இதேவேளை, மூன்றாம் தவணை வாசிப்பு மீதான வாக்கெடுப்புக்கள் டிசம்பர் மாதம் எட்டாம் திகதி சனிக்கிழமை இடம்பெறும் என நாடாளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## 'பட்ஜட்'...

மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

- சுற்றுலாத்துறை வருமானமாக 2.5 பில்லியன் டொலர் எதிர்பார்க்கப்படுகிறது.
- நீர்ப்பாசன அபிவிருத்திக்காக 102 பில்லியன் ரூபா ஒதுக்கீடு.
- லக் சத்தொச விற்பனை நிலையங்களை ஆயிரமாக அதிகரிப்பதற்கு 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.
- மீன்பிடித் துறைமுகங்களின் அபிவிருத்திக்கு 2000 மில்லியன் ரூபா.
- சிறு தேயிலை உற்பத்தியாளர்களுக்கு ஹெக்ரெயர் ஒன்றுக்கான உதவித் தொகை 3 இலட்சத்திலிருந்து 3 இலட்சத்து 50 ஆயிரமாக அதிகரிப்பு
- தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திய, உற்பத்திகளின் தரத்தை முறையாகப் பேணிய பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு உதவி
- ஆடைத் துறையிலிருந்து 5000 மில்லியன் டொலர் வருவாய் எதிர்பார்க்கப்படுகிறது.
- 2013 ஆம் ஆண்டில் பொலனறுவை, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் நடத்தத்திட்டமிட்டுள்ள தேசத்துக்கு மகுடம் கண்காட்சிக்கு 60 மில்லியன் ரூபா ஒதுக்கீடு
- வெளிநாட்டவர்களுக்கு காணிகளை விற்கத் தடை.
- சுகாதார சேவைகளை மேம்படுத்துவதற்காக 125 பில்லியன் ரூபா ஒதுக்கீடு
- கல்வித் துறைக்கு 306 பில்லியன் ரூபா (மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.1 வீதம்) ஒதுக்கீடு.
- ஊடகவியலாளர், கலைஞர்களுக்கு வட்டியில்லா கடனைப் பெற்றுக்கொடுப்பதற்காக 200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு
- வெளிநாட்டு மதுபான வகைகளுக்கு 25 வீத வரி

பல்கலைக்கழகங்களுக்கு மேலதிக மாணவர்களை சேர்ப்பதற்கும் பல்கலைக்கழகங்களை அபிவிருத்தி செய்வதற்கும் சிறந்தவொரு விரிவுரையாளர் சேவையை வழங்குவதற்கும் நடவடிக்கை.

ஒரு கிலோகிராம் நெல்லிற்கு 32 ரூபா மற்றும் 35 ரூபா கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிப்பதற்கு இம்முறை வரவு - செலவு திட்டத்தில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் விவசாயிகள் விடுத்த கோரிக்கைகளுக்கு அமைய இந்த யோசனை முன்வைக்கப்பட்டதாக ஜனாதிபதி குறிப்பிடுகின்றார்.

தற்போது ஒரு கிலோகிராம் நெல்லிற்கு 27 ரூபா நிர்ணய விலையாக காணப்படுவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை சேதனப்பசளைகளைப் பயன்படுத்தும் விவசாயிகளுக்கு ஒரு கிலோகிராம் நெல்லிற்கான கட்டுப்பாட்டு விலையான 40 ரூபாவை நிர்ணயிப்பதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

இலவசக் கல்வித்துறை அபிவிருத்திக்கென 2013 ஆம் வரவு - செலவுத் திட்டத்தில் கடந்த வரவு - செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியைவிட நூற்றுக்கு 15 வீதம் அதிகரிப்பதாக ஜனாதிபதி யோசனை முன்வைத்துள்ளார். அதன்படி கல்வித்துறைக்கு 306 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன் மொத்த தேசிய உற்பத்தியில் அது 4.1 வீத ஒதுக்கீடாகும்.

# ஜப்பானிய உறவின் அடையாளம் யாழ்ப்பாணத்தில் இசைநிகழ்வு

(கொழும்பு)

ஜப்பான் மற்றும் இலங்கைக்கு இடையிலான இராஜதந்திர உறவுகளின் 60 ஆண்டு கால பூரத்தியை முன்னிட்டு, இலங்கையில் உள்ள ஜப்பான் தூதரகம், ஜப்பான் நிலையத்துடனும் இலங்கையின் சிம்பனி இசைக்குழுவுடனும் இணைந்து தொடர் இசை நிகழ்ச்சிகளை கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் நடத்தவுள்ளது.

அத்துடன் ஜப்பான் தூதரகம் யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக ஒழுங்கு செய்துள்ள 'Music Around the world' என்ற இந்த இசை நிகழ்ச்சி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையவுள்ளது.

இவ் விசேட நிகழ்ச்சி தொடர்பான பத்திரிகையாளர் மாநாடு நவம்பர் மாதம் 1 ஆம் திகதி ஜப்பான் தூதுவராலயத்தில் நடைபெற்றது. யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள் தொடர்பாக அங்கு இவ்வாறு கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் நடைபெறும் நிகழ்ச்சிகள் சிறப்பு வாய்ந்தவையாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பு அனைவரிடமும் உண்டு. சிறப்பாக யாழ்ப்பாணத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகள் முக்கியத்துவம் வாய்ந்தவை.

அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளில் அனைத்துத் தரப்பினரும் கலந்துகொள்ள வேண்டும் என நாம் விரும்புகிறோம். அத்துடன் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகள் பார்வையாளர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெறும் என எதிர்பார்க்கிறோம். அத்துடன் இவ் இசை நிகழ்ச்சிகள் முற்று முழுதாக இலவசமாகவே நடத்தப்படுகின்றன.

ஜப்பான் தூதரகம் யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக ஒழுங்கு செய்துள்ள 'Music Around the world' என்ற இந்த இசை நிகழச்சி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையவுள்ளது.

ஜப்பானின் பிரபலமான இசைக் கலைஞர்களான கெய்க்கோ கொபயாஷி, அடோ கியாரா மற்றும் ஈஜி சுசுகி ஆகியோர் வழங்க விருக்கும் இந்த இசை நிகழ்ச்சியானது, யாழ்ப்பாண இசை இரசிகர்களுக்கு பெரும் விருந்தாக அமையவுள்ளது.

இந்த நிகழ்ச்சிகள் பார்வையாளர்களுக்கு முற்றிலும் இலவசம் என்பது குறிப்பிடத்தக்கது. நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இந்த நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

முதல் நிகழ்ச்சியாக நவம்பர் 10 ஆம் திகதி, சர்வதேச புகழ் பெற்ற பியானோ வாத்தியக் கலைஞரான டாக்டர் தான்யா ஏக்கநாயக்கவின் இசை நிகழ்ச்சி இடம்பெறவுள்ளது. அதனை ஜப்பானின் கெய்க்கோ கொபயாஷி நடத்தவுள்ளார். மேலும் இலங்கையின் நாட்டுப்புற இசையை அடிப்படையாகக் கொண்ட இசை நிகழ்வை ஈஜி சுசுகி வழங்கவுள்ளார்.

நவம்பர் 16 ஆம் திகதி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் 'Wanko' என்ற ஜப்பானிய திரைப்படம் திரையிடப்படவுள்ளது. ஒரு நாய்க்கும், சிறுவனுக்கும், அவனது குடும்பத்துக்கும் இடையிலான நட்புறவை விளக்கும் ஒரு அழகான திரைக்காவியமே இந்தத் திரைப்படம்.

நவம்பர் 17 ஆம் திகதி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் கெய்க்கோ கொபயாஷி மற்றும் ஈஜி சுசுகி கலந்து கொள்ளும் சிம்பொனி இசைக் கச்சேரி நடைபெறவுள்ளது.

# வெளிநாடு செல்லச் சென்ற வடமராட்சி வாசி மரணம்

(வடமராட்சி)

வெளிநாடு செல்வதற்கு கொழும்பு சென்றவர் மாரடைப்பால் மரணமடைந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. வடமராட்சி கொற்றாவத்தை சவரவாடுவைச் சேர்ந்த சின்னையா யோகராசா (வயது-44) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே மரணமாகியுள்ளார்.

நேற்று முன்தினம் காலை 10.00 மணிக்கு தனது மாமனாருடன் வெளிநாடு செல்வதற்கு பேருந்தில் கொழும்பு சென்ற வேளை இரவு 7.30 மணியளவில் பேருந்தில் மயக்கமடைந்த நிலையில் நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது அவர் மரணமடைந்து விட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதனபோது இவருடைய அடையாள அட்டை மற்றும் பணம் அடங்கிய கைப்பையும் தவறியுள்ளது.(116)


## கண்ணீர் அஞ்சலி



அமரர்

சி.நாராயணபிள்ளை

(ஜெயந்திநகர் – கிளிநொச்சி)

இது-
விதியாகிப் போன முடிவு!
இதற்கு எவரும்
விதிவிலக்கல்ல.
நெஞ்சுள் நினைவுகள் சுமந்தபடி...
இன்று
உங்களருகில் அனைவருமாய்
வாழ்வோடு ஒன்றித்து
இருப்பவர்க்கு
வழிகாட்டிச் சென்றவரே!
விழி நீர் சொரிந்து அஞ்சலிக்கின்றோம்
உங்கள் உறவுகளாய்
நாமும்.

(இ) தினமுரசு குடும்பம்.

## கண்ணீர் அஞ்சலி



சி.நாராயணபிள்ளை

(ஜெயந்திநகர் – கிளிநொச்சி)

எமது சக ஊழியர் நா.சிறிதரன் அவர்களின் அன்புத் தந்தையார் சி.நாராயணபிள்ளை அவர்கள் இறைபதம் எய்தியுள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவர்களது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

சாருஜன், ஜெகநாதன், கணேஸ், அன்ரன், ரவிதாஸ்

(C/1748)


# போராட்டத்தில் குதிக்க தாதியர்கள் முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை அரச தாதிய உத்தியோகத்தர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை சுகவீன லீவுப் போராட்டமொன்றை நடத்தவுள்ளதாக யாழ். போதனா வைத்திய சாலை அரச தாதிய உத்தியோகத்தர் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

அன்றைய தினம் அரச தாதிய உத்தியோகத்தர்கள் பகல் கடமைக்குச் செல்லமாட்டார்கள் என்றும் குறிப்பிட்ட அவர் அரச தாதிய உத்தியோகத்தர்களின் பல்வேறு கோரிக்கைகள் குறித்து அவர்கள் கடந்த காலங்களில் ஒருமணிநேர அடையாளப் பணிப்பகிஷ்கரிப்பை உடன் கொண்டுவந்தனர்.

இருந்தும் அரசாங்கம் இதற்கு செவிசாய்த்து கோரிக்கைகளை நிறைவேற்றாததனை அடுத்து இந்த சுகவீன லீவுப் போராட்டத்தில் குதிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (பா)


## மரண அறிவித்தல்



சி.நாராயணபிள்ளை

(ஜெயந்திநகர் – கிளிநொச்சி)

நுனாவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் இல 74 ஜெயந்திநகர் கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட சின்னட்டிப்பிள்ளை நாராயணபிள்ளை அவர்கள் 08.11.2012 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னட்டிப்பிள்ளை சின்னாச்சி ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், பாக்கியம் ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக்கணவரும், சரஸ்வதி, பசுபதிப்பிள்ளை, தம்பிராஜா, ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகேஸ்வரி (கணேசபுரம்), இந்திரபூவதி (இந்தியா) நகுலேஸ்வரன் (ஜெயந்திநகர்), நவரத்தினம் (கனடா), உதயகுமார் (ராசன் திருமகள் இலத்திரனியல் உரிமையாளர்), ஸ்ரீ பத்மநாதன் (கரைச்சி தெற்கு ப.நோ.கூ. சங்கம் கிளிநொச்சி), சிறிதரன் (தினமுரசு பத்திரிகை யாழ்ப்பாணம்), மனேகரரஞ்சன் (ஜெயந்திநகர்), மனோராஜினி (கணேசபுரம்), மனோராஜ் (அஞ்சலகம் கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற கோபாலரத்தினம், காலஞ்சென்ற சடாச்சரம், சத்தியராணி, சகுந்தலாதேவி, ஜெயசாந்தினி (ஆசிரியை கிளி / பாரதி வித்தியாலயம்), நீலலோஜினி (கிராம சேவையாளர் ஜெயந்திநகர்), புஸ்பகாந்தா, ஜெயவாணர், ஆகியோரின் அன்பு மாமனாரும், திருமாறன் (நோர்வே) மலர்விழி (நோர்வே), அஜந்தா, அனித்தா, லக்கீசன், பரணிதரன் (கனடா), வினோதரன், சுஜி (இந்தியா), நிசாந்தன் (முகாமைத்துவ பீட மாணவன் 3 ஆம் வருடம்) சரண்யா, திலக்சன், அஜந்தன், தனோஜன், கஜாளினி, பிரியாசினி, அகியோரின் அன்புப் பேரனும், ஓவியா, இந்துஜா, ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருநகர் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.74, ஜெயந்திநகர், கிளிநொச்சி.

(இ)

தகவல்
சிறிதரன் (மகன்)

## விசேட கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து கேபிள் ரீ.வி. ஒப்பரேட்டர்களுக்கான விசேட கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் யாழ். அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. எனவே இச் சந்திப்பில் அனைவரும் தவறாது சமூகமளிக்கவும்

கந்தசாமி கமலேந்திரன் (கமல்)
யாழ். மாவட்ட அமைப்பாளர்,
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி,
(ஈ.பி.டி.பி)

(R/085)

## நாளைய தினமுரசில்...

வே. அர்ச்சுணன் எழுதும் "விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள்" கட்டுரைத் தொடரின் 4 ஆம் பகுதி.





இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 நவம்பர் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.